கல்கி



KALKI ஜூன் 27, 1954 4 அணா


"வெண்மையான, சுத்தமான லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார்

எம்.வி.ராஜம்மா



இந்தியாவில் தயாரித்தது.



இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யௌவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"... அதனால்தான் என் வதனத்தை அழகாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 420-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 48 | 1954 ஜூன் 27 | ஜய வரு ஆனி 13

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜூன் 25உ முதல்
சென்னை
வெலிங்டன் • ஸ்ரீ கிருஷ்ணா
ராஜகுமாரி • உமா • லக்ஷ்மி
(பெரம்பூர்)
மற்றும் தமிழ்நாடெங்கும்
கதையிலே கருத்துக்கும்
ஆடல்களிலே கண்ணுக்கும்
பாடல்களிலே செவிக்கும்
இன்பம் தரும்
பெண்
AVM
புரொடக்ஷன்ஸ்

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 48

ஜயசந்திரனும் மீர்ஜாபரும்

பாரத நாட்டின் சரித்திரத்தில் அன்னியர்களிடம் இராணுவ உதவிகோரிப் பெறுவதென்பது பல முறை நிகழ்ந்திருக்கிறது. அதன் விபரீத பலன்களையும் இந்நாடு அநுபவித்திருக்கிறது. காட்டுமிராண்டித்தனத்தைக் கடவாத ஹூணர் என்னும் பயங்கர சாதியார் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது சில இந்திய மன்னர்கள் தங்களுடைய சொந்த விரோதங்களைத் தீர்த்துக்கொள்ள அது ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதி அவர்களுடைய உதவியைக் கோரினார்கள். தோரமாணன், மிகிரகுலன் என்னும் ஹூணத் தலைவர்கள் அந்நாளில் இந்தியாவில் செய்த அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பாலாதித்யன், யசோதர்மன் என்னும் இரண்டு தேசபக்தியுள்ள சிற்றரசர்கள் பெரும் பலம் திரட்டிப் பிரம்மப் பிரயத்தனங்கள் செய்து ஹூணரின் ஆதிக்யத்தை ஒழித்தார்கள்.

பின்னால், ஜயசந்திரன் என்னும் இராஜ புத்திர மன்னன் தன் சொந்த மருமகனாகிய பிருதிவி ராஜனின்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக, கோரி முகம்மதுவை உதவிக்கு அழைத்தான். கோரி முகம்மதுவின் இராணுவ உதவி ஜயசந்திரனுக்குக் கிடைத்தது. அதன் காரணமாகப் பின்னால் பல பயங்கரமான படையெடுப்புக்களுக்குப் பாரத நாடு ஆளாயிற்று. மூடத் தைமூர், பாபர், நாதிர்ஷா முதலியவர்கள் எல்லாரும் கோரி முகம்மதுவைப் பின்பற்றி இந்தியாவுக்கு வந்தவர்களே.

பல நூற்றாண்டு காலத்துக்குப் பிறகு பாரத நாட்டின் சரித்திரத்தில் மற்றொரு சகாப்தம் ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவுக்கு வியாபார நிமித்தமாக வந்தார்கள். வந்த இடத்தில், இந்நாட்டுத் தலைவர்கள் தங்களுடைய சொந்த விரோதங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்த ஐரோப்பிய நாட்டாரின் உதவியைக் கோரிப் பெற்றார்கள். சில மன்னர்கள் பிரிட்டிஷாரின் உதவியைக் கோரினார்கள்; இன்னும் சிலர் பிரெஞ்சுக்காரரின் உதவியைக் கோரினார்கள். இப்படி அயல் நாட்டாரின் உதவியைக் கோரியவர்களிலே சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றவன் வங்காளத்து மீர்ஜாபர் என்பான். இவன் அப்போதிருந்த வங்காள நவாப்பை ஒழித்துக் கட்டித் தான் அப்பதவியை அடைவதற்காகப் பிரிட்டிஷ் உதவியைக் கோரினான். அந்த உதவியினால் அவன் தாற்காலிகமாகப் பலனை அடைந்தான். ஆனால் பிரிட்டிஷ் உதவி அத்துடன் நின்று விடவில்லை.

பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் இந்தியாவில் தத்தம் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்றார்கள். இரு சாராரும் பெரும்பாலும் இந்தியப் போர் வீரர்களைக் கொண்டே தங்கள் சாம்ராஜ்யப் போரை நடத்தினார்கள். அச்சமயம் பிரிட்டிஷாரின் பக்கம் அதிர்ஷ்ட தேவதை இருந்தபடியால், பிரிட்டிஷார் வெற்றிபெற்றார்கள். ஓர் இந்திய அரசனுடைய உதவிக்காக இன்னொரு இந்திய அரசனுடன் போர் நடத்திக் கொண்டே வந்து, பிரெஞ்சுக்காரர்களையும் முறியடித்து, இந்தியா தேசம் முழுவதையும் தங்கள் ஆதிக்யத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள்.

வர்த்தக நிமித்தமாகச் சரக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு இந்தியா சென்றவர்கள் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்து விட்டதைக் கண்டு பிரிட்டிஷ் சாதியே திகைத்துப் போயிற்று. பல வருஷங்களுக்குப் பிறகுதான் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு விக்டோரியா மகாராணியை இந்தியாவின் சக்கரவர்த்தினி ஆக்கினார்கள்.

சரித்திரம் கண்டிராத பிரிட்டிஷ் சாதியின் இந்த அரும் பெரும் சாதனை இந்திய மன்னர்கள் பிரிட்டிஷாரிடம் இராணுவ உதவி கோரியதிலிருந்து தான் ஆரம்பித்து நடந்தேறியது.

"சரித்திரம் திரும்புகிறது" என்று ஆங்கிலத்தில் சொல்லுவதுண்டு. அதாவது சரித்திரத்தில் ஒருதடவை நடந்தது போலவே மறுபடியும் நடப்பதுண்டு. ஒரு சரித்திர

நிகழ்ச்சியினால் சேர்ந்த மோசமான பலாபலன்களை யெல்லாம் நன்கு தெரிந்திருந்துங்கூட, ஜனங்கள் மறுபடியும் அதே தவறினை அதே முறையில் செய்வதுண்டு.

நிகழும் 1954-ம் வருஷத்தில் பாகிஸ்தான் சர்க்கார் அமெரிக்காவிட மிருந்து இராணுவ உதவியைக் கோரிப் பெற்றிருப்பது "சரித்திரம் திரும்புகிறது" என்பதற்கு உதாரணமாகி விடுமோ என்று பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் உள்ள தீர்க்க யோசனைக்காரர்கள் பலர் கவலையுறுகிறார்கள். இதற்குப் பொறுப்பாக உள்ள பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள் ஜய சந்திரன்-மீர்ஜாபர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகையினாலேயே அச் செயலைக் கண்டிக்கிறார்கள். நேருஜி முதலிய பாரதத் தலைவர்கள் மட்டுமல்ல; பாகிஸ்தானிலேயே கான் அப்துல் கபார்கான் முதலியவர்கள் கண்டிக்கிறார்கள்.

ஆயினும் நம்மில் கல்வியறிவு வாய்ந்தவர்கள் கூடச் சரித்திரத்தின் பாடங்களை நன்கு அறிந்து கொள்ளவில்லை யென்பதற்கு அத்தாட்சி சென்ற வாரத்தில் நமக்கு வந்த ஒரு கடிதத்திலிருந்து கிடைத்தது. அந்தக் கடிதம் வருமாறு :—

"பீரங்கிக்குப் போஜனம்" என்ற 13-ம் தேதி "கல்கி" தலையங்கத்தைப் படித்தேன். ஒரு தமிழ்ப் பத்திரிகை செய்திகளை இவ்வாறு திரித்து ஒரு சார்பு நோக்குடன் எழுதுகிறதே என்ற வருத்தத்துடன் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். ஜனநாயகம், பாகிஸ்தானில், அமெரிக்க ராணுவ உதவி கிடைக்கும் என்று கனவில் நினைப்பதற்கு முன்பே நூறு தடவை குட்டிக் கரணம் போட்டிருக்கிறது. சிந்து மந்திரி சபை கலைக்கப் படும் போது அமெரிக்காவா பின்னால் இருந்தது?

ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் "வட கொரியா ஆக்கிரமிப்பாளர்" என நிச்சயம் செய்து போரில் இறங்கிய பொழுது ருஷ்யாவும் சைனாவும் வட கொரியர்களுக்கு ராணுவ ஆயுத உதவி அளித்ததை மறந்து விட்டீர்களா?

இப்பொழுதுதான் இந்தோ சைனாவில் "வியட் மின்" ஆயுத, விமான உற்பத்திச் சாலைகள் வைத்திருக்கிறதா? அதன் ஆயுதங்கள் முற்றிலும் ருஷ்ய, சைனா சப்ளைகள்தான் என்பது உலக மறிந்தது. அதைப் பற்றி ஒரு வார்த்தை காணோமே? 'கிரம்ளின்' உலக ஏகாதிபத்தியத்துக்காக இந்தோ சீனரும், சீனரும், கொரியரும் பலியாவதைப் பற்றி உங்களுக்குக் கவலையே தோன்றவில்லையா? ருஷ்யா, ஜினிவாவில் ஐக்கிய நாடுகளை ஏளனம் செய்து பேச்சு வார்த்தைகளைத் தாமதப் படுத்தி முறிய வைப்பதில் முனைந்திருக்கிறதே, அதைப் ... கம்யூனிஸ்ட்

கொண்டால் சுதந்திரம் என்பதைக் கனவில்கூட நினைக்க முடியாது என்பதை உணருகின்றனர் என்று கருதித்தான் அமெரிக்கா உதவிசெய்கிறது.

இக்காலத்தில் இருவல்லரசுக் கட்சிகளில் எதையும் தைரியமாக எதிர்த்து எழுத வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு இருந்தால் இவ்வாறு அமெரிக்காவை மட்டும் நீங்கள் தாக்கி எழுதியிருக்க மாட்டீர்கள். கம்யூனிஸ்டுகளிடம் இப்பொழுதே தங்களுக்குப் பயம் வந்து விட்டதா? தைரியமாக இருந்தால் அமெரிக்க உதவியோ, அல்லது வேறு எந்த நாட்டின் உதவியோ இல்லாமல் இந் நாட்டில் 'கிரம்ளின் ஏகாதிபத்தியம்' இறங்க விடாமல் செய்யலாம்.

திருச்சிராப்பள்ளி — ஆர். கிருஷ்ணஸ்வாமி
14—6—54 — பி. எஸ்ஸி., ஏ. ஸி. ஏ.

இம்மாதிரி ஆங்கிலம் படித்த அறிவாளியான நேயர் ஒருவர் எழுதி யிருக்கிறார். இதிலிருந்து இந்திய சரித்திரத்தின் பாடங்கள் நம்மவர்களின் உள்ளங்களில் நன்கு படிய வில்லை என்று தான் முடிவு செய்ய வேண்டி யிருக்கிறது.

மேற்படி கடிதத்தில் அடங்கிய ஒரு முக்கியமான அம்சத்தைப் பற்றிச் சொன்னால், மற்ற அம்சங்களுக்கெல்லாம் பதில் சொன்னதாகும்.

"இந்தோ-சைனாவிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் போகாமல் போரிட்டுக் கொண்டிருப்பதற்குக் காரணம், அந்த நாடு அநியாயமாகக் கம்யூனிஸ்ட் ஏகாதிபத்தியத்துக்கு இரையாகி விடப் போகிறதே என்ற கவலைதான்" என்று நமது நேயர் குறிப்பிட்டிருக்கிறார்; இதற்கு அமெரிக்கப் பிரமுகர்களின் கூற்றை அத்தாட்சியாக எடுத்துக் காட்டுகிறார்.

நல்லது; நாம் நமது நேயரை ஒன்று கேட்கிறோம்.

பிரஞ்சுக்காரர்கள் புதுச்சேரியிலிருந்தும் காரைக்காலிலிருந்தும் மாஹியிலிருந்தும் போக மாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்கிறார்களே? இதற்குக் காரணம் என்ன?

புதுச்சேரி-காரைக்கால்-மாஹி முதலிய பகுதிகளைக் 'கிரம்ளின்' ஆதிக்கத்திலிருந்து அதாவது ருஷிய ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து பாதுகாப்பதற்காகத்தான் போக மறுக்கிறார்களா!

ருஷியர்களிடமிருந்து புதுச்சேரியைப் பாதுகாப்பதற்குத்தான் புதுச்சேரியைச் சுற்றி அகழி தோண்டிக் கொண்டிருக்கிறார்களா!

நண்பர் சொல்லும் காரணம் புதுச்சேரி—காரைக்காலுக்குப் பொருந்தாது என்று அவரே ஒப்புக் கொள்வார்.

ஆகவே, அந்தக் காரணம் இந்தோ-சைனாவுக்கும் பொருந்தாது.

இந்தோ-சீனாவில் இப்போது நடக்கும் போர் பல காரணங்களைக் கொண்டதா யிருக்கலாம்.

அம்மாதிரி விபத்து பாகிஸ்தானுக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமே யென்று கவலைப்படுகிறோம்.

பாகிஸ்தானுக்கு வடக்கே ஆப்கானிஸ்தான் இருக்கிறது. சோவியத் ருஷியாவின் எல்லையிலேயே இருக்கிறது. ஆனால் ஆப்கானிஸ்தானத்தை ருஷியர்கள் ஆக்கிரமித்து விடவில்லை.

ஆப்கானிஸ்தானத்துக்குக் கீழேயுள்ள பாகிஸ்தானுக்கு இப்போது ருஷியாவிடமிருந்து பாதுகாப்பு வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது!

ஒன்றுமே இல்லை. ஆனால் அமெரிக்க இராணுவ உதவியைப் பாகிஸ்தான் கோரிப் பெற்றால் அதுவே கம்யூனிஸ்ட் ருஷியாவையும் சீனாவையும் பாகிஸ்தானில் தலையிட அழைக்கும் காரியமாகும்.

ருஷியா எங்கேயோ இருக்கிறது; அமெரிக்கா வேறு எங்கேயோ இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளும் தத்தம் தேசங்களுக்கு அபாயம் இல்லாமல் கொரியாவில் பலப் பரீட்சை நடத்தியது போல் பாகிஸ்தானில் அந்தப் பரீட்சையை நடத்தத் தொடங்கலாம். ஏன்! ஹைட்ரஜன் குண்டைப் போட்டுப் பார்ப்பதற்கே பாகிஸ்தானைத் தேர்ந்தெடுக்கலாம்.

பக்கத்திலுள்ள பாகிஸ்தானில் நடக்கும் விபரீதங்கள் நமது பாரத நாட்டையும் பாதிக்கும் அல்லவா!

“கம்யூனிஸ்டுகளிடம் உங்களுக்குப் பயமா!” என்று நமது நிருபர் கேட்கிறார். மடியில் கனம் இருந்தால்தான் வழியில் பயம் உண்டு என்பது தமிழகத்துப் பழமொழி.

அமெரிக்காவைப் போன்ற பணக்கார நாடுகள் கம்யூனிஸ்டுகளுக்குப் பயப்படுவது நியாயம். உண்மையில், அமெரிக்கா தேசம் முழுவதுமே இப்போது கம்யூனிஸ்ட் பீதியில் ஆழ்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது காரணமாக, அநாகரிகமான ஒற்றர் வேட்டைகள் அந் நாட்டில் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ருஷியாவிடம் பயம் காரணமாக அமெரிக்காவிலிருந்து பல்லாயிரம் மைல் தூரம் சென்று பாதுகாப்பு அரண்களை நிறுவிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவைப் போன்ற ஏழைத் தேசம் கம்யூனிஸ்ட் ருஷியாவுக்குப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. கம்யூனிஸ்டுகளுக்கு நாம் பயப்படுவதற்குரிய காரணமும் இல்லை.

ஆனால் நாமும் பாரத மக்கள் எல்லாரும் கவலைப்பட வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது.

ஜயசந்திரன்—மீர்ஜாபர் பரம்பரையை யொட்டிப் பாகிஸ்தான் அரசியல் தலைவர் அமெரிக்காவின் இராணுவ உதவியைக் கேட்பதினால், பாகிஸ்தானும் பாரத நாடும் மறுபடியும் இரு வல்லரசு

லட்சத்தில் ஒருவர்!

கிண்டி ராஜபவன் தோட்டத்தில் நிறுவப் பெறும் காந்திமகான் கீர்த்தி மண்டபத்துக்கு நன்கொடைகள் கோரிச் சென்னை கவர்னரும் ராஜாஜியும் வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த வேண்டுகோள்களின் பயனாக இது வரை காந்தி மகானுடைய பக்தர்கள் சுமார் ஆயிரம் பேர் நன்கொடை உதவி யிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் ஒவ்வொரு ரூபாய் வீதம் அனுப்பி யிருக்கிறார்கள்.



ஆயிரம் பேர் அனுப்பியது போதாது. குறைந்த பட்சம் ஒரு லட்சம் காந்தி பக்தர்கள் நன்கொடை அனுப்பினால்தான் காந்தி மண்டபத் திருப்பணி பூர்த்தியாகும்.

அந்த லட்சம் பேரில் தாங்கள் ஒருவராக இருக்க விரும்ப வில்லையா?

இதைப் படிப்பவர்கள் வாலிபர்களாயினும், வயோதிகர்களாயினும், தாய்மார்களாயினும், கன்னிப் பெண்களாயினும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாயினும், ஆசிரியர்களாயினும், வியாபாரிகள் – விவசாயிகள் – தொழிலாளிகளாயினும் குறைந்த பட்சம் ஒரு ரூபாய் காந்தி மண்டபத் திருப்பணிக்கு உதவ முடியாதவர்கள் இருக்க முடியாது.

வசதியுள்ளவர்கள் இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், நூறு ரூபாய் அல்லது ஆயிரம் ரூபாய் அனுப்பி வைப்பதும் மிகையாகாது.

தங்கள் காணிக்கையை உடனே அனுப்பி வைத்து இந்த ஆண்டுக்குள் காந்தி மண்டபத் திருப்பணி பூர்த்தியாவதற்கு உதவி செய்யுங்கள். லட்சத்தில் ஒருவராக இருங்கள்!

நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம்: சென்னைக் கவர்னர் ஸ்ரீபிரகாசா, (காந்தி மண்டப நிதி), ராஜ்பவன், கிண்டி, சென்னை.

களின் ஆதிக்கப் போர்க்களம் ஆகாமலிருக்கவேண்டுமே யென்று கவலைப்படத்தான் வேண்டும்.

இருநூறு வருஷம் அன்னியர்களுக்கு அடிமையாக இருந்த பிறகு காந்தி மகானின் தலைமையில் அஹிம்சைப் போர் நடத்திச் சுதந்திரம் அடைந்தோம். அவ்விதம் அரிதில் பெற்ற சுதந்திரம் மறுபடியும் பறி போய்விடப் போகிறதே என்ற பயம் நமக்கு இருக்கத்தான் இருக்கிறது. இந்தியர்கள் எல்லாருக்கும் இருக்கவேண்டும்.

அயல் நாட்டு இராணுவ உதவியைக் கோரிப் பெறுவது, பெற்ற சுதந்திரத்தை இழப்பதற்கு அடிகோலுவதாகும். இந்தியாவின் பழைய சரித்திரமும், தற்காலத்திய உலக நிகழ்ச்சிகளும் இதை நமக்கு அறிவுறுத்துகின்றன.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ உதவி செய்ய முன் வந்திருப்பதால், அமெரிக்காவை நாம் கண்டனம் செய்ய நேர்ந்தது.

அவ்விதமின்றி பாகிஸ்தானுக்கு ருஷியாவோ சைனாவோ இராணுவ உதவிசெய்ய முன் வந்திருந்தால், அந்த நாடுகளை நாம் கண்டித்திருப்போம்.

தென் கொரியாமீது வடகொரியா ஆக்கிரமித்தபோது, வடகொரியாவை நாம் கண்டித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

அம்மாதிரியே, நேருவின் எச்சரிக்கையைப் பொருட் படுத்தாமல் அமெரிக்கப் படைகள் 38-வது அட்ச ரேகையுடன் நில்லாமல் மேலே வடகொரியாவில் படை யெடுத்துச் சென்ற போது, அமெரிக்கர்களின் செயலையும் நாம் கண்டிக்க நேர்ந்தது.

நாம் கண்டனம் செய்வதினாலோ, ஆதரிப்பதனாலோ உலக நிகழ்ச்சிகள் மாறிவிடப் போவதில்லை யென்றாலும், உலக அரசியலைப் பற்றிய வரையில் இந்திய மக்களின் கருத்து தெளிவாக இருக்க வேண்டியது அவசியம் அல்லவா!

ஆம்; உலக நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் நன்கு ஆராய்ந்து தெளிவுடனே இருந்தால்தான், இந்தியாவின் சுதந்திரத்துக்கு நேரக்கூடிய அபாயங்களைச் சமாளிக்க முடியும்.

நமக்கு அமெரிக்க இராணுவ உதவியும் வேண்டாம், கிரம்ளின் இராணுவ உதவியும் வேண்டாம் என்று உறுதியுடன் இருக்க முடியும்.

பழைய ஜயசந்திரன்-மீர்ஜாபர் பரம்பரையில் வந்தவர்களாயினும், அவர்கள் செய்தது போன்ற பெருந் தவறுகளை நாம் செய்யாம லிருக்கலாம்.

காந்தி மகான் நமக்கு அளித்த சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

புதுச்சேரி போர்முனை ஆகுமா?

பிரஞ்சுத் துருப்புகளும் அமெரிக்கப் போர்த் தளவாடங்களும் புதுச்சேரியில் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன.

புதுச்சேரி எல்லை நெடுகிலும் பிரஞ்சுக்காரர்கள் போருக்குப் பூர்வாங்கமான அகழிகளை வெகு மும்முரமாக வெட்டி வருகிறார்கள்.

பாரத நாட்டில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக, புதுச்சேரியைப் போர் முனையாக உபயோகிக்கப் பிரஞ்சுக்காரர்கள் முயன்று வருகிறார்கள்.

இவ்வாறு பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களிலிருந்து செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அதாவது இந்தியாவுக்கு வெகு தொலைவில் கொரியாவிலும் இந்தோ சீனாவிலும் இருந்த போரை, வல்லரசுகளுள் முக்கிய ஸ்தானம் வகிக்கும் அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்க முன் வந்ததன் மூலம் இந்தியாவின் எல்லையில் இழுத்துக் கொண்டு வந்தது.

இப்போது இந்திய எல்லைக்கு உள்ளேயே இழுத்துக் கொண்டு வந்து விட்டது எனலாம்!

இதற்குமுன் பல தடவைகளிலும் பண்டித ஜவாஹர்லால் நேருவின் தீர்க்க தரிசனம் உண்மையாகியது போல் இந்தத் தடவையும் உண்மையாகி விட்டது.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் ராணுவ ஒப்பந்தம் ஏற்பட்டபோது, ஜவாஹர்லால்ஜி கூறிய வார்த்தைகளை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது.

பாகிஸ்தானின் தற்காப்புக்காகவே அந்த நாட்டுக்கு இராணுவ தளவாடங்கள் அனுப்பத் தீர்மானித்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

பாகிஸ்தான்மீது வெளி நாடுகள் ஏதாவது படை யெடுத்தால், அதை எதிர்த்துத் தடுக்கப் பாகிஸ்தானுக்குப் பலம் இருக்க வேண்டும் என்பதே அமெரிக்கா—பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தத்தின் நோக்கம் என்று அமெரிக்க சர்க்காரும் பாகிஸ்தான் சர்க்காரும் பசப்பினார்கள்.

மேற்படி இராணுவத் தளவாட பலத்தை பாகிஸ்தான் துஷ்பிரயோகம் செய்யாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று நேருஜி அப்போது கேட்டார். இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்ள முனைந்துள்ள பாகிஸ்தானால் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படும் என்று எச்சரித்தார்.

அவ்விதமே இப்போது பாகிஸ்தான் சர்க்காரின் இராணுவ பலத்தினால் கிழக்கு வங்காளத்தில் ஜனநாயகம் செத்து விட்டது; பொது மக்களின் தீர்ப்பைப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர் குப்பையில் போட்டு விட்டார்கள்.

அது போலவே, அமெரிக்கர்களிடம் போர்த் தளவாட உதவி பெற்ற பிரஞ்சு சர்க்கார், அந்தத் தளவாடங்களை இப்போது இந்தியாவுக்கு விரோதமாக உபயோகிக்க முற்பட்டிருக்கிறார்கள்.


பிரஞ்சுத் துருப்புகளுடன், "பிரான்சுக்கு அமெரிக்கா கடனாக அளித்த பாதுகாப்பு யுத்த தளவாடங்கள்" என்று எழுதப்பட்ட, யந்திர பீரங்கிகள் வெடி குண்டுகள் முதலிய போர்த் தளவாடங்கள் அடங்கிய முப்பத்தொரு பெட்டிகள் புதுச்சேரியில் வந்து இறங்கி யிருக்கின்றனவாம்.

அவை ஜனநாயகத்தைத் தகர்ப்பதற்காக, பிரஞ்சு இந்தியப் பொது மக்கள் அளித்த தீர்ப்பை மாற்றி, அவர்களுடைய சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வதற்காக வந்திருக்கின்றன. ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துத் தான்தோன்றித்தனமான ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக வந்திருக்கின்றன.

இவ்வாறாக, உலகம் முழுவதும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே தங்களுடைய இலட்சியம் என்று பறை சாற்றும் அமெரிக்க சர்க்கார் அனுப்பும் போர்த் தளவாடங்கள் ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதற்காக உபயோகிக்கப் பட்டு வருகின்றன.

"அமெரிக்கா அளிக்கும் போர்த்தளவாட உதவியைத் துஷ்பிரயோகம் செய்யும் நாடுகள் மீது தான் எத்தகைய கடுமையான நடவடிக்கைகளை

சர்வம் 'கமிட்டி' மயம்



நமது சுதந்திர சர்க்கார் ஒரு காரியத்தில் பழைய பிரிட்டிஷ் சர்க்காரையும் மிஞ்சி விட்டார்கள்! கமிட்டிக்குமேல் கமிட்டியாக நியமித்துக்கொண்டிருக்கிறார்கள்.

யும் எடுத்துக் கொள்ளத் தயங்க மாட்டேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐசன் ஹோவர், அமெரிக்கா-பாகிஸ்தான் ஒப்பந்தம் ஏற்பட்ட போது ஜவாஹர்லால்ஜிக்கு உறுதி கூறினார் அல்லவா!

அவ்விதம் உலகம் அறிய வாக்களித்த அமெரிக்க ஜனாதிபதி, இப்போது பாகிஸ்தானும் பிரான்சும் ஜனநாயகத்தை நசுக்குவதற்காக அமெரிக்கப் போர்த் தளவாடங்களை உபயோகிக்க முற்பட்டிருப்பதைக் குறித்து என்ன கடுமையான நடவடிக்கைகளைக் கைக்கொள்ளப் போகிறார் என்றே உலகம் எதிர்பார்த்து வரும்.

புதுச்சேரி எல்லையைச் சுற்றி, பிரஞ்சுக்காரர்கள் எதற்காக அகழிகளை வெட்டி வருகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

பிரஞ்சுக்காரர்களுடன் போர் புரிய இந்தியா விரும்பவில்லை. பிரஞ்சு இந்தியப் பிரச்னையைச் சமரசமாகவே தீர்த்துக் கொள்வோம் என்று இந்திய சர்க்கார் அடிக்கடி கூறிவருகிறார்கள்.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் சுதந்திரப் போரை நடத்தி வரும் பொதுஜனப் பிரதிநிதிகளும், சாந்தி வருந்த வழியிலிருந்து தாங்கள் பிறழப் போவதில்லை என்று சந்தேகத்துக்கு இடமின்றிப் பிரகடனப்படுத்தி யிருக்கிறார்கள்; மேற்படி உறுதியைச் செயலிலும் காட்டி வருகிறார்கள். குண்டர்களின் பலாத்காரச் செயல்களைச் சகித்து, சாந்துவிகமாகச் சுதந்திரப் போரை நடத்தி வருகிறார்கள். அப்படி யிருக்க யாருடன் போர் செய்வதற்காகப் பிரஞ்சுக்காரர்கள் இப்போது அகழிகள் வெட்டி வருகிறார்கள்!

ஒருபுறம் பாரிஸ் நகரில் இந்தியப் பிரதிநிதிகளுடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துகொண்டிருக்கும்போதே, மற்றொருபுறம் பிரஞ்சு சர்க்கார் துருப்புகளையும் போர்த்தளவாடங்களையும் இரகசியமாகப் புதுச்சேரிக்கு அனுப்பி விட்டார்கள்; போதாக் குறைக்கு அகழிகளும் வெட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

எனவே, இதிலிருந்து உண்மையான சமரசத்தில் பிரஞ்சு சர்க்காருக்கு நாட்டம் இல்லை என்பது தெரிந்து விட்டது அல்லவா! பாரிஸ் பேச்சு பிரஞ்சு சர்க்காரின் காலம் கடத்தும் வித்தை என்பது அம்பலமாகி விட்டது அல்லவா!

அறிஞர்கள் செய்ய அஞ்சும் காரியத்தை அறிவிலிகள் மூர்த்தண்யமாகச் செய்ய முற்படுவார்கள் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

பிரிட்டிஷார் இந்தியாவில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த பரந்த சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக்கூட அகழிகளை வெட்டி ஆர்ப்பாட்டம் செய்ய வில்லை.

ஒருவேளை பிரஞ்சு சர்க்காரின் கௌரவம், காலனி ஆட்சி முறை, மண்ணாசை முதலியன புதையுண்டு போவதற்கு மேற்படி அகழிகள் உபயோகமாக இருக்கலாம்!

சுமார் நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன் வாடர்லூ போர்முனையில் இருந்த அகழிகள் ஐரோப்பிய சரித்திரத்தை மாற்றுவதற்கு, பிரஞ்சு சாம்ராஜ்யத்தின் முடிவுக்கு, வீர நெப்போலியனின் படுதோல்விக்குக் காரணமாக இருந்ததாய்ச் சரித்திரம் கூறுகிறது அல்லவா!

அது போலவே, "புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களால் தோண்டப்பட்ட அகழிகளே இந்தியாவில் பிரஞ்சு ஆதிக்கத்தின் முடிவுக்குக் காரணமாக அமைந்தன" என்று எதிர்கால சரித்திராசிரியர்கள் கூறும்படி நேரலாம்!

<u>அட்டைப் பட விளக்கம்</u>

மண்ணுலகில் சொர்க்கம்

மனிதனுடைய வாழ்விலே எத்தனையோ பருவங்கள். அவைகள் எல்லாவற்றையும் விடப் பேரின்பம் பயப்பது இளமைப் பருவம்தான். அதற்கிணையான பருவம் ஒன்றில்லை.

சிறுவராக இருக்கும் போது குதித்து விளையாடுவதில் ஏற்படும் இன்பம் பின்னால் வாழ்க்கையில் எப்பொழுதுமே ஏற்படுவதில்லை என்று சொன்னால் சற்றும் மிகையாகாது!

ஒரு நோக்கம், ஒரு பயன் ஏதும் கருதாது, வெய்யிலிலும் மழையிலும் தம்பி தங்கைகளுடனும் அண்டை அயல் சிறுவர்களுடனும் விளையாடுவதில் உண்டாகும் தூய இன்பம் பின்னால் வாழ்க்கையில் ஏற்படுவது ஏது! பின்னால் நாம் புரியும் ஒவ்வொரு காரியமும் ஏதாவது ஒரு பயன் கருதியோ, அல்லது வேறு எவரையாவது திருப்திப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டோ செய்ய வேண்டி யிருக்கிறது. இத்தகைய நிலையில் பால பருவத்தில் பெற்ற தூய இன்பம் மீண்டும் பெற வழி கிடையாதா என்று உள்ளம் ஏங்குகிறது.

அப்படிப்பட்ட தூய இன்பம் பிற்கால வாழ்க்கையிலும் ஏற்படக் கூடும் என்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான். மீண்டும் சிறுவர் சிறுமியர் விளையாடுவதைப் பார்த்து மகிழ்ந்தால்தான் உண்டு. அது மிகச் சிறந்த வழி என்பதைக் கவிமணி அவர்கள் பின்வரும் பாடலில் மிக அழகாகச் சொல்லுகிறார்கள்:

> ஓடி விளையாடி உல்லாசமாய் நின்று
> பாடிக் கதைகள் பல சொல்லிக் — கூடிநம்
> மக்கள் பயின்று மகிழ்ந்துவரும் காட்சியந்நச்
> சொர்க்கந் திலுமுண்டோ சொல்!

சொர்க்கத்திலும் கிடைக்கக் கூடாத பேரின்பக் காட்சி இம்மண்ணுலகில் குழந்தைகள் நமக்கு அளிக்கிறார்கள்! அவர்கள் ஆட்டமும் பாட்டமும் சிறந்து விளங்குவதாக!

ஜூன் மாதம் முடியும் தறுவாயி லிருக்கிறது. இதற்குள் எல்லாப் பள்ளிக்கூடங்களும் திறந்து விட்டிருப்பார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் பழையபடி ஐந்து மணி நேரம் பள்ளியில் அடைந்து கிடக்க வேண்டியதுதான். ஆயினும் மாலை நாலரை மணிக்கு மேலாவது ஓடி விளையாட அனுமதித்திருக்கிறார்களே! அதற்கே நாம் நன்றி செலுத்த வேண்டியதாகத்தான் இருக்கிறது!

ஒரு பெண் தான் இந்தக் கோடை விடுமுறையில் விளையாடிய காட்சிகளை நினைத்துப் பார்த்துக் கொள்ளுகிறாள். அக் காட்சியை நம் "சந்திரா" இவ்வார அட்டைச் சித்திரமாகத் தீட்டி யிருக்கிறார்.

ஒரு கண்யமான பழக்கம் —

இது வாழையடி வாழையாக வந்தது!

இங்கிலீஷ் சைக்கிள் அண்டு மோட்டார் இம்போர்ட்டிங் கம்பெனி லிமிடெட், மதராஸ் — இவர்கள், இன்றல்ல, நேற்றல்ல, பல்லாண்டுகளாக நேர்மையே நோன்பாக நோற்று, தலை போனதும் கால் போனதும் தெரியாத அந்த யுத்த நாட்களிலாகட்டும் திரும்பின திசையெல்லாம் சமாதானம் சமாதானம் என்ற மங்கல ஒலி கேட்கும் இந்த நாளில் ஆகட்டும், என்றென்றுமே அந்த நோன்பினின்றும் வழுவாது தொண்டு புரிந்து வருகின்றனர். அவர்கள் விற்ற ஒவ்வொரு சைக்கிளும் அதை வாங்கின ஒவ்வொருவருக்கும் பரிபூரண திருப்தியைக் கொடுத்திருக்கிறது. அதன் காரணமாக இன்று சைக்கிள் உற்சாகிகளின் கூட்டமே நாடெங்கும் பெருகி விட்டது!



சைக்கிள் உற்பத்தி என்பது ஏதோ கிள்ளுக்கீரை சங்கதியல்ல. அது ஒரு நுட்பக்கலை; பொறி இயல் அதாவது என்ஜினீரிங் ஆற்றலும் உற்பத்தியில் கையாளப்படும் துல்லிய சாஸ்திரீய முறையும் அதில் செலுத்தப்படும் அபார கவனமுந்தான் சைக்கிளாக உருவெடுத்து வருகிறது. வெறும் ஆசைதோய்ந்த பொறுப்பற்ற புள்ளிகளிடமிருந்து உங்களுக்கு வரும் சைக்கிளில் இந்த கவனத்திற்கு இடமில்லை. ஒரு நுட்பப் பொருளை வினியோகிப்பவர்கள் வாழையடி வாழையாக ஒரு கண்யமான பழக்கமும் நேர்மையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சைக்கிள் விஷயத்தில் நல்ல அனுபவமும் ஞானமும் நிறைந்த

இங்கிலீஷ் சைக்கிள் அண்டு மோட்டார் இம்போர்ட்டிங் கம்பெனி லிமிடெட், மதராஸ்

உங்களுக்கு உற்ற துணை. சைக்கிள் வியாபாரத்தில் அவர்கள் கையாளும் கண்யமான பழக்கமே உங்களுக்கு உத்திரவாதம்.

தேச மக்களுக்கு வேண்டுகோள்

மூன்று வருடங்களுக்கு முன்பாக, 1951 மார்ச் மாதத்தில் பாரத மக்கள் தங்கள் வாழ்க்கையைத் திட்டமாக அமைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். நமது முதல் ஐந்தாண்டுத் திட்டம் அதிக உணவு உற்பத்தி, அதிக சாமான்கள் உற்பத்தி, சமூக சேவைகளின் அபிவிருத்தி, அதிக மக்களுக்கு உத்தியோகம் முதலிய இனங்களில் கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை ஏற்பட்ட முன்னேற்றம் கணிசமானதேயாகும். ஒரு உதாரணத்தைக் கூறினால் பல என்ற மாபெரும் முயற்சியில் ஏற்கனவே திட்டமிட்ட ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவாகி விட்டன. இப்பொழுது உணவுக்காக நாம் வெளியார் உதவியை நாடவேண்டாம். நிலையான போன்ற பிரும்மாண்டமான அணைகளும், பொகாரோ போன்ற மின்சார உற்பத்தி நிலையங்களும் நிர்மாணித்துள்ளோம். சிந்திரி போன்ற தொழிற்சாலைகள் ஸ்தாபித்து, சண்டிகர் போன்ற நகரங்களை அமைத்துள்ளோம். நமக்கு வேண்டிய ரயில் என்ஜின்களை சொந்தமாகவே உற்பத்தி செய்கிறோம். டெலிபோன் சாதனங்களும், விமானங்களும் சொந்தமாகவே பொருத்திவருகிறோம். சமூக அபிவிருத்தி திட்டங்களின் மூலமும், தேசீய விஸ்தரிப்பு சேவை மூலமும் கிராமிய சமுதாயத்திற்கு அஸ்திவாரம் அமைத்து விட்டோம்.

பெருவாரியான முயற்சி அவசியம்: இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலுங் கூட இன்னும் பல வகையிலும் முயற்சி எடுத்துக் கொண்டால்தான் பாக்கியுள்ள இரண்டு ஆண்டுகளில் நாம் உத்தேசித்த லக்ஷ்யத்திட்டத்தை பூர்த்திசெய்யமுடியும். இந்த முயற்சிக்கு ஏற்படும் செலவிற்கு இன்னும் சுமார் ஆயிரத்துமுன்னூறு கோடி ரூபாய் வேண்டியிருக்கும்.

நேஷனல் பிளான் டேன் நோட்டுகளின் தத்துவத்தைக் காட்ட ஒரு அரிய வாய்ப்பு. ஐந்தாண்டுத் திட்டம் பொதுமக்களின் திட்டம்தான். எனவே இம் முயற்சி வெற்றி பெறுவதற்கு மக்களும் தங்கள் பங்கை வழங்கித் தங்கள் கடமையை பூர்த்தி செய்யவேண்டும். உங்களுக்கும் எனக்கும்கூட இது ஓர் முக்கிய கடமை.

நேஷனல் பிளான் லோனுக்கு தாராளமாக கொடுங்கள்

(ரூ 1-க்கு 3.5% வட்டி; அது வருடத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்)

இதர விவரங்களுக்கு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா, அதைச்சார்ந்த ஷெட்யூல்ட் பாங்க், தி பாங்க் ஆப் மைசூர் லிமிடெட் இவற்றின் ஏதாவதொரு கிளை ஆபீஸிற்கு அல்லது சர்க்கார் டிரெஷரி அல்லது சப்-டிரெஷரியில் விசாரிக்கவும்.

நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகளை வாங்குக

(முடிவு பூர்த்தியாகும்போது ரூ 1-க்கு 4.5% வட்டி கிடைக்கும்)

இதர விவரங்கள் சேவிங்ஸ் பாங்க் அலுவல்களை வகிக்கும் போஸ்ட் ஆபீஸ்களின் மூலம் கிடைக்கும்.

திட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்

		லக்ஷியம் 1951-56 வரை திட்ட காலத்திற்கு	சாதனை 1953-54 வரை
உணவு		76-லக்ஷம் டன்கள்	60—70 லக்ஷம் டன்கள் (அதிக உற்பத்தி, மிஞ்சி வருகிறது)
நீர்ப்பாசனம் (பெரிய திட்டங்களால்)		8,533,000 ஏகர்கள்	3,556,000 ஏகர்கள்
மின்சார சக்தி		10,87 000 கிலோவாட்டுகள்	7,34,000 கிலோவாட்டுகள்
புதிய ரயில்பாதைகள்		870 மைல்கள்	447 மைல்கள்
நூல் துணிகள்		983 மில்லியன் கெஜங்கள்	1,163 மில்லியன் கெஜங்கள் (அதிக உற்பத்தி, மிஞ்சி வருகிறது)
சமூக அபிவிருத்திட்டங்கள் மற்றும் கிராம விஸ்தரிப்பு திட்டங்கள்		1,20,000 (கிராமங்கள்)	49,750 (கிராமங்கள்)
புதிய பள்ளிக்கூடங்கள்		49,695	39,733
புதிய ஆஸ்பத்திரிகள்		996	609

AC 564 TM

இந்தியாவின் எதிர்காலத்தில் முதலிடு செய்யுங்கள்

வாழ்வு பிறந்தது

ஞானம்

விடியற் காலை மூன்று மணி இருக்கும். அப்பொழுது வந்த ஆசாமி பதற்றத்துடன் "ரொம்ப அவசரம். உடனே புறப்பட வேண்டும்" என்றதும், டாக்டர் சுசீலா முகம் சுளிக்காமல் புறப்பட்டு விட்டாள். 'எங்கே! என்ன!' என்றுகூட விசாரிக்கவில்லை. அப்புறம்தான் தெரியவந்தது, பதினைந்து மைல் தூரம் ரயிலில் பிரயாணம் செய்துதான் அந்தக் கிராமத்தை அடையவேண்டும் என்று. சுசீலா பேசாமல் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். கூட வந்த ஆளும் ஏறினான். "அம்மா! நீங்கள் மகராசி. கடவுள் உங்களை நன்றாக வைக்கவேண்டும். நாலு டாக்டர் வீட்டில் போய்க் கதவைத் தட்டினேன். இரண்டு பேர் பதிலே சொல்லவில்லை. ஒருவர் எழுந்து வந்ததுமே, 'ஒரு தரம் வரவேண்டுமானால் நூறு ரூபாய் தர வேண்டும். ஆயுதக் கேஸானால் மேலே இருநூறு கொடுக்க வேண்டியிருக்கும். 'அட்வான்ஸ்' கொண்டு வந்திருக்கிறாயா?' என்று கேட்டார். நீங்கள் ஒருவர்தானம்மா ஆட்சேபனை சொல்லாமல் ஓடி வந்தீர்கள். உங்கள் நல்ல மனசுக்கும், கைராசிக்கும் அந்தப் பெண் பெற்றுப் பிழைக்கவேண்டும்" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

சுசீலா ஒன்றும் சொல்லவில்லை. அவள் மனம் மட்டும் சும்மாயில்லை. ஆமாம்! மற்றவர்களுக்கெல்லாம் இல்லாத சேவை மனப்பான்மை அவளுக்கு மட்டும் வந்துவிட்டதாக்கும்! எல்லோரையும் போல் சுயலாபம் பாராட்டிச் சம்பாதித்துச் சுகப்பட அவளுக்கும் கணவன், குடும்பம் என்றிருந்தால் அவள் மட்டும் இரவு பகல் பாராமல் ஓடி வந்து விடுவாளா! யாராவது வந்து கூப்பிட மாட்டார்களா; வீட்டை விட்டுத் தொலையமாட்டோமா என்று ஏங்கிக் கிடப்பாள். ஏகாங்கியாக அந்தத் தனி வீட்டில் இருப்பதே அவளை வேதனை செய்தது. அவள் யாருக்காகச் சம்பாதிக்க வேண்டும்! தற்கொலை செய்து கொள்ள மனம் வராமலே உயிர் வாழ்கிறாள். பூமிக்குப் பாரமாக இல்லாமல் பிறருக்கு உழைத்துத் தீர்த்து விடுவது என்று தீர்மானித்திருந்தாள்.

"அம்மா! ஸ்டேஷனுக்கு எஜமான் வண்டி அனுப்பியிருக்கிறார். வந்து ஏறிக் கொள்ளுங்கள்" என்றான் அவளை அழைத்து வந்தவன்.

வண்டி ஜல் ஜல் என்று சென்றது. காற்று ஜில்லென்று வீசியது மனசுக்கு ரம்மியமாக இருந்தது. வண்டி ஒரு பெரிய வீட்டு வாசலில் நின்றது. ஆள் முதலில் இறங்கிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டான். சுசீலா பின்னால் இறங்கினாள்.

"சாமி! லேடி டாக்டரையே அழைத்துக் கொண்டு வந்து விட்டேன், அம்மாவுக்கு எப்படி இருக்குங்க!" என்றான் அந்த வேலையாள்.

அதற்கு, "அப்படியேதான் இருக்கிறது!" என்று பதில் சொன்ன நபரை விளக்கு வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்த சுசீலா ஒரு கணம் தீயை மிதித்தவள் போல்தான் தவித்தாள். அந்த வாலிபனும்கூட ஏதோ காணாததைக் கண்டு விட்டது போல் துடித்தான். ஏதோ பேச வாயெடுத்தான்.

சுசீலா, "உம். நோயாளி எங்கே பார்க்கலாம்" என்றாள் கடுமையான முக பாவத்துடன்.

"பரமசிவம்! நான் டாக்டரை மாடிக்கு அழைத்துக் கொண்டு போகிறேன். நீ உன் வேலையைக் கவனி. கூப்பிடும்போது வா" என்று ஆளை அனுப்பி விட்டு அந்த வாலிபன் சுசீலாவிடம் பேசலானான். சுசீலா விரைந்து மாடிப் படியில் ஏறினாள்.

"சுசீலா......சுசீ...லா!" என்று நடுங்கும் குரலில் கூப்பிட்டான் வாலிபன். "நீங்கள் கீழேயே இருங்கள். உதவிக்கு யாராவது பெண் பிள்ளை இருப்பார்களே. அதுவே போதும்" என்று கூறிவிட்டு டாக்டர் சுசீலா நேரே அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

நாற்காலியில் 'தொப்'பென்று வந்து உட்கார்ந்தான் சீனு. 'சுசீலா! சுசீலா இன்று ஒரு டாக்டர்! பழைய சுசீலாவா இவள்!' சீனு உலக நினைவே இல்லாமல் பழைய நினைவில் லயித்து விட்டான்.

சீனு பெரிய மிராசுதாரின் பிள்ளை. சீனு படிப்புக்காகப் பட்டணத்திலே இருந்தான். அவனுக்கு ஹாஸ்டல் வாழ்க்கை பிடிக்காததால் வெளியில் அறை எடுத்துக் கொண்டு, ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டு படித்து வந்தான். சீனு குடியிருந்தது ஒரு வீட்டு மாடியறையில். கீழே யார் யார் இருக்கிறார்கள் என்று கூடச் சீனு கவனித்ததில்லை.

ஒரு தரம் லீவுக்கு ஊருக்குப் போகலாம் என்று மூட்டை கட்டிக் கொண்டிருந்தான். கதவு தட்டப்படும் ஓசை கேட்டுக் கதவைத் திறந்து 'யாரது!' என்றான். கண்ணீர் மல்க வாடிய முகத்துடன் ஒரு பெண் நின்றாள். அவளை முன் பின் பார்த்ததாக அவனுக்கு ஞாபகம் இல்லை.

"நீ யார்! என்ன வேண்டும்!" என்றான் சீனு.

"எங்கப்பாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. டாக்டரை உடனே அழைத்து வரவேண்டும்."

"நான் ஊருக்குப் போகணுமே. ரயிலுக்கு நேரமாகி விடுமே" என்று கூறித் தட்டிக் கழிக்க சீனுவையே பார்த்தபடி நின்றாள் அப்பெண். அவள் பரிதாப நோக்கு அவன் மனத்தை இளக்கியது. "சரி, நான் போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினான்.

டாக்டர் வந்து மருந்து கொடுத்து விட்டுப் போனார். சீனுவுக்கு அப்பொழுது வீட்டுக்காரர் ஊரில் இல்லை என்பது நினைவு வந்தது.

கீழே இன்னொரு பக்கத்தில் இருந்தவர்தான் டைபாயிட் ஜுரத்தில் படுத்திருந்தார். அவர் பெண்தான் சுசீலா. "நீங்கள் நல்ல சமயத்தில் உதவி செய்தீர்கள். நான் இந்த ஊருக்கு வந்து நாலு நாள்தான் ஆகிறது. எனக்கு ஊரில் யாரையுமே தெரியாது. நீங்கள் டாக்டரை அழைத்து வந்திரா விட்டால் திண்டாடிப் போயிருப்பேன்" என்றாள் நன்றியுடன்.

"உன் அம்மா எங்கே!" என்றான் சீனு.

"எனக்கு அம்மாவைத் தெரியவே தெரியாது. பிறந்ததுமே பெற்றவளை உருட்டி விட்ட என்னைப் பாட்டிதான் வளர்த்தாள். அவளும் போய் ஒரு மாசமாயிற்று. அப்பா என்னைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்" என்று கூறும்பொழுதே சுசீலாவுக்கு அழுகை வந்து விட்டது.

சீனுவின் மனம் பாகாய் உருகிற்று. பரிவும் இரக்கமும் அன்பாகப் பரிணமித்தது. சீனு விடுமுறைக்கு ஊருக்குப் போகவில்லை. அங்கேயே தங்கி விட்டான். ஓட்டலில் கணக்கு இருந்தாலும்

பாதி நாட்கள் அவனுக்குச் சசிலா பரிமாறி மகிழ்ச்சியுடன் உண்ணும் பாக்கியம் உண்டு.

சசிலா அன்று விருந்து வைத்திருந்தாள், சீனு ஊருக்குப் போகிறான் என்று. சசிலாவின் தந்தை சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குப் போய்விட்டார். ஊரெல்லாம் சுற்றி அலைந்து விட்டுச் சீனு வந்து சேர்ந்தான். சீனுவைப் பிரியவேண்டி இருக்கிறதே என்ற துக்கத்துடன் சசிலா மௌனமாகவே பரிமாறினாள்.

"சசி! உன்னால் எனக்கு நன்றாகப் படிக்கவே முடியவில்லை. பரீட்சையில் தவறத்தான் போகிறேன். இன்னும் ஆறு மாசம் கழித்து மறுபடியும் பரீட்சை எழுதணும்" என்றான்.

சசிலா மலர்ந்த முகத்துடன், "நல்லதாயிற்று. பரீட்சையில் தேறிவிட்டால் படிக்கிறதுக்கு இங்கே வருவீர்கள் இல்லையா!" என்று குதூகலித்தாள். சசிலாவின் சமையல் அன்று தேவாமிர்தமாக இருந்தது. இலையில் இரண்டு பலாச் சுளை களைப் போட்டபடியே, "இந்த ஊரில் பலாச்சுளை நன்றாகவே இல்லையே. பலாப் பழம் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று வாங்கினேன். நன்றாக இருக்கிறதா என்று தின்று பார்த்துச் சொல்லுங்கள்" என்றாள்.

குனிந்திருந்த சசிலாவின் கன்னத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டே, "இந்தப் பலாச் சுளை மாதிரி இருக்குமா!" என்றான் சீனு. சசிலா வெட்கத்துடன் உள்ளே ஓடிவிட்டாள்.

★

சீனு கையலம்பிக் கொண்டான். "சமையல் உள்ளே புகுந்து கொண்டு என்ன செய்கிறாய்!" என்று சீனுவும் உள்ளே நுழைந்தான். சசிலா விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

"சசி! அசடு! இப்படி எதற்கு அழுகிறாய்! நான் எங்கே திரும்பி வராத இடத்திற்கா போகிறேன்!" சசிலா அவன் வாயைப் பொத்தினாள். "அழாதே, சசி! அப்பாவிடம் சொல்லு. அவர் ஊருக்கு வந்து என் அப்பாவைப் பார்க்கட்டும். அதற்குள் நான் எல்லாம் ஏற்பாடாகச் சொல்லி வைக்கிறேன். அடுத்த மாதத்திற்குள் நம் கல்யாணம் நடந்து விடும். எங்கே சிரி!" என்று அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"ஊருக்குப் போனால் என்னை மறந்து..."

சீனு அவசரமாகக் குறுக்கிட்டு. "உன்னை மறப்பதா! இந்த ஜன்மத்தில் இல்லை, சசி! ஒருவேளை நீ மறந்தால் என்னவோ!" என்றான்.

"இல்லவே இல்லை. நான் மறக்கமாட்டேன். என் உடம்பைப் பொசுக்கினாலும் உங்கள் நினைவு அழியாது" என்று சசிலா கையடித்துக் கொடுத்தாள். சீனு ஊருக்குப் போனான்.

சசிலாவின் தந்தை சீனுவின் ஊருக்குப் புறப்பட்டார். சீனுவின் தந்தை ஒன்றுமே விசாரியாமல், 'ஏழைப் பெண்ணானாலும் இந்தப் பக்கத்துப் பெண்ணே போதும்' என்று விரட்டி விட்டார். நடுவில் பேச வந்த சீனுவையும் ஒரேயடியாக அடக்கி விட்டார்.

சீனு சசிலாவின் தந்தைக்கு ஆறுதல் கூறினான். "பயப்படாதீர்கள்; மெதுவாகச் சொல்லிப் பார்க்கிறேன். சம்மதித்தால் சரி. இல்லாவிட்டாலும் லட்சியமில்லை. உலகமே எதிராக நின்றாலும் கவலை இல்லை. ஒரு மாசத்தில் கொஞ்சம் பணம் ஏற்பாடு செய்து கொண்டு வந்து விடுகிறேன். பட்டணத்திலேயே கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன். சசிலாவைத் தைரியமாக இருக்கச் சொல்லுங்கள்" என்றான்.

ஒரு மாசம் கழித்துச் சீனு பட்டணத்திற்குப் புறப்பட்டான். மறக்காமல் சசிலாவுக்கும் பிடிக்கும் என்று ஒரு பலாப் பழத்தையும் எடுத்துக் கொண்டு சென்றான். வீட்டுக்காரர், "சசிலாவின் அப்பா செத்துப் போய்ப் பதினைந்து நாட்களாயிற்று. அந்தப் பெண் சாமானெல்லாம் விற்று விட்டு யாரோ சொந்தக்காரர்கள் ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்" என்றதும் சீனுவுக்கு இடி விழுந்தாற்போல் ஆகி விட்டது. ஒரு வாரம் பட்டணத்தில் அலைந்தான். சசிலா போன இடம் தெரிய வழியே இல்லை.

உடலும் உள்ளமும் சோர்ந்து போய் ஊர் திரும்பினான். கல்யாண ஏற்பாடுகள் பிரமாதமாக நடந்து கொண்டிருந்தன. அழகி கமலாவைச் சீனுவின் மனைவியாக்க நிச்சயித்திருந்தனர். தன் உணர்வே இல்லாமல் சீனு தந்தை சொன்னபடி ஆடிக்கொண்டிருந்தான். கமலா அவன் மனைவியாகி விட்டாள்.

நல்ல குலம், கோத்திரத்தில் பக்கத்து ஊரில் மாட்டுப் பெண் கொண்டு வந்து விட்ட திருப்தியுடன் கண்ணை மூடினார் சீனுவின் தந்தை. சீனுவின் ஆத்திரமெல்லாம் கமலா மீது திரும்பியது. எதற்கெடுத்தாலும் அவளிடம் எரிந்து விழுந்தான். சீனுவின் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்து பல நாட்கள் ஆயின.

கணவனின் கோபத்துக்குக் காரணம் புரியாமல் தவித்தாள் கமலா. அவன் மனத்தைக் குளிர்விக்க அவள் பட்ட சிரமம் கொஞ்சமில்லை. கணவனின் மனம் மாறும் என்ற நம்பிக்கையை அவள் இழந்து விட்டாள்.

இயற்கையின் நியதி யாரையும் விடுவதில்லை. கமலா கர்ப்பமானாள். சீனுவுக்கு அப்பொழுதும் மனம் இரங்கவில்லை. அவன் அறையை விட்டே வெளியே வருவதில்லை. கமலா பிரசவத்திற்குப் பிறந்தகம் போக மறுத்துவிட்டாள். பிறந்தகத்திலிருந்து யாரும் உதவிக்கு வருவதையும் கண்டிப்பாக மறுத்துத் தடுத்து விட்டாள்.

"சனியனே, ஏன் என் கழுத்தை அறுக்கிறாய்! இங்கே உனக்குச் செய்ய யார் இருக்கிறார்கள்! சுக்கச் சக்கமாகக் கவனிக்கவில்லை என்று என் பேரில் பழி போடவா இந்தப் பிடிவாதம்!" என்று கத்தினான்.

கமலா, "செத்தாலும் உங்கள் காலடியிலேயே தான் சாவேன். பிறந்தகம் போக மாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தாள்.

வேலைக்காரி மாரியம்மாதான் துணை. அவள் எத்தனையோ பிரசவம் பார்த்தவள்; அனுபவம் உள்ளவள் என்று சீனுவும் பேசாமல் இருந்து விட்டான். கடைசியில் மாரியம்மாவாலும் முடியாமல் போய் டவுனிலிருந்து டாக்டர் வரவேண்டியதாகி விட்டது. அந்த டாக்டர் சசிலா!

'சசிலா எப்படி டாக்டரானாள்! ஒரு கடிதம் போட்டிருக்கக் கூடாதா! எத்தனை யுகம் வேண்டுமானாலும் காத்திருப்பேனே! சசிலாவுக்குக் கல்யாணமாகி விட்டதா! கமலா இருந்தால் என்ன! அவளைத் தள்ளி வைத்து விட்டு...... சசிலா சம்மதிக்க மாட்டாள். அதைவிடக் கமலா பிரசவ வேதனை தாங்காமல் செத்துவிட்டால்...' சீனு அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

"டாக்டர்! இந்த வேதனை தாங்க முடியவில்லையே! செத்துப் போக ஏதாவது மருந்து கொடுத்து விடுங்களேன்! நான் இருந்து என்ன பிரயோஜனம்!" என்று கதறிக் கமலா டாக்ட

ளின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவளுக்கு நினைவு தவறி விட்டது.

மாரியம்மா, "என் தாயி! இந்தப் புருசனைக் கட்டிக்கிட்டு ஒரு சுகப்படலியே! ஒரு சிரிப்புண்டா, ஒரு பேச்சுண்டா! எந்நேரமும் எரிஞ்சு விழும் புருசனுடன் அவதிப்பட்டாளே. இந்தப் பிள்ளை அவள் சாவுக்கே வந்ததே" என்று ஓலமிட்டாள்.

"இந்தா! எதற்கு ஒன்றும் இல்லாததற்கு இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறாய்! நான் சொல்கிறபடி செய்" என்று அதட்டி விட்டுத் தன் வேலையில் மூழ்கினாள் டாக்டர். மிகவும் சிரமப்பட்டு, வெகு நேரம் போராடித் தாயையும் சேயையும் உயிரோடு மீட்டு விட்டாள். ஆண் குழந்தை பிறந்தது.

"டாக்டர்! என்ன குழந்தை!" என்றாள் கமலா ஆயாசத்துடன்.

"ஆண் குழந்தையம்மா. உங்கள் வீட்டுக்காரர் ரொம்ப சந்தோஷப் படுவார்" என்றாள் சுசீலா மென்று விழுங்கிக் கொண்டே.

"ஆமாம். நான் செத்தால்! டாக்டர், எனக்கு விஷம் கொடுத்து விடுங்கள், டாக்டர், நான் உயிரோடு இருப்பதால் அவருக்கு எள்ளத்தனை சுகமும் கிடையாது" என்று கமலா விம்மினாள்.

"பச்சை உடம்பு அதிர்ந்து கொள்ளும். அழக் கூடாது. சுகம், துக்கம் எதுவுமே நீடிப்பதில்லை. காலப்போக்கில் மாறத்தான் செய்யும். பிள்ளை பிறந்து விட்டான். உனக்கு என்ன குறைவு! இனி அவர் உன்னிடம் உயிராக இருக்கப் போகிறார், பார். போக்கிரிப் பயல் அப்பாவின் மனசை மாற்றி விடுவான்" என்று குழந்தையின் கன்னத்தைத் தடவியபடி கூறி, பின் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள்.

"உங்களுக்கு இன்னும் ஒரு மணி நேரம் கழித்துத்தானம்மா வண்டி. இங்கேயே குளித்துக் காப்பி, டிபன் சாப்பிட்டு விட்டுப் போகலாம். ஐயா சொல்லச் சொன்னார்" என்றாள் மாரியம்மா.

சுசீலா மறுக்கவில்லை. குளித்துவிட்டுச் சமையல்காரன் கொடுத்த காப்பி, டிபனைச் சாப்பிட்டு விட்டு அவள் கூடத்திற்கு வரவும், ஒரு ஆள் தலையில் ஒரு பெரிய பலாப்பழத்தை வைத்துக் கொண்டு பின் தொடரச் சீனு உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

"நல்ல சந்தோஷ சமாசாரம். பையன் பிறந்திருக்கிறான். மேலே போய்ப் பாருங்கள்" என்றாள் சுசீலா ஈரத் தலைமயிரை ஆற்றியபடியே.

அவள் முகத்தில் நிலவிய அமைதியையும், அழகையும் அள்ளிப் பருகுபவன் போல் சீனு அவளையே உற்றுப் பார்த்தான்.

"என்னைத் தெரியவில்லையா, சுசீ!"

"தெரியாமலென்ன! பட்டணத்தில் நாங்கள் குடியிருந்த வீட்டில் மாடியறையில் இருந்த சீனிவாசன் தானே நீங்கள்! கெட்டிக்காரப் பையன் என்று அப்பாகூட உங்களைப் பற்றி அடிக்கடி புகழ்வாரே!" என்றாள்.

"வேறு ஒன்றும் நினைவில்லையா சுசீலா!" என்று கேட்பதற்குள் சீனுவின் மனம் படாத பாடு பட்டு விட்டது.

சுசீலா பதில் சொல்லுமுன் சமையல்காரன் ஒரு வெள்ளித் தட்டில் பலாச் சுளைகளும், ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் தேனும் கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டுப் போனான்.

"பலாச்சுளையா! எனக்கு ரொம்பப் பிடிக்கும். என் கணவர் இருக்கிறாரே, அவருக்கு இதைக் கண்டாலே ஆகாது. தின்றால் வயிற்று வலி வந்து விடுகிறது. அவரே சாப்பிடாததை நான் மட்டும்

நின்று மகிழ்வானேன் என்று நானும் பலாக் கனை நின்பதை அறவே விட்டு விட்டேன்" என்றாள் கவிலா பிரமாத உற்சாகத்துடன்.

சீனுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்னது! கணவராமே! அவளுக்குக் கல்யாணமாகி விட்டதா! அடுத்த கணம், ஆமாம்..ஆண் பிள்ளையாகிய நானே காதலை மறந்து வேறொருத்தியின் கை பிடிக்க வேண்டி வந்து விட்டது. கவிலா— பேதைப் பெண் — எப்படித் தப்ப முடியும் என்று சமாதான எண்ணம் எழுந்தது.

ஆனால் இவள் செய்த சத்தியம்! 'என் உடலையே போக்கினாலும் உள்ளத்தில் உங்கள் நினைவு மறையாது' என்று வாய்வீரம் பேசினாளே! அந்தக் கவிலாவா இப்படி வேறு ஒருவனுக்காகத் தன் விருப்பத்தைத் தியாகம் செய்கிறாள்! கணவனைப் பற்றிப் பேசும் பொழுதே பெருமையால் பொங்கிப் பூரிக்கும் இவள் அவன் மீது எத்தனை பிரியம் வைத்திருக்க வேண்டும்! நிஜமாக என்னை மறந்து விட்டாளா! எப்படி முடிந்தது!...

கவிலா கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "சீனிவாசன்! நான் போய் வரட்டுமா? தூக்கக் கலக்கத்தில் அவரை எழுப்பிச் சொல்லி விட்டு ஓடி வந்தேன். அவர் காலையில் காப்பி, டிபன் சாப்பிட்டாரோ, இல்லையோ! நான் பக்கத்தில் இல்லாவிட்டால் அவருக்கு எதுவுமே இறங்காது. ஆபீசுக்குக்கூடப் போகாமல் வாசலிலேயே காத்திருப்பார். நான் வரட்டுமா!" என்று எழுந்தாள்.

'சீ, சீ! இவளுக்கு என்மீது துளிக்கூட அன்பு இல்லை. எல்லாம் ஒரே வேஷம். இந்த ராட்சசியை, நன்றிகெட்டவளை நினைத்து உருகி என் வாழ்வையும் நாசமாக்கிக் கொண்டு கமலாவின் வாழ்வையும் பாழாக்கினேன். நான் ஒரு முட்டாள். அன்பை மறக்கும் இப் பாதகிக்காக என் கமலாவை வெறுத்து ஒதுக்கினேன். கமலா எத்தனை பொறுமைசாலி!' சீனு, டாக்டரைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மாடி ஏறினான். கவிலா புன்னகையுடன் வெளியேறினாள்.

காரியஸ்தன் வண்டியைக் கட்டிக் கொண்டு நின்றான். ஸ்டேஷனை அடைந்ததும் பர்ஸிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டியபடி, "ஐயா தரச் சொன்னார்" என்றான்.

கவிலா, "ஐயாதான் கொடுத்து விட்டாரே! இன்னும் எதற்கு? நான் வாங்க மாட்டேன்" என்று ஆச்சரியப்படுபவள் போல் மறுத்து விட்டு ரயிலில் ஏறிக் கொண்டாள். காலை வண்டியில் கூட்டமே இல்லை. ரயில் புறப்படக் காத்திருந்தவள் போல் அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த துக்கமனைத்தும் தீரக் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள் கவிலா.

அதே நேரத்தில் சீனு, "கமலா! நான் பெரிய பாவி. அநியாயமாக உன்னை அலட்சியம் செய்து கொடுமைப் படுத்திவிட்டேன். என்னை மன்னித்து விடு கமலா. இனி நான் புதுப் பிறவி" என்று கண்ணீர் விட்டபடி மன்னிப்புக் கோரினான்.

"அந்த டாக்டரம்மா சொன்ன மாதிரியே இந்தப் போக்கிரிப் பயல் பிறந்ததுமே அப்பா மனசை மாற்றி விட்டானே!" என்றாள் கமலா

"டாக்டர் மகராஜியாக இருக்க வேண்டும்" என்று மனதுக்குள் வாழ்த்தியபடி, வெட்கமும், மகிழ்ச்சியும் கலந்த பார்வையால் கணவனை நோக்கிப் புன்னகை பூத்தாள்.

வெகு நேரம் அழுது ஓய்ந்தாள் டாக்டர் கவிலா. பூட்டியிருந்த வீட்டைத் திறக்கும்பொழுது பாரம் நீங்கிய அவள் மனம் சலனமற்றிருந்தது.

புதுமைப் படம்-பெண்

தமிழ் நாட்டுக்கு ஸ்ரீ ஏ. வி. மெய்யப்ப செட்டியார் பல அருமையான பேசும் படங்களை அளித்திருக்கிறார். அவற்றுள் எல்லாம் தலைசிறந்தது என்று சொல்லத் தக்க புதுமைப் படம் இந்த வாரத்தில் தமிழ் நாடெங்கும் திரையிடப் படுகிறது.

"வாழ்க்கை" என்னும் படத்தின் மூலம் தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்த குமாரி வைஜயந்தி மாலா, அதற்குப் பிறகு தமிழ்ப் படம் எதிலும் தோற்றம் அளிக்காமலிருந்து ஏ. வி. எம். புதிய படத்தில் கதா நாயகியாகக் காட்சி யளிக்கிறார்.

பாரதியார் தம்முடைய பல பாடல்களில் "புதுமைப் பெண்"ணுக்குப் போற்றி கூறி, பல்லாண்டு இசைத்திருக்கிறார் அல்லவா? அத்தகைய "புதுமைப் பெண்"ணினத்தின் பிரதிநிதியாக ராணி என்னும் பெயருடன் தோன்றி "ஆணுக்குப் பெண் தாழ்வென்று பேசும் வீணரை எதிர்ப்பேன்" என்று போர் முரசு கொட்டுகிறார் குமாரி வைஜயந்திமாலா. அவருடைய ஆடல், பாடல், நடிப்புத் திறமைகள் எல்லாம் "வாழ்க்கை" படத்தைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகவே இந்தப் "பெண்" என்னும் படத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன.

தென்னாட்டிலேயே நடிப்புத் திறமை மிக்கவர் என்று பெயர் வாங்கிய ஸ்ரீமதி அஞ்சலிதேவி, ராணியின் அருமைத் தோழியாக இப்படத்தில் தோன்றி, கற்பெனும் பொற்பணி பூண்டு, தமிழ் நாட்டுப் பெண் குலத்துக்குப் பெருமை யளிக்கும் முறையில் இப் படத்தில் நடித்திருக்கிறார்.

இந்த இரண்டு நடிகை நட்சத்திரங்களுடனே, ஆர். கணேசன், எஸ். பாலசந்திரன், கே. சாரங்கபாணி, வி. நாகய்யா, சகஸ்ரநாமம் முதலியவர்களும் நடித்து இப் புதுமைப் படத்தை ஒரே நட்சத்திர மயமாக ஜொலிக்கச் செய்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு ரா. வேங்கடாசலம் இப் படத்துக்குக் கதையும் வசனமும் எழுதி யிருக்கிறார்.

வருஷக் கணக்கில் உழைத்துப் பாடுபட்டு, ஏ. வி. எம். ஸ்டுடியோவின் சகல வசதிகளையும் பயன்படுத்தி, நிகழும் ஜய வருஷத்தில் இணையற்ற வெற்றியாகத் திகழுமாறு "பெண்" என்னும் படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

படத்தில் வரும் சில முக்கியமான பாத்திரங்களையும் அருமையான காட்சிகளையும் எதிர்ப் பக்கத்தில் கண்டு மகிழலாம்.

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பன் அவர்களுக்கும் மற்றும் அவருக்கு இப் படத் தயாரிப்பில் உதவியவர்கள் அனைவருக்கும் நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


பெண்

முச்சிங்கள முன்னணி!

கொழும்பு, ஜூன் 19.

சென்ற சில தினங்களாகக் கொழும்பில் ஒரு புதிய மாதிரியான இயக்கம் ஆரம்பமாகி வலுப் பெற்று வருகிறது. ஓடுகிறவனை விரட்டுவது எளிது என்பதைப் போல இவ்வளவு காலமும் நல்லெண்ணத்தை நம்பியிருந்த இந்தியாவை இலங்கை ராஜ தந்திரிகள் முடிந்த வரையில் விரட்டி உருட்டிக் கொண்டிருந்தார்கள். அசையாத இந்தியா யானை அசைய ஆரம்பித்து விட்டதால், அடுத்த படியாக என்ன செய்வதெனத் தோன்றாமல் திக்கு முக்காடுகின்றனர் இலங்கை ராஜீயவாதிகள். குறைந்த பட்சம் எட்டு லட்சம் இந்திய வம்சாவளியினரை யேனும் இலங்கையில் நிலைக்கச் செய்ய இந்திய அரசாங்கத்தின் புதிய விஸா சட்டம் பிரம்மாஸ்திரத்தைப் போல வேலை செய்து வருகிறது.

சட்ட ரீதியான போராட்டத்தின் மூலம் தர்ம நியாயங்களைக் கவிழ்த்து இந்திய வம்சாவளியினரை வெளியேற்றுவது அசாத்திய மென்பது இப்பொழுது தெரிந்து விட்டபடியினால், வகுப்புவாத விஷத்தைக் கக்கும் "முச்சிங்கள முன்னணி" என்ற ஒரு ஸ்தாபனம் இந்தியர்களிடையில் பீதியூட்டி அவர்களை விரட்ட முயற்சித்து வருகிறது. இந்தச் சங்கத்தினர் நாடெங்கும் பல கூட்டங்களை நடத்தி, இந்தியர் கடைகளைப் பகிஷ்கரிக்கும்படியும் அவர்களை வெளியேற்ற இயன்றதை யெல்லாம் செய்யும்படியும் பாமர மக்களைத் தூண்டி வருகின்றனர். பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் ஆவேசமாகவும் துவேஷமாகவும் இவர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் ஏற்கெனவே பல இடங்களில் விபரீதமான பலன்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டன.

முச்சிங்கள முன்னணியினால் தூண்டப்பட்ட சில சிங்களவர்கள் இந்தியர்களின் கடைகள் முன்னால் நின்று கொண்டு அங்கு சாமான்கள் வாங்கப் போகிறவர்களைப் பயமுறுத்துவதாயும், இதன் விளைவாகக் குழப்பங்கள் நடப்பதாயும் பரபரப்பான தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. பகிரங்க ரஸ்தாக்களிலும் பஸ், ரயில்வே நிலையங்களிலும் தமிழர்களை வாயில் வந்தபடி ஏசிப் பாட்டுகள் பாடிப் பிச்சை யெடுக்கும் ஒரு கும்பலும் இப்பொழுது தலை யெடுத்திருக்கிறது. இவர்கள் இந்தியர்களை மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தவர்கள் உள்படத் தமிழர் அனைவரையும் தூஷித்துக் கொடிய வகுப்பு வெறியை உண்டு பண்ணி வருகின்றனர்.


இந்த நிலைமையை அழுத்தமாகக் கண்டித்துச் சாவகச் சேரித் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. வி. குமாரஸ்வாமி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். வாச பர்மிட் முடிந்த இந்தியர்களை வெளியேற்ற வேண்டு மென்பதற்காக வகுப்பு வெறியைக் கிளப்புவது நாட்டுக்கே அபாயகரமான தென்றும், வகுப்புத் துவேஷம் தலை யெடுத்தால் அதன் விளைவு விபரீதமாயிருக்கு மென்றும் எச்சரித்து, இந்தத் துவேஷக் கூச்சலை முளையிலேயே கிள்ளியெறிய உடனே நடவடிக்கை யெடுக்க வேண்டு மென்று பிரதம மந்திரியை, திரு குமாரஸ்வாமி வலியுறுத்தி யிருக்கிறார். புத்த தர்மத்தைக் கடைப் பிடிப்பதாகக் கூறும் நாடு அந்த தர்மத்தை அனுசரித்து இந்தியர் பிரச்னையைத் தீர்க்க முற்பட வேண்டு மென்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

* * *

ஜினிவாவில் நடக்கும் சர்வதேசத் தொழில் ஸ்தாபன மகா நாட்டுக்கு இலங்கைத் தொழிலாளரின் ஏகப் பிரதிநிதியாகச் சென்றிருக்கும் ஸ்ரீ எஸ். தொண்டமான் அங்கும் இலங்கை இந்தியர் பிரச்னையைக் குறித்து எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. தொழில் ஸ்தாபனத்தின் குடியேற்றத் தொழிலாளர் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ தொண்டமான் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் இலங்கை இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை மறுக்கப்படுவதையும் சர்வதேச நியதிகளை யெல்லாம் இலங்கை புறக்கணிப்பதையும் உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தவண்ண மிருப்பதாய் "வீரகேசரி" பத்திரிகையின் ஜினிவா நிருபர் எழுதியிருக்கிறார்.

* * *

இலங்கை இந்தியர்கள் ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்து அதன் பலனாக வேலை நிறுத்தங்கள் நடந்தால் அந்த நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் இப்பொழுது முதற் கொண்டே முஸ்தீபுகள் செய்து வருகின்றதாம். பல



வில்ஸன்
பேனா
கீழ்க்கண்ட மாடல்
களில் கிடைக்கும்.
வாகோபில்
ஏரோபில்
ஸ்டட் பில்லர்
ஸெல்ப் பில்லர்
ட்ராப்பர் பில்லர்

Wilson

REGD

VacOfil Pen

பள்ளி வகுப்புகளில் வில்ஸன் வாகோபில் பேனா மிக இன்றியமையாததாக இருக்கும். வகுப்பு வேலைக்கும், வீட்டு வேலைக்கும் ஏற்ற வெகு சுகமான மசி ஊற்றுடன் வழவழப்பாக எழுதுவதால் எல்லா மாணக்கர்களிடமும் மிகப் பிரக்யாதி பெற்றிருக்கிறது. பல வருடங்களுக்கு திருப்திகரமாக சேவை யளிக்கிறது.

வில்ஸன் ஜூனியர் வாகோபில் (பிளாஸ்டிக்) அலாய் தோய்த்த நிப் ரூ. 3/12/-	வில்ஸன் மேஜர் வாகோபில் (செலுலாய்ட்) இரிடியம் தோய்த்த நிப் ரூ. 5/12/-	வில்ஸன் டிலக்ஸ் வாகோபில் (செலுலாய்ட்) 14 காரட் தங்க நிப்புடன் ரூ. 8/12/-	வில்ஸன் அட்மிரல் வாகோபில் (செலுலாய்ட்) 14 காரட்பெரிய தங்க நிப்புடன் ரூ. 12/8/-

Sole Distributors for India

KIRON & CO. LTD. 73-75, CHHIPI CHAWL, NEAR ZAVERI BAZAR, BOMBAY 2
BRANCHES IN CALCUTTA & MADRAS

சக்கரவர்த்தித் திருமகன்

9. தாடகை

அன்றிரவு சரயூ நதிக்கரையில் முனிவரும் ராஜ குமாரர்களும் புல் தரையில் படுத்துத் தூங்கினார்கள். படுப்பதற்கு முன் இரண்டு மந்திரங்களை விசுவாமித்திரர் உபதேசித்தார். 'பலம்' 'அதிபலம்' என்ற இரண்டு ரகசிய மந்திரங்களை உபதேசம் செய்து விட்டு, "இந்த மந்திரங்கள் ஜபித்தவனை எந்தத் தீங்கும் அண்டாது" என்று சொல்லி ராஜ குமாரர்களை ஆசீர்வதித்தார்.

அடுத்த நாள் காலை எழுந்து புறப்பட்டுப் போய் அங்க தேசத்தில் காமாச்சிரமத்தை அடைந்தார்கள். அங்கே வாசம் செய்து கொண்டிருந்த ரிஷிகளுக்கு ராம லக்ஷ்மணர்களை அறிமுகம் செய்துவிட்டு, காமாசிரமக் கதையைச் சொன்னார்:

"இதுதான் சங்கர பகவான் நீண்ட காலம் தவம் செய்த இடம். மதியற்ற மன்மதன் சங்கரன் மேல் பாணம் விட்டு, பகவானுடைய கோபத்துக்கு ஆளாகி இந்த இடத்தில் எரிக்கப்பட்டான். அதனால் இந்த இடம் காமாசிரமம் என்று பெயர் அடைந்தது."

அன்று இரவு அங்கு வசித்து வந்த ரிஷிகளுடைய அதிதிகளாக முனிவரும் ராஜ குமாரர்களும் தங்கினார்கள்.

காலையில் நித்திய கர்மங்களை முடித்து விட்டுப் புறப்பட்டார்கள். கங்கைக் கரையை அடைந்ததும் அவ்விடத்திலுள்ள ரிஷிகள் அமைத்துத் தந்த ஒரு ஓடத்தில் ஏறிக் கொண்டு கங்கையைத் தாண்டிச் சென்றார்கள்.

ஆற்றின் நடுவில் ஓடம் செல்லும் போது ஒருவிதப் பெருஞ் சத்தம் கேட்டு ராஜகுமாரர்கள் அது என்ன என்று கேட்டார்கள். அது சரயூ நதியானது கங்கையில் பாய்ந்து சேருவதினால் உண்டாகும் ஓசையென்று விளக்கினார். அவ்விடத்தில் ராஜகுமாரர்கள் இரு புண்ணிய நதிகளையும் தியானித்து வணக்கம் செலுத்தினார்கள். பரம் பொருளைத் தியானிக்க ஆறும் மலையும் மரமும் மேகமும் பயன்படும்; எந்தப் பொருளும் பயன்படும். ஆயினும் தலைமுறை தலைமுறையாக மக்கள் பக்தி செலுத்தின நதியும் மூர்த்தியும் கோயிலும் குளமும் நம்முடைய உள்ளத்தை எளிதில் கடவுள் வழியில் செல்லச் செய்யும்.

கங்கையைத் தாண்டி நடந்து சென்றார்கள். வழி ஒரு பயங்கரமான காட்டுக்குள் சென்றது. மரங்களும் புதர்களும் அடர்ந்து நுழைந்து போவதே மிகக் கஷ்டமாக இருந்தது. துஷ்ட மிருகங்களின் சத்தம் பயங்கரமாக இருந்தது.

ராமலக்ஷ்மணர்களுக்கு முனிவர் சொன்னார்: "இதுவே தாடகாவனம். இப்பொழுது பயங்கரக் காடாக இருக்கும் இந்த இடம் பூர்வத்தில் மிகச் செழிப்பும் செல்வமும் நிறைந்த தேசமாக இருந்தது. ஒரு காலத்தில் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்று பிரம்மஹத்தித் தோஷம் அடைந்தான். அதனால் அவன் தேவ லோகத்தில் இருக்



கத் தகாதவனாகி மிக வருந்தினான். தேவ ராஜனாகிய இந்திரனுடைய பாபத்தைப் போக்க தேவர்கள் எல்லாரும் சேர்ந்து மிகச் சிரமப் பட்டார்கள். புண்ணிய நதிகளிலிருந்து பெரிய பாத்திரங்களில் ஜலம் கொண்டு வந்து அவனை ஸ்நானம் செய்வித்து மந்திரங்களினால் பரிசுத்தப் படுத்தினார்கள். அந்த ஸ்நான நீரினால் அவனிடம் தங்கியிருந்த மலம் கழுவப்பட்டுப் பூமியில் சேர்ந்ததும் பூமியின் சக்தியால் அது ஜீரணிக்கப்பட்டு உரமாகி அந்தப் பிரதேசம் மிகச் செழிப்படைந்தது.''

எத்தகைய அழுகிப் போன, புழுத்துப் போன பொருளும் - பிரேதம், துர்க்கந்த மலம் உட்பட - பூமியில் புதைத்து விட்டால் மண்ணோடு மண்ணாகிப் போய்ப் பயன்பட்டு விடுகிறது. அதுவே புல்லும் செடியும் பழமும் கிழங்கும் அமிருதம் போன்ற உணவுமாகிறது. இதுவே பூதேவியின் அருள் சக்தி.

''வெகு காலம் வரையில் இங்கே ஜனங்கள் சுகமாக இருந்தார்கள். பிறகு சுந்தன் என்கிற யக்ஷனுடைய மனைவியான தாடகையும் அவன் மகன் மாரீசனும் இந்தத் தேசத்தை நாசம் செய்து கோர வனமாக்கி விட்டார்கள். அவர்கள் இன்னும் இந்த வனத்தில் இருந்து கொண்டு வருகிறார்கள். உனக்கு மங்களம்.* அந்தத் தாடகைக்குப் பயந்து இங்கே யாரும் வருவதில்லை. அவள் ஆயிரம் யானை பலம் கொண்டவள். அவளுடைய உபத்திரவத்தைப் போக்கவே உன்னை அழைத்து வந்தேன். ரிஷிகளைத் தொந்தரவு செய்யும் இந்த அரக்கி உன்னால் கொல்லப்படுவாள் என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

தாடகையைப் பற்றி விசுவாமித்திரர் சொன்னதைக் கேட்ட ராமன், ''சுவாமி! தாடகை யக்ஷ ஸ்திரீ என்று சொன்னீர். யக்ஷர்களைப் பற்றி அவர்கள் இவ்வளவு தேக பலம் கொண்டவர்கள் என்று நான் கேள்விப் படவில்லையே! —யக்ஷர்களுக்குத் தேக பலம் ராக்ஷசர்களைப் போல் இல்லை என்று நான் இது வரை எண்ணி வந்தேன். அதிலும் ஸ்திரீ ஒருத்திக்கு எவ்வாறு இத்தகைய பலம் உண்டாயிற்று?'' என்று கேட்டான்.

''நீ கேட்கும் கேள்வி பொருத்தமானதே. இதற்குக் காரணம் பிதாமகர் கொடுத்த வரமாகும். சுகேது என்ற ஒரு யக்ஷன் இருந்தான். அவனுக்குச் சந்தானம் உண்டாகாமல் தவமிருந்து பிரம்மா அவனுடைய நன்னடத்தையையும் தவத்தையும் கண்டு திருப்தியடைந்து வரம் தந்தார். 'அழகான ஒரு பெண் குழந்தை உனக்கு உண்டாவாள். அவள் வளர்ந்து ஆயிரம் யானை

* ''பத்ரம் தே!''—அதாவது ''உனக்கு மங்களம்'' என்று ராமாயணத்தில் அடிக்கடி வரும். இது ஆசீர்வாத மொழி. பயம் அல்லது துக்கம் தரக்கூடிய விஷயத்தைச் சொல்லும் போது அன்புடன் இவ்விதம் காப்பு மொழியைச் சேர்த்துச் சொல்வது வடமொழி இலக்கிய மரபு.



களின் தேக பலம் அடைவாள். ஆனால் உனக்கு ஆண் சந்தானம் உண்டாகாது' என்று வரம் தந்தான்.

'' அப்படியே அவனுக்கு ஒரு மகள் பிறந்தாள். அவள்தான் தாடகை. மிக சௌந்தரிய ரூபவதியான அவளைச் சுந்தன் என்ற யக்ஷனுக்குக் கொடுத்து விவாகமாயிற்று. அவர்களுக்கு மகன் மாரீசன் பிறந்தான்.

'' ஒரு சமயம் அகஸ்தியருடைய கோபத்தினால் சாபம் அடைந்து சுந்தன் மரண மடைந்தான். இதனால் சுந்தனுடைய மனைவி தாடகையும் மகன் மாரீசனும் இருவரும் ரோஷம் கொண்டு, அகஸ்தியரை எதிர்த்தார்கள். தேக பலத்தைக் கொண்டு எதிர்க்க வந்த அவர்களை அகஸ்திய முனிவர் சாபமிட்டார். அதன் பயனாக அவர்கள் நர மாமிசம் தின்னும் ராக்ஷசப் பிராணிகளாகி விட்டார்கள். தாடகையின் அழகு தீர்ந்து போய்க் கோரமான ராக்ஷச உருவ மடைந்து விட்டாள்.

'' தாடகையும் மாரீசனும் அகஸ்தியருடைய பிரதேசத்தில் இருக்கும் மக்களை அதுமுதற்கொண்டு இடைவிடாமல் இம்சித்து வருகிறார்கள். பெண்ணைக் கொல்லுவது க்ஷத்திரிய தருமத்துக்கு விரோதம் என்று நீ தயங்க வேண்டாம். இவளுடைய அக்கிரமங்களைப் பொறுக்க முடியாது. மிகக் குரூரமான அரக்கி.



இத்தகையோரை அவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் தண்டிப்பது அரசர்களுடைய கடமை. அனைவருடைய க்ஷேமத்திற்காகக் காட்டு மிருகங்களைக் கொல்லுவது போல் இந்த



அரக்கியைக் கொல்லுவது நியாயமேயாகும். ராஜ்ய பாரம் வகித்தவர்களுக்கு இது கடமையாகிறது. அதர்மத்தைச் செய்த பல மானிட ஸ்திரீகளுக்கும் இவ்வாறு மரணம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நீ தயங்க வேண்டியதில்லை'' என்றார்.

எல்லாத் தேசங்களிலும் பெண்களைத் தண்டிக்க வேண்டி நேரிட்டாலும் மரண தண்டனை விதிக்கக் கூடாது என்கிற பழைய வழக்கம் உண்டு. ஆனால் எந்தப் பொது விதிக்கும் விதி விலக்குகள் இருந்தே தீரும். இல்லாவிடில் பொது நன்மை நிலைபெறாது.

'' குருவே, சபையில் எங்கள் தந்தை தாங்கள் சொல்லும்படி நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார். உங்களுடைய சொற்படி மக்கள் க்ஷேமத்துக்காக இந்தத் தாடகையைக் கொல்வேன்'' என்று சொல்லிக் கோதண்டத்தை வளைத்து நாண் ஏற்றித் தோள்வரை நாணை இழுத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி வனம் முழுதும் நிரம்பி, எட்டுத் திசைகளிலிருந்தும் எதிரொலி கிளம்பிற்று. வனத்திலுள்ள பிராணிகள் அனைத்தும் நடுங்கின.

தாடகை இந்தச் சப்தத்தைக் கேட்டு யாருக்கு இவ்வளவு தைரியம் என்று திகைத்தாள். பிறகு சப்தம் வந்த இடத்தைத் தேடி மகா கோபத்தோடு ராமன் மேல் பாய்ந்தாள்.



முதலில் கை கால்களை வெட்டி விட்டு அங்கவீனம் செய்தால் போதும் என்று ராமன் எண்ணி அவ்விதம் செய்யப் பார்த்தான். ஆனால் தாடகையின் பாய்ச்சல் அதிகரித்தது. இங்கு மங்கும் சஞ்சரித்துக் கல்மாரி பொழிந்தாள். ராமனும் லக்ஷ்மணனும் அம்புகளைக் கொண்டு கல் மாரியைத் தடுத்து வந்தார்கள்.

யுத்தம் நடந்து கொண்டே இருந்தது. "இவ்விதம் இது முடியாது. இரக்கம் காட்ட வேண்டாம்! மாலையாகி விட்டது; இருட்டினபின் அரக்கியின் பலம் அதிகமாகப் பெருகும். தாமதம் வேண்டாம்" என்று முனிவர் எச்சரித்தார்.

அதன்மேல் அரக்கியைக் கொல்லுவதே சரி என்று ஒரு கொல்லும் அம்பை எய்தான். அது அரக்கியின் மார்பைத் துளைத்தது. அவளுடைய கோரமான பெருந்தேகம் உயிரற்றுப் பூமியில் வீழ்ந்தது.

தேவர்கள் ஆரவாரித்தார்கள். முனிவரும் அடங்கா மகிழ்ச்சியடைந்து சக்கரவர்த்தித் திருமகனை உச்சி முகர்ந்து ஆசீர்வதித்தார்.

• • •

தாடகை இறந்து வீழ்ந்ததும் அந்த வனம் உடனே சாபம் நீங்கினதுபோல் மிக ரமணீயமாய் விளங்கிற்று. இரவு அரச குமாரர்கள் அங்கேயே கழித்தார்கள். அதிகாலையில் எழுந்து அனுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு மூவரும் அங்கிருந்து விசுவாமித்திரருடைய ஆசிரமத்துக்குச் சென்றார்கள்.

10. வேள்வி காத்தது

காலையானதும் முனிவர் சக்கரவர்த்தித் திருமகனைப் பக்கத்தில் உட்கார வைத்து, "அப்பனே! உனக்கு மங்களம். என் உள்ளம் திருப்தி அடைந்தது. நீ செய்த காரியத்துக்காக உனக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு என்ன இருக்கிறது? இப்போது உனக்கு அஸ்திர உபதேசம் செய்யப் போகிறேன்; பெற்றுக் கொள்வாயாக" என்று சொல்லி முறைப்படி ராமச்சந்திரனுக்குத் தம் தவத்தினால் பெற்ற சகல திவ்யாஸ்திரங்களையும் உபதேசித்தார்.

அந்தந்த அஸ்திரங்களைப் பிரயோகிக்கவும் அவற்றை அடக்கிப் பின் திருப்பவும் மந்திரங்களை யெல்லாம் உபதேசித்தார். அஸ்திரங்களுக் குரிய தேவதைகளும் ராமனுக்குப் பிரத்யட்சமாகத் தரிசனம் தந்து விட்டு, "உன் உத்தரவுக்கு அடங்கி எல்லாம் செய்வோம்" என்று சொல்லி மறைந்தன. ராமச்சந்திரனும் அவற்றை யெல்லாம் தம்பி லக்ஷ்மணனுக்கும் உபதேசித்தான்.

அஸ்திர மந்திரங்களை ராமன் சரியாகப் பெற்றானா என்பதைப் பரீக்ஷை செய்து திருப்தியடைந்த பிறகு, "இந்த அஸ்திரங்களைக் கொண்டு தேவாசுர

வார்த்தெடுத்த கான்கிரீட் கட்டிகள்

சுவர்களுக்கான தொளையுள்ள கான்கிரீட் கட்டிகள், தரைகளுக்கும், கூரைகளுக்கும் உபயோகப்படும் 'T' வடிவம் கொண்ட ரெயின் போர்ஸ்ட் கான்கிரீட் உத்திரங்கள், கதவுகள் ஜன்னல்களுக்கான ரெயின் போர்ஸ்ட் கான்கிரீட் சட்டங்கள் முதலானவைகள் விலை குறைந்த, தீப் பிடிக்காத உறுதியான வீடுகளைக்கட்ட பயன்படுகின்றன. மேற்கூறிய மூன்று வகைகளுக்கு மட்டும் கான்கிரீட் பொருள்களை வாங்குவதால் சாதாரண கட்டிடச் செலவில் மூன்றில் ஒரு பங்கை மிச்சப்படுத்த முடிகிறது.


பிரிடிஷ் ஸ்டாண்டர்ட் நிபந்தனைகளுக்கு ஓரளவு மிஞ்சியே நிற்கும் ஏ.சி.சி. நீலகிரி பிராண்டு சிமெண்டு இப்பொழுது தென் இந்தியாவில் கிடைக்கிறது.

ஏ.சி.சி.

நீலகிரி பிராண்டு

சிமெண்டில்

லாபகரமான வீடுகளைக் கட்டுவதற்கு



உங்கள் தேவைகளுக்கு உடனே எழுதுங்கள்.
அருகாமையிலுள்ள சி. எம். ஐ. ஸ்டாகிஸ்டு
அல்லது வியாபாரியிடம் அல்லது நேராகவோ.

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

9,மௌண்ட் ரோடு, மதராஸ். 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயமுத்தூர். ஷுகர் கம்பெனி பில்டிங், பெங்களூர்.

கான்கிரீட் உபயோகித்து கட்டுவது சம்பந்தமான எல்லா பிரச்னைகளுக்கும் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மௌண்டு ரோடு, மதராஸ் அல்லது ஷுகர் கம்பெனி பில்டிங், பெங்களூர் என்ற விலாசத்திற்கு எழுதி தொழில் நுட்ப ஆலோசனைகளை இலவசமாகப் பெறுங்கள்

கந்தர்வ உரகர்களேயும் நீ யுத்தத்தில் அழித்து வெற்றி பெறுவாய்'' என்று ராமனை முனிவர் ஆசிர்வதித்தார்.

கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின் ராமன் முனிவரைக் கேட்டான்: "அதோ, அங்கே தென்படுகிறதே பெரிய மலையும் ரமணீயமான வனமும், அதுவா நாம் போக வேண்டிய இடம்? உங்கள் வேள்வியைக் கெடுக்கும் துராத்மாக்கள் யார்? அவர்களை ஒழித்துத் தீர்க்க நாம் என்ன வெல்லாம் செய்ய வேண்டும்? எனக்கு விவரமாகச் சொல்லுவீர்'' என்றான்.

ராமச்சந்திரனுடைய கை துடித்தது. யுத்தம் செய்து வெற்றி பெற்று முனிவருடைய ஆசீர்வாதத்தைப் பெற ஆவல் கொண்டான்.

"அப்பனே! அந்த இடம்தான் நாம் போக வேண்டிய இடம். அதுவே ஆதி நாராயணன் முன்னாள் தவமிருந்த இடம். மகா விஷ்ணு, வாமனனாக அவதரித்த இடமும் அதுவே. அதனாலேயே அந்த ஆசிரமத்துக்குப் பெயர் சித்தாசிரமம் என்று வழங்கி வருகிறது'' என்றார் முனிவர்.

* * *

பிரஹ்லாதனுடைய மகனான விரோசனனுடைய புத்திரன் மகாபலி என்ற அசுரன் புகழுடன் அரசு புரிந்தான். அவனுடைய ஆதிக்கப் பெருக்கத்தைக் கண்டு தேவர்கள் பயந்தார்கள். இந்திரன் ஆதிக்கத்தை யெல்லாம் மகாபலி ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான்.

இந்திரனைப் பெற்ற காசியப முனிவரும் மனைவி அதிதியும் மகா விஷ்ணுவைக் குறித்துப் பெரும் தவம் செய்து, "லோகநாதனே! எங்களுக்குப் புத்திரனாகவும் இந்திரனுக்குத் தம்பியாகவும் நீயே அவதரித்து இந்திரனையும் தேவர்களையும் மகாபலியினிட மிருந்து காப்பாற்றுவாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள். அதன்மேல் மகாவிஷ்ணு வாமனாவதாரம் எடுத்து, அதிதிக்கு மகனாகப் பிறந்து வளர்ந்தான்.

மகாபலி செய்த ஒரு யாகத்திற்கு அழகிய சிறு பிரம்மச்சாரியாக வாமனன் சென்றான். மகாபலியின் ஆசாரியரான சுக்கிரர்—அசுர குலத்துக்கு இவர்தான் குரு—விஷயத்தைத் தெரிந்து கொண்டு 'இந்த பிராமணன் யாசிப்பதைத் தர வேண்டாம்' என்று எச்சரித்தார்.

"என் பாதத்தால் அளந்த மூவடிப் பிரதேசம் வேண்டும்'' என்று சிறுவன் கேட்டதை பலிச் சக்கரவர்த்தி "தந்தேன்'' என்று ஜலம் வார்த்துத் தந்து விட்டான். "மகா விஷ்ணுவே என் யாகத்தில் வந்து யாசகம் கேட்டுப் பெறுவதை விட எனக்கு என்ன மேலான நன்மை உண்டு'' என்று தன் ஆசாரியருக்குச் சொல்லி விட்டான்.

வாமனன் உடனே திரிவிக்கிரமனாகி வளர்ந்தோங்கிப் பூவுலகம் ஓரடியாலும் வானுலகம் ஓரடியாலும் அளந்து விட்டான். மூன்றாவது அடியாகத் தன் திருப்பாதத்தை நாராயணன் மகாபலிக்கு அபயம் என்று அவன் தலைமேல் வைத்தான். உலகப் பரப்புக்குச் சமானம் பக்தனுடைய தலை என்பது இந்தக் கடைசி நிகழ்ச்சியின் பொருள். ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவன் ஆனான் மகாபலி.

* * *

இந்தப் புண்ணிய கதையைச் சொல்லி "ஆதியில் நாராயணன் தவமிருந்ததும், பிறகு காசியபர் தவம் செய்து தேவர்களைக் காப்பாற்ற வாமனனைப் பெற்றதுமான இந்த இடம் சித்தாசிரமம் என்கிற பெயர் பெற்றது. இந்தப் புண்ணியப் பிரதேசத்தில் நானும் ஆசிரமம் அமைத்து அதில் இருந்து வருகிறேன். என்னுடைய வேள்விக்குத் தடையாக அரக்கர்கள் இந்த வனத்துக்கு வந்து வேதனை செய்கிறார்கள். யாகம் நடைபெறாமல் செய்துவிடுகிறார்கள். இப்போது நீ வந்திருப்பதே அவர்களுடைய முடிவு'' என்றார் விசுவாமித்திரர்.

"அப்படியே யாகுக'' என்றான் ராமன்.

* * *

அரச் குமாரர்களுடன் விசுவாமித்திரர் வந்து விட்டதைக் கண்டு அங்குள்ள மற்ற ரிஷிகள் மிக மகிழ்ச்சியடைந்து ஒருவர் பின் ஒருவராக வந்து முனிவரை வணங்கி வரவேற்றார்கள். ராஜகுமாரர்களுக்கும் முறைப்படி அதிதி பூஜை செய்து அமர்ந்தார்கள்.

"இன்றே தாங்கள் யாக தீக்ஷையெடுக்கலாம்'' என்று சக்கரவர்த்தித் திருமகன் பரபரப்புடன் முனிவருக்குச் சொன்னான். அவ்வாறே விசுவாமித்திரர்

வேள்வித் துவக்கத்துக்கு உரிய விரதம் அன்றிரவு எடுத்துக் கொண்டார்.

* * *

மறுநாள் காலை சீக்கிரமாகவே ராஜ குமாரர்கள் எழுந்து யாகசாலையிலிருந்த முனிவரை வணங்கி "ராக்ஷசர்கள் எப்போது வருவார்கள்? நாம் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாதல்லவா? எங்களுக்கு விவரமாகச் சமயத்தைத் தெரியப் படுத்த வேண்டும்" என்றார்கள்.

அங்கிருந்த ரிஷிகள் இதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்தார்கள்.

"முனிவர் விசுவாமித்திரர் மௌன விரதத்தி லிருக்கிறபடியால் இனிப் பேச மாட்டார். ஆறு நாட்கள், இரவும் பகலும் நீங்கள் தூங்காமல் யாகத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்றார்கள்.

ராஜ - குமாரர்கள் வில்லும் கையுமாக ஆறு நாட்கள் இரவும் பகலும் காத்தார்கள். ஆறாவது நாள் காலையில் லக்ஷ்மணனுக்கு ராமன் சொன்னான்: "தம்பி! இப்போது வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதுதான் அரக்கர்கள் வரும் சமயம்" என்றான்.

இதைச் சொல்லும் போதே, அக்னி குண்டத்திலிருந்து நெருப்பு கொழுந்து விட்டு எழுந்தது. ராக்ஷசர்கள் ஆகாயத்தில் வந்து நின்றது அக்னிக்குத் தெரியும். யாக காரியம் சகலமும் கிரமமாக நடந்து கொண்டிருக்க, மேலே ஆகாயத்தில் ஒரு பெரும் கர்ஜனை கேட்டது. ராமன் மேலே பார்த்தான்.

மாரீசனும் சுபாஹுவும் அவர்கள் பரிவாரமும் மாமிசமும் ரத்தமும் வேதிகையின் மேல் சொரிந்து யாகத்தைக் கெடுக்க ஆயத்தமாக நின்றதைக் கண்டான். ஆகாயம் முழுவதும் நீர் கொண்ட மேகம் மூடினாற் போல் அரக்கர் கூட்டம் நின்றது. உடனே மானவாஸ்திரத்தை எடுத்து, "லக்ஷ்மணா, பார்!" என்றான் ராமன்.

அந்த அஸ்திரம் மாரீசனைத் தாக்கி அவனை நூறு யோசனை தூரம் தள்ளிக் கடற்கரையில் கொல்லாமல் வீழ்த்திற்று.

பிறகு ராமன் ஆக்னேயாஸ்திரம் விட்டான். அது சுபாஹுவைத் தாக்கி, அவன் மாண்டு விழுந்தான். பிறகு வேறு அஸ்திரங்களைப் பிரயோகித்து அரக்கர் கூட்டத்தை ராஜ குமாரர்கள் மூற்றிலும் அழித்தார்கள்.

ஆகாயம் மறுபடி வெளுத்தது.

* * *

இவ்வாறு யாகத்தைக் கெடுக்க வந்த அரக்கர்கள் வீழ்த்தப்பட்டு ரிஷிகளுக்கு ஏதொரு தொந்தரவுமில்லாமல் காரியம் முடிந்தது. விசுவாமித்திரர் எல்லை கடந்த மகிழ்ச்சியடைந்தார்.

"சக்கரவர்த்தி தசரதனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் ஆணைப்படி நடத்திக் கொடுத்தீர்கள். உங்களுடைய பராக்கிரமத்தைப் பாராட்டுகிறேன். இந்த ஆசிரமம் மறுபடியும் எங்களுக்கு சித்தாசிரமம் ஆயிற்று" என்று சொல்லி ராஜகுமாரர்களை ஆசீர்வதித்தார்.

அன்றிரவு இராஜ குமாரர்கள் சித்தாசிரமத்தில் தூங்கிக் களைப்பு தீர்த்துக் கொண்டார்கள்.

* * *

மறுநாள் காலை நியமங்களை முடித்து விட்டு ராம லக்ஷ்மணர்கள் முனிவர் முன் நின்று வணங்கி, "என்ன உத்தரவு?" என்றார்கள்.

அவதார ரகசியம் முனிவருக்குத் தெரிந்ததுதான். உபதேசித்துத் தந்த அஸ்திரங்களின் வல்லமையும் அவர் அறிந்ததே. ஆயினும் எதிர்பார்ப்பது வேறு. எடுத்த காரியம் முடிந்து அதை நேரில் அனுபவிக்கும் மகிழ்ச்சியே வேறு.

விசுவாமித்திர முனிவருக்குச் சொல்லொணாத சந்தோஷம். அவர் முகம் அக்னிச் சுவாலையைப் போல் பிரகாசித்தது. இன்னும் ராமச்சந்திரனுக்குத் தாம் செய்ய வேண்டிய பணியைப் பற்றி நினைக்கலானார். அதுவே சீதாகலியாணம்.

* * *


அங்கு கூடிய ரிஷிகளும் விசுவாமித்திரரும் ராமனை நோக்கிச் சொன்னார்கள்:

"நாங்கள் மிதிலைக்குப் போவதாக இருக்கிறோம். ராஜ சிரேஷ்டரான ஜனகர் ஒரு யாகத்தைச் செய்யப் போகிறார். அங்கே நாம் அனைவரும் போகப் போகிறோம். ராஜ குமாரர்களும் நம்முடன் போவது நல்லது. ஜனகருடைய அற்புத வில்லைச் சக்கரவர்த்தித் திருமகன் தரிசித்தல் தகும்."

அவ்வாறே நிச்சயம் செய்தார்கள். ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரருடன் மிதிலைக்குச் சென்றார்கள்.

எல்லாம் கோடிட்டவை?





ஆம்...எமது கோடிட்ட துணிகளால் நாங்களே பெருமிதமடைகிறோம். சகல ரகங்களையும் உங்கள் வாடிக்கைக் கடையில் காணுங்கள்.



காலிகோ ஷர்ட்டிங்



தயாரிப்பவர்கள்:
காலிகோ மில்ஸ், அஹமதாபாத்

SHILPI CA/ 116



சாந்தி நிலையம்

சுசீலா சுப்பிரமண்யம்

அந்தி மயங்கும் வேளை. அந்த விசாலமான தோட்டத்தின் ஒரு பக்கத்திலிருந்த புல் தரையின்மீது நான்கு நண்பர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சற்றுத் தள்ளி ஒரு பந்து விளையாடும் இடம் இருந்தது. புல் தரையின்மீது கிடந்த டென்னிஸ் மட்டைகளும் பந்தும் அவர்கள் அதுவரை விளையாடிக் கொண்டிருந்தனர் என்பதை அறிவித்தன. அந்நால்வருடைய முகங்களிலிருந்தும் வியர்வை ஆறாக வழிந்து கொண்டிருந்தது. விளையாடின களைப்புத் தீருவதற்காகப் பச்சைப் பசேல் என்றிருந்த அந்தப் புல் தரையின்மீது அவர்கள் அமர்ந்தவாறு பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய பேச்சு பல விஷயங்களையும் பற்றியதாக இருந்தது. கடைசியில் பேய், பிசாசுகளைப் பற்றி ஒரு விவாதம் எழுந்தது. பேய், பிசாசு முதலியவை இருப்பது உண்மையா என்பதே பிரச்னை. அங்கிருந்தவரில் மூவர் தத்தமக்குத் தெரிந்த கதைகளைக் கூறிக்கொண்டும் அவைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டும் பேய்கள் இருப்பது உண்மைதான் என்று நிரூபித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஒருவர் மட்டும் இவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டு இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் இருந்தார். அவர்தான் டாக்டர் சேகர். அவருடைய விருந்தாளிகளாக மற்ற மூவரும் அன்றுதான் வெளியூரிலிருந்து வந்திருந்தனர்.

சேகர் புன்னகை புரிந்துகொண்டு பேசாமல் இருப்பதைக் கண்ட ஒரு நண்பர், "என்ன, டாக்டர் ஸார், இந்த விவாதத்தில் உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லையே! பேய்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

"பேயாவது பிசாசாவது! எல்லாம் வீண் மனப் பிரமை. கட்டுக் கதைகளில்தான் இவைகளைப் பார்க்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று தீர்மானமாகக் கூறினார் சேகர்.

"இவ்வளவு உறுதியாக நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று அந்த நண்பர் மீண்டும் கேட்டார்.

"இது நான் அனுபவபூர்வமாக உணர்ந்த ஓர் உண்மை. சரி, அது போகட்டும். இருட்டிவிட்டது, எல்லோரும் வீட்டுக்குள்ளே போய்ப் பேசிக் கொண்டிருப்போம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் சேகர்.

மற்ற மூவரும் பலவித வர்ணப் புஷ்பங்கள் நிறைந்த அவ் வழகிய தோட்டத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டே சேகரைப் பின் தொடர்ந்தனர்.

மீண்டும் அவர்களிடையே பேச்சு ஆரம்பமாயிற்று. "டாக்டர், உங்களுடைய பங்களா பெரிய நகரத்துக்கு நடுவில் இருந்தாலும் எவ்வளவு அமைதியாக இருக்கிறது! இதற்குச் 'சாந்தி நிலையம்' என்று மிகவும் பொருத்தமாகத்தான் பெயரிட்டிருக்கிறீர்கள். பங்களாவும் தோட்டமும் மிகவும் அழகாக இருக்கிறது" என்று ஒரு நண்பர் கூறினார். மற்ற நண்பர்கள் அதை ஆமோதித்தனர்.

"நான் இந்த வீட்டை வாங்கின புதிதில் நீங்கள் வந்து பார்த்திருக்க வேண்டும். அப்போது இதற்கு நேர் எதிராக அபிப்பிராயம் சொல்லியிருப்பீர்கள்" என்று ஒரு புன்னகையுடன் சொன்னார் சேகர்.



"அது இருக்கட்டும், டாக்டர். நாம் சற்று முன்பு பேசிக்கொண்டு இருந்தோமே, அந்த விஷயத்திற்குப் போவோம். பேய்களைப் பற்றி நீங்கள் ஏதோ அனுபவபூர்வமாக அறிந்ததாகச் சொன்னீர்களே. அந்த விசேஷ அனுபவம் என்ன? அதைச் சற்றுக்கூறுங்கள். அதை அறிய நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன்" என்றார் ஒரு எழுத்தாள நண்பர். அவர் ஒரு கதை எழுதுவதற்கு ஏதாவது விஷயம் அகப்படாதா என்று பார்க்கிறார் என்பதை அவருடைய ஆர்வம் மிகுந்த குரல் சொல்லிற்று.

மற்ற நண்பர்களுக்கும் அதை அறிய ஆவல் உண்டாகவே, அதைக் கூறுமாறு சேகரிடம் கேட்டுக் கொண்டனர்.

டாக்டர் சேகர் தம்முடைய நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு மூன்று நண்பர்களையும் பார்த்து, "இதோ, இப்போது அமர்ந்திருக்கிறோமே, இதே அறையில் ஒரு பேய் வாசம் செய்து கொண்டிருந்தது—உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

மூன்று நண்பர்களும் திடுக்கிட்டு, "என்ன, இந்த அறையில் பேயா?" என்று ஏக காலத்தில் கூவினர். அவர்கள் முகங்களில் பிரதிபலித்த வியப்பையும் அவநம்பிக்கையையும் கவனித்த சேகருக்குச் சிரிப்பு வந்தது.

"ஆம். இது ஒரு பேய் நடமாடிக் கொண்டிருந்த அறையாகப் பத்து வருஷங்களுக்கு முன் இருந்தது. அதைப் பற்றிய கதையை இதோ உங்களுக்குச் சொல்கிறேன்" என்று சேகர் கதையை ஆரம்பித்தார்.

"பத்து வருஷங்களுக்கு முன்பு அப்போதுதான் நான் வைத்தியப் பரீட்சையில் தேறி வெளி வந்திருந்தேன். என்னுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்ட எனது தந்தை எனக்கு இருபதினாயிரம் ரூபாய் சேர்த்து வைத்து விட்டுப் போயிருந்தார். வைத்தியத் தொழில் செய்வதற்காக அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நான் இந்த ஊருக்கு வந்தேன்.

ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு என் தொழிலைத் தொடங்கினேன். அப்போது ஊரெல்லாம் பரவியிருந்த ஒரு வதந்தி என் காதிலும் விழுந்தது. அது இந்த வீட்டைப் பற்றியதுதான்.

இந்தப் பங்களாவின் சொந்தக்காரர் நாராயணன் என்ற ஒரு தனவந்தர். அவர் பலவருஷங்கள் தமக்கு ஒரு குழந்தை இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தார். அவர் மனைவி பல நோன்புகள் நோற்றாள். கடைசியில் அவர்களுக்குத் தந்தவிக்ரகம் போன்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தப் பெண்தான் சாந்தி.

சாந்தி தன் பெற்றோரால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்டாள். அவர்கள் இருவரும் அவளுடைய பெயரையே பங்களாவுக்கும் வைத்தனர்.

இப்படி ஒரு குறைவுமின்றி வளர்ந்த சாந்தி யௌவன வயதை அடைந்தாள். தன்னுடைய கல்லூரித் தோழனை மோகனிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள். அழகும் புத்திசாலித் தனமும் நிறைந்த மோகனைப் பார்த்ததுமே சாந்தியின் பெற்றோர் அவனை மருமகனாகக் கொள்ளச் சம்மதித்து விட்டனர். சாந்தி இன்ப வெள்ளத்தில் மிதந்தாள். ஆனால் அந்தோ! விதி வேறு விதமாக இருந்தது. ஒரு மோட்டார் விபத்தில் சிக்கிய மோகன், தன் காதலியைப் பரிதவிக்க விட்டு விட்டு, மறு உலகத்துக்குப் போய் விட்டான்.

பாவம், சாந்தி பிரமை பிடித்தவள் போலானாள். அருமைக் குமாரியின் எல்லையில்லாச் சோகத்தைக் கண்டு நாராயணனும் அவர் மனைவியும் மனம் கலங்கினர். அவர்கள் எத்தனையோ ஆறுதல்கள் கூறியும் அவை சாந்தியின் செவியில் ஏறவில்லை. தன் ஆருயிர்க் காதலனை நினைத்து நினைத்து அவள் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவள்போல் தென்பட்டாள். மறுநாள் காலையில் வெகு நேரமாகியும் சாந்தியைக் காணாததால் அவளைத் தேடிக் கொண்டு அவளுடைய அறைக்குச் சென்ற பெற்றோர் தம் மகளுடைய உயிரற்ற சடலத்தையே கண்டனர். விஷத்தைக் குடித்து விட்டுத் தன் காதலனிடம் போய்ச் சேர்ந்து விட்டாள் சாந்தி.

செல்வக் குமாரி அகாலமாக இறந்தபிறகு நாராயணனுக்கும் அவர் மனைவிக்கும் அந்தப் பங்களாவிலேயே இருக்கப் பிடிக்கவில்லை. அந்த ஊரை விட்டே சென்று விட்டனர்.

இரண்டு வருஷங்கள் உருண்டோடின. பங்களா கவனிப்பாரற்றுப் பூட்டியே கிடந்தது. தோட்டமெங்கும் காட்டுச் செடிகளும் முட்புதர்களும் நிறைந்தன. ஊர் ஜனங்கள் இந்த வீட்டுக்குப் 'பாழடைந்த பங்களா' என்று ஒரு புதுப் பெயர் வைத்தார்கள்.

இங்கு இருக்கும் தன் நண்பர் ஒருவருக்கு நாராயணன் இந்த வீட்டின் சாவியை அனுப்பி, வீட்டை வாடகைக்கு விடும்படியும் அல்லது யாராவது வாங்க முன் வந்தால் விற்றுவிடுமாறும் எழுதி யிருந்தார். ஆனால், இந்த வீட்டில் குடிபுகவே யாரும் விரும்பவில்லை. அதற்குக் காரணம் இங்கு சாந்தியின் ஆவி நடமாடுகிறது என்ற வதந்தியே.

நாம் இப்போது உட்கார்ந்திருக்கிறோமே, இதே அறையில்தான் சாந்தி . இறந்தாள். இந்த அறையில் அவளுடைய ஆவி இரவில் வந்து மின்சார விளக்கைப் போடுவதும் அணைப்பதுமாக இருக்கிறது என்று பலர் கூறினர். நடுநிசியில் இந்த ஒரு அறையில் மட்டும் விளக்கு எரிவதைப் பார்த்திருப்பதாக என் நண்பர்கள் கூறினதும், எனக்கு இதைப் பற்றிய உண்மையை அறிய மிகுந்த ஆவல் உண்டாயிற்று.

எனக்குச் சிறு வயது முதலே துணிச்சல் அதிகம். இந்தக் கதையைக் கேட்டதும் அது உண்மையா என்று பரிசோதிக்கவேண்டி ஒரு நாளிரவு நான் தனியாகப் 'பாழடைந்த பங்களா' இருந்த தெருவுக்குச் சென்றேன். ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு நான் இந்த வீட்டையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் கழிந்ததும், நான் காத்திருந்த பேய் வந்து விட்டது! அதாவது இந்த அறையில் திடீரென்று விளக்கு எரிந்தது. அதன் வெளிச்சம் ஜன்னலுக்கு மேலிருந்த காற்று புகும் ஜன்னல் வழியாக எனக்குத் தெரிந்தது. சில நிமிஷங்கள் எரிந்து விட்டு விளக்கு அணைந்து விட்டது. அன்று என் ஜாகைக்குத் திரும்பும்போது இவ்வாறு விளக்கை எரியவிடும் சாந்தியின் ஆவியை நேரில் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அடுத்த நாள் நாராயணனின் நண்பரிடம் போய்ப் பாழடைந்த பங்களாவைப் பற்றிப் பேசினேன். நான் இந்த வீட்டை வாங்க உத்தேசித்திருப்பதாகச் சொன்னதும் அவர் ஆச்சரியப்பட்டார். ஆனாலும், அந்த வீட்டினுள்ளே சென்று பார்க்கச் சாவி வேண்டும் என்று கேட்டபோது ஒன்றும் பேசாமல் கொடுத்துவிட்டார். அதை மறுநாள் திருப்பித் தருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன்

அன்றிரவு ஒன்பது மணிக்குச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, கையில் ஒரு 'டார்ச்'

விளக்குடன் பங்களாவை அடைந்தேன். வாசற் கதவை என் கையிலுள்ள சாவியால் திறந்து உள்ளே நுழைந்தேன். மூடியிருந்த கதவுகளைத் திறந்து ஒவ்வொரு அறையாகப் பார்த்து வந்தபோது 'குப்' பென்று ஒரு நாற்றம் அடித்தது. தலைக்கு மேலே பறக்கும் வௌவால்கள் சப்தம் கேட்டது. நாராயணனுடைய பங்களாவுக்கு வாடகையில்லாமலே குடித்தனக்காரர்கள் இருக்கிறார்களே என்று எண்ணிக் கொண்டே நான் அங்கு கிடந்த சோபாவில் உட்கார்ந்தேன்.

எனக்கு நேராகச் சாந்தியின் அறை. ஊரெங்கும் பிரசித்தமான அந்தப் பேயின் வருகைக்காகக் காத்திருந்தேன்.

எங்கும் ஒரே இருட்டு. அங்கே குடி கொண்டிருந்த நிசப்தம் எத்தகைய திடநெஞ்சுக் காரனுக்கும் ஒருவித அச்சத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. "இன்று அந்தப் பேய் வருமா அல்லது நான் உட்கார்ந்திருப்பதை அறிந்து வராமலே இருந்து விடுமா?" என்றெல்லாம் ஆலோசித்துக் கொண்டிருந்தேன்.


திடீரென்று என் யோசனை கலைந்தது. இருளும் நீங்கியது. என் எதிரே இருந்த அறையில் 'பளிச்'சென்று விளக்கு எரிந்தது. உடனே நான் துள்ளி எழுந்தேன். கையில் 'டார்ச்' விளக்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஆவலினால் படபடக்கும் இதயத்துடன் மெல்ல அந்த அறையின் அருகில் சென்றேன். உள்ளே ஒருவித சப்தமும் கேட்கவில்லை. அறைக்குள் போய்ப் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை.

யதேச்சையாக என் கண்கள் சுவரில் இருந்த மின்சார விசையை நோக்கிச் சென்றன. அதைப் பார்த்த கண்கள் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தன! இத்தனை வருஷங்களாக எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருந்த பிசாசை அங்கு கண்டேன்."

இந்த இடத்தில் டாக்டர் சேகர் தாம் கூறிக் கொண்டிருந்த வரலாற்றைச் சற்று நிறுத்தினார். ஆனால் அவருடைய கதையை ரசித்துக் கொண்டிருந்த நண்பர்களோ முடிவைக் கேட்கத் துடித்துக் கொண்டிருந்தனர்.

"டாக்டர், நீங்கள் அந்தப் பேயைப் பார்த்தீர்களா? அது எப்படி இருந்தது? உடனே சொல்லுங்கள்" என்று அவர்கள் அவசரப்படுத்தினர்.


சேகர் ஒரு புன் சிரிப்புடன் அவர்களைப் பார்த்து, "அங்கு பேயும் இருக்கவில்லை, பிசாசும் இருக்கவில்லை. அந்த மின்சார விசையைக் கால்களால் பற்றிக் கொண்டு ஒரு பெரிய வௌவால்தான் தொங்கிக் கொண்டிருந்தது! நான் அதை ஓட்டினதும் அது பறந்து போய்விட்டது. உடனே விளக்கும் அணைந்து விட்டது. நான் 'டார்ச்'சைப் போட்டுக் கொண்டு போய் அந்த விசையை அழுத்திப் பார்த்தேன். அது 'லொட லொட' வென்று ஆடிக் கொண்டிருந்தது. இதுதான் பாழடைந்த பங்களாவில் வசித்த பேயின் மர்மம். ஆனால் அந்த வௌவால்களுக்கு என் நன்றி. அவற்றின் உதவியால்தானே இந்தப் பங்களாவை மலிவான விலைக்கு என்னால் வாங்க முடிந்தது!" என்று கூறிக் கலகலவென்று சிரித்தார். அவருடைய நண்பர்களும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டனர்.




Firestone

பயர்ஸ்டோன் டயர்களுக்கு மீண்டும் வெற்றி!!

இந்தியனுபொலீஸில் 31 அடுத்தடுத்த வெற்றிகள்!!






பீல் உகோவிச் 1954 பந்தயத்தை பயர்ஸ்டோன் டயர்களைக் கொண்டு மணிக்கு 130.84 மைல் வேகத்தில் ஜெயித்தார்



நிபுணர்கள் விரும்பும் டயரைத் தேர்ந்தெடுங்கள்



Firestone

கார் பந்தயத்தில் நிபுணர்களான டிரைவர்கள் மிகவும் **நம்பகமான டயர்களே வேண்டுமென்று வற்புறுத்தி வாங்கி உபயோகிக்கிறார்கள்!** ஆகையால்தான் இந்தியனுபொலீஸில் 31 அடுத்தடுத்த பந்தயங்களில் ஜெயித்த கார்களில் பயர்ஸ்டோன் டயர்கள் பொருத்தப்பட்டிருந்தன. நிபுணர்கள் இந்த உலகப் பிரசித்திபெற்ற பந்தயத்தில் 500 மைல்கள் ஓடுவது சாதாரணமாக 50,000 மைல்கள் ஓடுவதற்குச் சமமென்று கூறுகிறார்கள். அதாவது 5 வருட சராசரி உழைப்பு 4 மணி நேரத்திற்குள் அடைக்கப் பட்டதாகும். பந்தயக் கார் டிரைவர்கள் பாதுகாப்புக்காக பயர்ஸ்டோனையே வாங்குகிறார்கள். நீங்களும் மிகவும் பத்திரமான டயர்களை வாங்கலாம். மிகவும் நீடித்து உழைப்பவை- இன்றே பயர்ஸ்டோன் டயர்களை வாங்குங்கள்.

வருடா வருடம் நிபுணர்கள் பயர்ஸ்டோனையே தேர்ந்தெடுக்கிறார்கள். பந்தய ரஸ்தாக்களில் நம்பகத் தன்மை நிரூபிக்கப்பட்ட, டயர்களான இவைதான் பெரிய ரஸ்தாக்களில் உங்கள் பாதுகாப்புக்கானவை

வாழ்வின் ஒளி

எஸ். என். கே. ராஜன்



"பூங்கோதை!" என்ற சிவகாமு அத்தையின் குரல் வாசற்படிக்கு வெளியே கேட்டது.

சிவகாமு அத்தை என்னை எதற்காகக் கூப்பிடுகிறாள் என்று யோசித்தவாறு என் அறையை விட்டு வெளியே வந்தேன். அப்பொழுது என் தாயாரும் சமையற்கட்டிலிருந்து வெளியே வந்து, "எதற்காகச் சிவகாமு உன்னைக் கூப்பிடுகிறாள்!..." என்று கேட்டு "ஓ! வா, அக்கா!" என்றாள் அங்கு வந்து நின்ற சிவகாமுவைப் பார்த்து.

வாயில் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலை பாக்குடன் கொஞ்சம் புகையிலையைக் கிள்ளிப் போட்டுக் கொண்டு, "நான் பூங்கோதையைக் கூப்பிட வந்தேன். கனகாவின் தலையை வாரிச் சிங்காரிக்கவும், அவளை அலங்கரிக்கவும் பூங்கோதை ஒருத்தியால்தான் முடியும். இன்றைக்குக் கனகாவைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் தேவகோட்டையிலிருந்து வருவதுதான் உங்களுக்குத் தெரியுமே; அடேயப்பா! அவர்கள் எவ்வளவு நுட்பம் பார்க்கிறவர்கள்! எதையும் எளிதில் மெச்சாதவர்களாம். அவர்களுக்கு வேண்டிய அழகான பெண்ணை ஊர் ஊராகத் தேடிப் பார்க்கிறார்களாம். அவர்களுக்குப் பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் பெண் மட்டும் அழகு சுந்தரியாய் இருக்க வேணுமாம்...பூங்கோதை! சீக்கிரம் வாம்மா!" என்று சொல்லி விட்டு அவ்விடம் விட்டகன்றாள் சிவகாமு.

சிவகாமு எங்களுக்கு உறவினளல்ல. ஆனால் மரியாதைக்காக அவளை அத்தை என்றழைப்போம். என் அம்மா அவளை அக்கா என்றழைப்பாள். அவளுடைய மகள்தான் கனகா.

நான் உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டேன். கனகாவைச் சிங்காரிக்க என்னைக் கூப்பிட்டதும் எனக்குக் கர்வம் பிடிபடவில்லை. தங்கள் கைத்திறனை வெளியில் காட்டுவதில் யாருக்குத்தான் விருப்பம் இருக்காது! மேலும் கனகா மிகுந்த அழகி. அழகியை இன்னும் அழகியாகத் திகழ வைக்கப் போகிறேன் ஆனால் யாராவது ஒருத்தியை என்னை அலங்கரித்து அழகு செய்யும்படி கேட்டிருந்தால் அவளுக்கு உண்மையிலேயே கோபம் பொத்துக் கொண்டுதான் வரும். அத்துடன் தன்னை அவமதிப்பதாகவும் அவள் கருதுவாள்.

ஆம்! நான் ஒரு குரூபி. சாபத்தால் விளைந்த அவலட்சணத்தின் அவதாரம்! இத்தகைய அவலட்சணமான ஒரு பெண்ணைப் பெற்றோர்கள் எவ்வாறு கருதுவார்கள்! எனக்கோ வயது பதினெட்டு. என் கலியாணத்தை முடிக்க வேண்டிய முயற்சிகள் தீவிரமாக நடந்தாலும் கலியாணம் மட்டும் முடிந்த பாடில்லை இதன் காரணமாக என் பெற்றோரின் பொறுமை அளவு கடந்து விட்டது. அதை நான் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

கனகாவின் வீடு இன்னும் கொஞ்ச தூரம் தான். அதற்குள் என் உள்ளத்தில் உண்டான கர்வம், ஆணவம் எல்லாம் பறந்தோடி விட்டன! என் இதயம் வேதனையால் வெந்தது

நான் கனகாவின் வீட்டை அடைந்தேன். அங்கே ஒரே சந்தடியும், பரபரப்பும், குழப்பமுமாக இருந்தது. கனகாவும் அவளைச் சூழ்ந்திருந்த பெண்களும் கனகாவின் படுக்கையறையில் இருந்தனர். நான் அறைக்குள் நுழைந்த போது

கனகாவின் கூந்தலை எப்படி வாரி விடுவது என்று பெண்களுக்குள் பெரிய தர்க்கவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அப்பொது என்னைப் பார்த்து விட்டு, "இதோ, சிங்காரிப்பில் கை தேர்ந்தவள் வந்து விட்டாள். நமக்கு இந்த வேலையில் பழக்கமும் இல்லை; அனுபவமும் இல்லை!...... பூங்கோதை! நவநாகரிக அலங்காரங்கள் இன்னின்ன தென்று உனக்குத் தான் தெரியும்...பெண்ணைச் சிங்காரித்து விடு. மாப்பிள்ளை நாகரிகப் பழமாம்!" என்றாள்.

என் கை வேலைப்பாட்டை அவர்கள் வெகுவாகப் புகழ்கிறார்கள் என்பதைவிட, என் அவலட்சணத்தை மறைக்க நான் செய்து கொள்ளும் மிருதியான அலங்காரத்தை மறைமுகமாகக் கேலி செய்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். இருந்தாலும் ஆத்திரப்பட எனக்கு என்ன உரிமை இருக்கிறது! வேதனை கலந்த சிரிப்போடு நான் கனகாவை அணுகி அவளை அலங்கரிக்கும் பணியில் ஈடுபட்டேன்.

** ** **

கனகா அழகும் பதுமையாக விளங்கினாள். அவளுடைய கூந்தலை வாரிக் கொண்டிருந்த பெண் நடுவில் வகிடெடுத்து, இரு புறமும் படிய வாரிக் கட்டியிருந்தாள். நான் அதைக் கலைத்து விட்டு, பக்க வகிடெடுத்து நெற்றி அலையாகத் தெரியும் படி தூக்கி வாரிப் பின்னால் 'பிச்சோடா' போட்டேன்.

"ஆகா! கனகா இப்பொழுது எவ்வளவு அழகாகக் காணப்படுகிறாள்! பூங்கோதை தான் செய்து கொள்ளும் அலங்காரத்தை விட அதிகமாகக் கனகாவுக்குச் செய்து அவளை அழகுபடுத்தினாலொழிய அவளுக்குத் திருப்தியே ஏற்படாது!" என்றாள் ஒரு குறும்புக்காரி.

அப் பேச்சைக் கேட்க எனக்கு வெறுப்பாக இருந்தது. கோபமாக வந்தது. எழுந்து ஓடிவிடலாமா என்று கூட எண்ணினேன். ஆனால் நிந்தனையும் தூஷணையும் எனது பிறப்புரிமை. நான் அவற்றிற்கஞ்சி எங்குதான் ஓடினாலும் மனித சமுதாயத்தை விட்டு ஓடிவிட முடியுமா!

அவர்களது பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாமல் அமைதியாய்க் கனகாவின் அலங்கரிப்பில் என் கவனத்தைச் செலுத்தினேன்.

அலங்காரங்கள் ஒருவாறு முடிவடைந்தன. சிறிது நேரத்தில் கனகா முற்றும் மாறுபட்டவளாய் என் எதிரே நின்றாள்!

மாப்பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்தனர். அவர்களெல்லோரும் சென்று நடுக் கூடத்தை அடுத்திருந்த பெரிய அறையில் அமர்ந்தனர். கடைசியாகப் பெண்ணை அழைத்து வந்தனர். நான் தூர இருந்தவாறு கனகாவைப் பார்த்தேன். அவளுடைய அழகும் அலங்காரமும் என்னையே பிரமிக்க வைத்தன!

இரண்டு பெண்கள் கனகாவை அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டார் அமர்ந்திருந்த அறைக்குள் சென்றனர். அவர்களுக்குப் பின்னால் அவ் வறைக் கதவுவரை எல்லாப் பெண்களும் ஓடினர். ஆனால் அவர்கள் பின் தங்கிக் கதவிடுக்கின் வழியாகவும், ஜன்னல் வழியாகவும் அறைக்குள் எட்டிப் பார்த்தனர். அப்படியில்லாவிட்டால் அவர்கள் வேடிக்கை பார்க்கும் எண்ணத்தைக் கைவிட வேண்டியதுதான்! ஆண்கள் யாரையும் கண் கொட்டாமல் வெறித்துப் பார்க்கலாம். ஆனால் பெண்களாகிய எங்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது! இருந்தாலும் பார்க்க வேண்டும் என்ற அந்த ஆவல் ஆண், பெண் இருவருக்கும் பொது! ஆகையால் எங்களுக்குப் பகிரங்கமாக மறுக்கப்படும் அந்த ஆவலை மறைமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் வழி கதவிடுக்கும் ஜன்னலும்தானே!

"அங்கே உட்கார்ந்திருப்பவர்களில் மாப்பிள்ளை யார்! கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறாரே அவரா! அல்லது தங்கச் சங்கிலி போட்ட கைக் கடிகாரம் கட்டிக் கொண்டிருக்கிறாரே அவரா!" என்று மெல்லிய குரலில் பேச்சுக் கிளம்பியது, என்னைச் சுற்றியிருந்த பெண்களுக்கிடையே.




நானும் அறையினுள் என் பார்வையைச் செலுத்தினேன். கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தவர் சற்று நாணத்தோடு அமர்ந்திருந்தார். ஆகையால், மாப்பிள்ளை அவராகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

பெண்கள் குறிப்பிட்ட மற்றொருவர் மாப்பிள்ளையின் தம்பியாக இருக்க வேண்டும், அவரும் வைத்த கண் வாங்காமல் பார்க்கத் தகுந்த அழகுடையவராக இருந்தார்.

நான் அவர்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏக்க உணர்ச்சி என் உள்ளத்தில் கொந்தளித்தெழுந்து என்னை வேதனைக்குள்ளாக்கியது! திடீரென்று கனகாவின் அக்கா பேசிய பேச்சு என் கவனத்தைக் கவர்ந்தது.

"பூங்கோதையைப் பாரேன்! கண் கொட்டாமல் மாப்பிள்ளையையே பார்க்கிறாள்......! இவளை அழைத்துக் கொண்டுபோய் மாப்பிள்ளைக்கு முன்னால் நிறுத்தி, இவள்தான் மணப் பெண் என்றால் அவர் என்ன செய்வார்!"

கனகாவின் அக்கா பேசிய பேச்சைத் தொடர்ந்தன சிரிப்பொலிகள். அவ்வார்த்தைகளும், சிரிப்பொலிகளும் என்னைக் கொன்றிருந்தால் நான் மனமார வரவேற்றிருப்பேன். சாவை விடக் கொடூரமாக இருந்தது அந்தப் பேச்சு.



அன்று மாலை சிவகாமு அத்தை எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவள் வந்ததும் அம்மா, "கனகாவைப் பார்த்து விட்டு மாப்பிள்ளை வீட்டார் என்ன சொன்னார்கள், அக்கா!" என்று கேட்டாள்.

"ஹூம்! மாப்பிள்ளையின் அழகுக்குக் கனகா ஈடில்லையாம்! அவர்களுடைய கண்களுக்குக் கனகா அழகாய்த் தெரியவில்லை போலிருக்கிறது! அழகு ராணி ஒருத்தி அவர்களுக்கு எங்கே கிடைப்பாளோ தெரியாது!" என்றாள் சிவகாமு அத்தை. ஏமாற்றத்தால் விளைந்த ஏக்கம் அவள் குரலில் ஒலித்தது.

அதைக்கேட்ட என்னால் சந்தோஷமாக இருக்க முடியவில்லை. இருந்தாலும் ஆறுதலால் விளைந்த ஒருவித இன்பம் என் உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. கனகாவின் அழகு அவளுக்கு வெற்றி யளிக்க வில்லை. அவளுடைய அழகின் காரணமாக அவள் வீட்டுப் பெண்கள் அடைந்த கர்வத்தால் என்னை — அவலட்சணம் பொருந்திய வளை — கேலி செய்து, ஏசிச் சிரித்து, என் உள்ளத்தைச் சித்திரவதை செய்தனர். ஆனால் அதே கேலியும் சிரிப்பும் அவர்களுக்கே ஏற்பட்டு என்னைத் தூஷித்ததற்குத் தண்டனை கொடுத்து விட்டது! அறிந்தோ அறியாமலோ அவர்களின் மேல் பழி தீர்த்துக் கொண்ட கடவுளின் சக்திக்கு என் உள்ளம் தாழ்ந்து வணங்கியது. அந்தச் சக்தி என்னையும் கனகாவையும் இப்பொழுது ஒன்றுபடுத்தி விட்டது.

* * *

ஒரு மாதம் கழிந்தது.


ஒரு நாள் இரவு சாப்பிட்டு முடிந்ததும் சமையலறையை ஒழுங்கு படுத்தி விட்டுப் படுக்கையறைக்குள் நுழையும் போது என்னுடைய செவியில் விழுந்த என் தந்தையின் ஆக்ரோஷமான வார்த்தைகள் என்னை மேலும் நகர விடாமல் தடுத்து நிறுத்தி விட்டன.

"போதும் நிறுத்து! உன் மகளுக்கு வேறென்ன தான் எதிர்பார்க்கிறாய்! இதுகூட அவளுடைய எதிர்பாராத அதிர்ஷ்டமாகும்!" என்று ஏதோ பேசிய என் அம்மாவின்மேல் சீறி விழுந்தார்.

"ஹூம்! என் அதிர்ஷ்டமும் அவ்வளவுதான்! அமிர்தமும் என் வாய்க்குப் பட்டால் விஷமாகி விடுகிறது! ஒரு துரதிர்ஷ்டத்தையும் கூடப் பிணைத்து இந்த உயர்ந்த மாப்பிள்ளையை எனக்கேன் கொடுத்தாய், கடவுளே!" என்று புலம்பினாள் அம்மா.

"மூட்டாள்போல் அழாதே! அந்தத் துரதிர்ஷ்டம் ஒன்று சேர்ந்ததால்தான் அத்தகைய உயர்ந்த மாப்பிள்ளை நமக்குக் கிடைக்கிறார். நீ அப்படிப்பட்ட பெண்ணைப் பெற்றிருக்கிறாய்! இப்படியெல்லாம் இல்லா விட்டால் உன் பெண்ணை யார் வந்து கட்டிக் கொள்ளப் போகிறார்கள்!"

கடைசியாக என் தந்தை பேசியதை நன்றாகப் புரிந்து கொண்டேன். கடந்த சில வருஷங்களாக இதுபோன்ற பேச்சுக்களை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் முதலில் பேசியது என்ன! இன்னும் என்ன துரதிர்ஷ்டம் என்னை வந்தடையப் போகிறது! என் தாய் அழுது புலம்பிய அந்த துரதிர்ஷ்டம் பிடித்த உயர்ந்த மாப்பிள்ளை யார்! அது என்ன துரதிர்ஷ்டம்! என்னால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை, எனக்கு மணம் செய்விக்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்பதைத் தவிர.



பம்பாய் நகரத்தைச் சேர்ந்த மாதுங்காவில் சென்ற ஜூன் மீ 10உ பம்பாய், ஸ்ரீ ஜி. வரதன் அவர்களுடைய புதல்வி செள. அலமேலுவுக்கும், திருவனந்தபுரம் ஸ்ரீ ஏ. ஹரிஹரய்யர் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி எச். ஏ. எம். மணிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. நீடூழி வாழ்க மணமக்கள்!

என் காலடிச் சத்தம் அவர்கள் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

மூன்றும் நான் என் கலியாணம் நிச்சயமாகிவிட்டதை அறிந்தேன். ஆனால் மாப்பிள்ளை யார்! என்னைப் பார்க்காமலேயே உடனே மணந்து கொள்ளச் சம்மதித்த கருணையின் அவதார புருஷரைப் பார்க்க என் உள்ளம் துடித்தது. என் ஆவலை யாரும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

மண நாளுக்கு முந்தின நாள் சில சடங்குகள் நடந்தன. எனது அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் அனைவரும் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தனர். இந்தக் குரூபிக்குக் கலியாணமாவது என்று அவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதை அவர்களுடைய பார்வையே தெளிவாக எடுத்துக் காட்டியது!

வெளியே பரபரப்பும் இரைச்சலும் கேட்டது. ஒரு சிலர், "இதோ வந்து விட்டன மாப்பிள்ளை வீட்டார் அனுப்பிய சீர் வரிசைகள்!" என்று பலமாகக் கத்தினர்.

என் சிநேகிதி சரோஜினி அறைக்குள் ஓடி வந்து என்னைப் பார்த்து, "பூங்கோதை! அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வந்திருக்கிறது. கடவுளே! அதை யார்தான் எதிர்பார்த்திருப்பார்கள்! இந்த மாப்பிள்ளைதான் கனகாவுக்குப் போதிய அழகில்லை என்று மணக்க மறுத்தவர்! இந்த உலகத்தில் கற்பனைக்கும் எட்டாத விசித்திர சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன!" என்று கத்திவிட்டு மறுபடியும் வெளியே ஓடிவிட்டாள்.

காலதேவனின் கைகள் என்னைக் கட்டியணைப்பது போல என் இதயம் சில்லிட்டு உறைந்தது! அப்படியானால் அவரா என்னை மணக்கப் போகிறவர்! கனகாவையே அழகற்றவள் என்று ஒதுக்கித் தள்ளியவரா ஒரு அவலட்சணத்தை மணக்கப் போகிறார்! கற்பனைக்கும் எட்டாத சம்பவம் என் வாழ்நாளில் நிகழப் போகிறதா! களங்கமற்ற பூரண நிலவில் கரும்புள்ளியாக இருக்கவா கடவுள் என்னை இதுநாள்வரை ஒதுக்கி வைத்திருந்தார்! இருளும் ஒளியும் ஒன்றாக இணைக்கப்படுமா! இது கனவா! சித்தப் பிரமையா!

கனவுமல்ல, சித்தப் பிரமையுமல்ல என்பதை சரோஜினி என்னைப் பிடித்துக் குலுக்கியதால் அறிந்தேன். அவள் என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ச் சீர் வகைகள் பரப்பி வைக்கப்பட்டிருந்த அறைக்குள் விட்டாள். சிறப்பான விலை மதிப்பற்ற சீர் வரிசைகளைக் கண்டு நான் மூர்ச்சையடைவேன் என்று சரோஜினி எதிர்பார்த்திருப்பாள். ஆனால் வியப்பின் எல்லைகளையெல்லாம் தாண்டியல்லவா நான் இருக்கிறேன்! சரோஜினியின் மூலம் அறிந்த முதல் செய்தியே என்னைச் சொல்லொணா மலைப்புக்குள்ளாக்கி, உணர்ச்சியறச் செய்து விட்டதே!

கலியாணம் மிக ஆடம்பரமாக நடைபெற்றது. கடைசியாக என்னைத் தன் தொல்லைகளிலிருந்து நீக்கிக் கை கழுவும் நோக்கத்தோடுதானோ என்னமோ என் தந்தை பரம திருப்தியாய்ப் பணத்தைப் பணமென்று பாராமல் நீரைப் போல் வாரி இறைத்தார். நான் அவருக்குப் பெரும் பாரமாக இருந்த தென்னமோ உண்மைதான்!

முகூர்த்த நேரத்தில் மாப்பிள்ளை மணவறைக்கு அழைத்து வரப்பட்டார். ஒருத்தியைத் தவிர மற்ற எல்லாப் பெண்களும் மாப்பிள்ளையைப் பார்க்க ஓடினர். ஆனால் அவரைப் பார்க்க மீத மிஞ்சிய ஆவலால் துடித்த அந்த ஒருத்தி மூலையில் மௌனப் பதுமையைப் போல, தக்க சமயத்தை எதிர்பார்த்து அமர்ந்திருந்தாள்.

திருமணச் சடங்கின்போது என் தலையை உயர்த்தி என்னை மனைவியாக ஏற்கக் கருணை கூர்ந்து மனமிசைந்தவரின் முகத்தைப் பார்க்க விரும்பினேன். ஆனால் வெட்கம் என்னைத் தடுத்தது. சற்று உயர்த்திய தலையை மீண்டும் அதிகமாகத் தாழ்த்திக் கொண்டேன்.

மணமக்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளும் சமயம் வந்தது. எங்களிருவருக்குமிடையே வெண்பட்டுத் துணியைத் திரையாகத் தொங்க விட்டனர்.

அப்பொழுது யாரோ ஒருத்தி, "திரையை நீக்கியதும் நன்றாகப் பார்த்துக் கொள். ஆனால் மூர்ச்சை போட்டு விழுந்து விடாதே!" என்று என் காதில் ஓதினாள்.

திரை விலகியது. எனக்கு மாலையிட்டு, மாங்கல்யம் கட்டி, மனைவியாக ஏற்றுக் கொண்டவரை நன்றாகப் பார்த்தேன். கண் குளிரப் பார்த்தேன். அழகு மிகுந்த பணக்கார வாலிபன் என்னை-ஒரு அவலட்சணத்தை-மணக்கத் துணிந்ததன் மர்மத்தை அப்பொழுதுதான் அறிந்தேன்! என் நெஞ்சுக்குள் யாரோ கையை விட்டு இதயத்தைப் பிய்த்தெடுப்பது போலிருந்தது! என் உள்ளம் உறைந்து, இதயத் துடிப்பு டக்கென்று நின்று விடும் போலிருந்தது! ஆனால் என் காதில் யாரோ எச்சரித்தது போல நான் மூர்ச்சை போட்டு விழவில்லை!

நான் என் கணவரைப் பார்த்தபோது அவருடைய கண்கள் என்னை நோக்கித் திரும்பின. எந்தக் கண்ணாடியின் வழியாகக் கனகாவைப் பார்த்து, போதிய அழகில்லை என்று சொன்னாரோ அந்தக் கண்ணாடி அவரது கண்களை அலங்கரிக்கவில்லை! அந்த வெறும் கண்களில் உணர்ச்சி இல்லை! அவரது பார்வை சூன்யமாகக் காணப்பட்டது! ஆம்......அவர் ஒரு அந்தகர்!

முன்பு அவர் கனகாவை வெறுத்தார். காரணம் அவர் கண்களுக்கு அவள் அழகாய்த் தென்படவில்லை. இப்பொழுது அவரே என்னை மணந்து கொண்டார். காரணம் அழகின் ரசிகத் தன்மையை அளவிட அவருக்குக் கண்கள் இல்லை!

** ** **

இரவு வந்தது. இருவரும் ஒன்றாக விடப்பட்டோம். ஓரிரு பெண்கள் கதவிடுக்கிலும், அரை

குறையாக மூடப்பட்ட ஜன்னல் வழியாகவும் உள்ளே எட்டிப் பார்த்து வேடிக்கை செய்து சிரித்துக் கொண்டே சடுதியில் மறைந்தனர். அவர்களது வேடிக்கை விளையாட்டுகளையும் கடந்து அறைக்குள்ளே, திரை மறைவிலே உள்ளம் வெந்துருகும் சோக நாடகம் நடப்பதை அவர்கள் எங்கே அறியப் போகிறார்கள் !

நானும் என் கணவரும் மௌனமாக அமர்ந்திருந்தோம். அவ்வப்பொழுது என் கணவரைக் கடைக் கண்ணால் பார்த்தேன். அவரது முகம் உணர்ச்சியற்று வெறிச்சென்றிருந்தது, அவர் கண்களைப் போல ! இருந்தாலும் அவருடைய வதனம்தான் எவ்வளவு அழகு ! அவரைக் காணக் காண என் உள்ளத்தில் விவரிக்க முடியாத ஒரு வித உணர்ச்சி பெருக்கெடுத்தோடி என்னை வாட்டி வதைத்தது. சந்தோஷப்படுவதா ! துக்கப்படுவதா !—என்றே எனக்குப் புரியவில்லை.

முன்பு கனகாவின் அக்கா சொன்ன கேலிச் சொல் என் நினைவுக்கு வந்தது......" இவளை அழைத்துக் கொண்டு போய் மாப்பிள்ளைக்கு முன்னால் நிறுத்தி, இவள்தான் மணப் பெண் என்றால் அவர் என்ன செய்வார் !"

அவர் என்ன செய்திருப்பார் என்பதை முன்பு நான் கற்பனை செய்து பார்த்தேன். ஆனால் அவளது கேலிப் பேச்சு காரியசித்தியாகியும் என் கற்பனை கற்பனையாகவே நின்று விட்டது ! அப்பொழுது அவள் பேச்சைக் கேட்டுச் சிரித்தனர் அநேகர். இப்பொழுது என் நிலைமையைக் கண்டோ, எள்ளிப்போ சிரிக்கவும், அனுதாபம் கொண்டு அழவும் யாருமில்லை !

ஒரு பெண் தனது அன்புக் கணவரின் நன்மைக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறாள். அவருக்குச் சிறிதளவேனும் துன்பம் வந்தால் அதைக் காணச் சகிக்க மாட்டாள். இதுவே அவளது உத்கிருஷ்டமான அன்பின் நோக்கமும், கடமையுமாகும். ஆனால் எனக்கு நேர்ந்தது அதற்கு நேர் விரோதம். இருள் சூழ்ந்த என் துன்ப வாழ்க்கையினின்று ஒளி நிறைந்த இன்ப வாழ்வுக்கு நான் அழைத்துச் செல்லப்படுகிறேன். ஆயினும் என் துன்பத்தின் நிழல் எனக்குக் கொடுத்துக் காப்பாற்றிய என் அன்பரின் மேல்பட்டு, கிரகணம் பிடிப்பது போலச் செய்து விட்டது !

வெகு நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்த என் கணவர் கிள்ளிட்டிருந்த தம் கைகளால் என்னைத் தொட்டு, "பூங்கோதை ! நீ உன் உள்ளத்தினுள்ளே என்னைத் தூஷித்துச் சாபமிட்டுக் கொண்டிருப்பாய். ஆனால் இதை மட்டும் நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். உன்னிடம் நான் எதையும் உரிமை கொண்டாடிப் பெற விரும்பவில்லை. உன் இன்பங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள உனக்கு விருப்பமில்லையேல் உன் கடமைக்காகக் கூட அப்படிச் செய்யாதே. நீ என் பொருட்டுக் கொஞ்சமும் வருத்தமடையக் கூடாது. உலக பந்தம் எவ்வளவு அற்பமானது என்று இப்பொழுதுதான் உணருகிறேன். இந்த உண்மையை முன்பே நான் உணர்ந்திருந்தால் எனது இருண்ட வாழ்க்கையில் உன்னையும் பிணைத்திருக்க மாட்டேன் !" என்றார்.

அவரை நிந்திக்க எனக்கு உரிமை இருக்கிறதா ! அவரது உடைந்த வாழ்க்கைப் படகில் அவர் கையைப் பற்றி நானும் ஏறிக் கொண்டேன். அவரது பார்வையையும் எனது அழகையும் அபகரித்துக் கொண்டார் கடவுள் ! ஆனால் எல்லா

இன்பங்களையும் நான் அவருக்குக் கொடுப்பேன். நான் அவருக்காகப் பார்ப்பேன். வெளியுலகை அவர் என் கண்கள் மூலம் பார்ப்பார். கடவுளும் மனிதரும் ஒன்று சேர்ந்து எங்களை ஏமாற்றி விட்டனர். ஆனால் நான் அவர்களை ஏமாற்றித் தோற்கடிக்கப் போகிறேன். இந்த நிலைமையிலும் அவர் என் துணையை இன்றியமையாததாகக் கருதும் சந்தர்ப்பங்கள் வாய்க்குமேயானால் அதுவே நான் அடையத் தகுந்த பெரிய வரப் பிரசாதமாகும். அப்பொழுதுதான் என் கவலையும் கஷ்டமும் தீரும்.

மறுநாள் என் கணவருடன் புக்ககம் சென்றேன். அங்கே எல்லோரும் நடந்த அபகாரியத்தை மறந்து என் கணவரது துரதிர்ஷ்டத்தைக் குறித்தோ என்னவோ அழுதனர்.

** ** **

முதலில் சில நாட்கள் எனது புக்ககத்தில் அமைதியற்றுச் சஞ்சல மனத்துடனேயே கழித்தேன். அங்கே காலடி எடுத்து வைத்தது முதல் திகில், திகைப்பு, ஏக்கம் ஆகியவையே பிரதானமாக என் உள்ளத்தில் இடம் பெற்றன. துர்ச்சொப்பனம் கண்டவளின் நிலைமையிலிருந்தேன்.

நாட்கள் கழியக் கழிய அந்த வீட்டுக்கு நான் மருமகள் என்ற ஹோதாவில் அழைத்து வரப்படாமல் என் கணவரின்மேல் பழி தீர்த்துக் கொள்ளும் எண்ணத்தில் அதற்கேற்ற உபகரணமாக அழைத்து வரப்பட்டதை அறிந்தேன்.

என் புக்ககத்தில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் என் கணவர் பெரிய குற்றவாளியாகவே கருதப்பட்டார். அவர் மன்மதனைப் போன்ற அழகுடையவராகவும், மிகுந்த செல்வவந்தரின் வீட்டுப் பிள்ளையாகவும் இருந்தபோதிலும் எளிய வாழ்க்கையையும், நேர்மையான குணத்தையும் பெற்றிருந்தார். இருந்தாலும் அவர் குற்றவாளியாகக் கருதப்படக் காரணம் வேறு. என் கணவர் அவர் தந்தையின் மூத்த தாரத்து மகன். என் கணவரின் தாய் ஏராளமான நிலபுலன்களுக்கும் சொத்துக்கும் சொந்தக்காரரின் ஒரே மகள். ஆகையால் என் கணவரின் பாட்டனும், தாய் தந்தையரும் இறக்கவே அச் சொத்துக்கு என் கணவரே அதிபதியானார். என் கணவரின் சிறிய தாயார் ஓர் ஏழையின் மகள். அவளது அசாதாரண அழகுக்காகவே என் மாமனார் அவளை இரண்டாந்தாரமாக மணம் செய்து கொண்டு வந்தாராம். இப்பொழுது அவளது ஆதிக்கத்துக் குட்பட்ட எல்லோரும் சொத்துக்கு அதிபதியான என் கணவரைப் பழி தீர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனராம். அதை நிறைவேற்றுவதற்காக என்னை அவருக்கு மனைவியாக்கினார்களாம். இது ஒருவிதமாக என் காதில் விழுந்த வதந்தி.

எங்களுடன் வசித்து வந்த உறவினருள் ஒருத்தி பேச்சோடு பேச்சாக என்னிடம் சொன்னதாவது: என் கணவர் தன் மாற்றாந் தாயின் உறவுப் பெண்ணை மணந்து கொள்ள மறுத்தாராம். அந்தப் பெண் மிக்க அழகியாம். அதன்பொருட்டு அவர்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள என்னை அவருக்கு மணம் செய்வித்தார்களாம்.

** ** **

ஒரு நாள் இரவு சாப்பிட்டானதும் என் கணவருக்கு வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர், "பூங்கோதை! நீ வந்ததிலிருந்து என் கவலைகளையெல்லாம் மறந்தேன். ஆனால் உன்னை என் கண்ணாரக் காண முடியவில்லையே என்கிற கவலை மட்டும் நிரந்தரமாய் என் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறது!" என்று கூறினார்.

கடவுளே! என்னைப் பார்க்க இயலாமற் போனதை அவர் கவலை என்று குறிப்பிடுகிறாரே! உடனே நான் சமாளித்துக் கொண்டு, அவரைப் பார்த்து, "நீங்கள் என்னைப் பார்க்க முடியாமல் இருக்கும்வரை நல்ல காலம்தான்! நான் அழகற்றவள்! அவலட்சண சொரூபி!" என்றேன்.

உடனே அவர் என்னைத் தன்னருகில் இழுத்து அணைத்துக் கொண்டு, "இல்லை, பூங்கோதை! நான் அதை நம்ப மாட்டேன். நீ அழகி என்று தான் எல்லோரும் சொல்லுகிறார்கள். அதே போலத்தான் என் பார்வையற்ற கண்களுக்கு மானசீகமாகத் தென்படுகிறாய். கன்னிரவின் பூரண மதிபோல நீ பிரகாசிப்பதை என் சூன்யமான பார்வை உணர்கிறது. பயங்கர இரவின் முடிவைத் தெரிவிக்கும் விடி வெள்ளியைப் போல நீ மின்னுகிறாய். நீ அழகற்றவளாக இருக்கவே முடியாது! என் அதிர்ஷ்டஹீனத்தையும் அழகுள்ளதாக்கி விட்டாய் நீ!" என்றார்.

அவரது பிடியிலிருந்து நான் எப்படியோ தப்பிச் சென்றேன். என் உடல் பதறியது. உள்ளம் வேதனையால் துடித்தது. அப்படியானால் ஒரு பொய்யிலிருந்தா என் கணவரின் அன்பையும் எல்லையற்ற இன்பத்தையும் அடைந்து வருகிறேன்! என்னை அழகி என்று எண்ணி என் மீது அன்பு கொண்டிருக்கிறார் என் கணவர். அத்தகைய அன்புக்கு நான் பாத்திரமானவளா!

நான் அவ்வறையை விட்டோடி, தரைமீது விழுந்து அழ ஆரம்பித்தேன். எனக்கு மனம் விட்டு அழக்கூட நேரமில்லை. என் கணவர் என்னைக் கூப்பிட்டார். . எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டே அவரிடம் சென்றேன்.

நாட்கள் கழிந்தன. என் கணவரின் நிழல் போல அவருடன் இணைந்து ஒவ்வொரு விதத்திலும் அவருக்குத் தேவையான இன்ப மனோரதங்களைப் பூர்த்தி செய்து வந்தேன். அவருக்குப் புஷ்பங்களின்மேல் அலாதிப் பிரியம். ஆகவே நாங்கள் இருவருமாகச் சேர்ந்து ஒரு சிறு பூந்தோட்டத்தை நிர்மாணித்தோம். நாங்களே பூச்செடிகளைக் கண்காணித்தோம். புஷ்பங்களின் எழில் மிகுந்த வர்ண ஜாலங்களை அவர் காணா விட்டாலும் மலரின் மணம் அவரைப் பரவசப் படுத்தியது. வண்ண மலர்களின் எழிலை அவருக்கு வர்ணிப்பேன். காலையிலும் மாலையிலும் அவருக்குப் புஸ்தகங்களைப் படித்துக் காட்டுவேன்.

நாளுக்கு நாள் அவரது முகத்தில் ஆனந்தக் களிப்புத் தாண்டவமாடியது. ஆனால் என்னைப் பற்றிய அவரது அறியாமையால் விளைந்த ஆனந்தத்தைக் காணக் காண என் கண்கள் ரத்தக் கண்ணீரை வடிக்கும். நான் அவரை ஏமாற்றிக் கொண்டு வருகிறேன் என்பதை நினைக்க நினைக்க என் உள்ளம் பனிக்கட்டி போல் உறைந்து விடும். ஆனால் என்னால் என்ன தான் செய்ய முடியும்! நான் சொன்ன என் அழகைப் பற்றிய உண்மையை அவர் நம்பாதது என் குற்றமா! அவர் தவறான வழியில் செலுத்தப் படுவதற்கு நானா பொறுப்பாளி! அவருக்கு நான் எந்த விதத்திலும் துரோகம் நினைத்தவ ளல்ல என்பதைக் கடவுளே அறிவார்!

ஒரு நாள் மாலை வியாபார விஷயமாகத் தன் ஆட்களுடன் பேசிவிட்டு என் அறைக்கு வந்தார் என் கணவர். வந்தவர் சோபாவில் உட்கார்ந்து, "முடியாத காரியத்திலும் மனிதன் நம்பிக்கையை இழப்பதில்லை, பூங்கோதை" என்றார்.

"முயற்சி திருவினையாக்கும் என்பதை மறந்து விட்டீர்களா! ஆனால் எதைப்பற்றிச் சொல்லுகி றீர்கள் என்று எனக்குப் புரிய வில்லையே!" என்றேன் அவரை அணுகி.

"என் சிநேகிதன் ஒருவன் சென்னையில் உள்ள ஒரு டாக்டரைப் பற்றிச் சொன்னான். அவர் என்னைப்போல ஒருவரைக் குணப்படுத்தி யிருக்கிறாராம். அந்த டாக்டரை இங்கே வர வழைக்கலாமா, அல்லது சென்னைக்கே போக லாமா என்று யோசிக்கிறேன்!" என்றார்.

முடிவாகச் சென்னைக்கே போவதென்று நிர் மானித்தோம். வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு இரண்டு வேலைக்காரர்களுடன் புறப் பட்டோம்.

சென்னையை அடைந்து டாக்டரிடம் சென் றோம். அவர் என் கணவரின் கண்களைப் பரி சோதித்தார். பரிசோதித்து விட்டு, ஒரு வாரம் வரை கண்களுக்கு மருந்து ஊற்றி, பிறகு ஆப ரேஷன் செய்தால் கண் பார்வையைத் திரும்பப் பெறலாம் என்று உறுதி கூறினார்.

அதேபோலச் சிகிச்சை ஆரம்பமானது. என் னுடைய மனப்போராட்டத்தை மறைத்து வைத் துக் கொண்டு என் கணவருக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்து வந்தேன்.

அன்று முதல் என்னுடைய கணவர் வேறு எதைப் பற்றியும் பேசுவதையோ, எண்ணு வதையோ விட்டு விட்டார்.

"பூங்கோதை! நான் பார்வையை மீண்டும் பெற்றால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்திருப்பாயல்லவா! எப்படி இருக்கும்! சொல்!" என்று அடிக்கடி கேட்பார்.

ஆனால் எனது கற்பனைக்கும், என் கணவர் கருதும் கற்பனைக்கும் எவ்வளவு வேற்றுமை என்பதை அவர் அறிவாரா!

என் வாழ்நாளில் காதலையோ, அன்பையோ இன்னதென்றே அறியாது வாழ்ந்த காலமும் இருந்தது. எனக்கு இன்பம் தந்ததெல்லாம் கடவுளின் சிருஷ்டிகளான காற்றும் வானவெளி யும்தான்! பிறகு என் வாழ்க்கையில் ஒரு புரட்சி ஏற்பட்டு, விதி சதி செய்து என்னைப் படுகுழியில் தள்ள எத்தனிக்க நான் அதை மீறி, கண்ணிழந்த கணவனைக் கைப் பிடித்து, இன்ப லோகத்தை நோக்கிப் பிரயாணம் செய்யலானேன். அந்த அன்பு வாழ்க்கை இன்பக் கனவைவிட மேலான தாக இருந்தது! கரியைச் செதுக்கி வைரமாக்கு வதைப்போல என்னை நல்வாழ்வு கொண்ட பெண் ணாக்கினார் என் கணவர். ஆனால் இப்பொழுது மீண்டும் விதி தன் சதியைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்து விட்டதா! இதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை!

என் கணவரின் கண்களுக்கு மருந்துப் பிர யோகம் முடிந்த பிறகு ஆபரேஷன் செய்து கட்டுக் கட்டினார் டாக்டர். அதே நிலைமையில் மூன்று நாட்கள் இருக்கவேண்டு மென்றும், நான்காம் நாள் கட்டை அவிழ்க்க வேண்டும் என்றும் கூறினார்.

அந்த நாள் வந்தது. அன்று காலையிலிருந்து என் கணவரின் அறைக்குள் நான் நுழையவே இல்லை. ஒரு நர்ஸ் அவருக்கு வேண்டிய சௌகரி யங்களைக் கவனித்து வந்தாள். வேறு சந்தர்ப்பமாக இருந்தால் அப்படி என் கணவரைக் கவனித்துக் கொள்ள ஒரு நர்ஸை விட்டிருக்க மாட்டேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டு மென்றே அவரை விட்டு விலகியிருக்க விரும்பினேன்.

நர்ஸ் என்னிடம் வந்தாள். "உங்களை அழைத்து வரும்படி உங்கள் கணவர் என்னை அனுப்பினார்" என்று சொன்னாள்.

என் உடல் பதறியது. கால்கள் உதறலெடுத் தன. இதயம் படார் படார் என்று அடித்துக் கொண்டது. இனி வரப்போகும் அதிர்ச்சியி லிருந்து என்னைக் காப்பாற்ற யாராலும் முடி யாது! சாவைக் காட்டிலும் துன்பத்தைக் கொடுக்கப் போகும் ஆபத்தை எதிர் கொண் டழைக்க நானே துணிந்து செல்ல வேண்டி யதுதானா!

நான் சென்றேன். தூக்கு மரத்தை நாடிச் செல்லும் குற்றவாளியைப் போல என் கணவரின் அறையை நோக்கிச் சென்றேன். வாசற்படியை அடைந்தேன். என் கணவர் என் பக்கம் முது கைக் காட்டி உட்கார்ந்திருந்தார்.

காலடிச் சத்தத்தைக் கேட்டு அவர் திரும்பிப் பார்த்தார். அவருடைய பார்வை என் மீது விழுந்தது. மகிழ்ச்சியால் என் உள்ளம் பூரிப் படைந்தது. ஆனால் அடுத்த கணம்! கடவுளே! அந்தப் பார்வையில் நான் கண்டது என்ன! நான் சிறுமியா யிருந்தபோது, ஒரு கதை யில் தேவதை ஒன்று யார் யாரைப் பார்த் ததோ அவர்களெல்லாம் கல்லாய்ச் சமைந் தார்கள் என்று படித்திருக்கிறேன். அதே போல என் கணவரின் பார்வை என்னைக் கல்லாய்ச் சமைத்து விட்டது! பார்வையைத் தொடர்ந்து அவரது பேச்சு இதயத்தைப் பனிக் கட்டிபோல உறையச் செய்து விட்டது.

"என் மனைவியை அழைத்து வரும்படி நான் சொல்ல வில்லையா, ஸிஸ்டர்!" என்று நர்ஸைப் பார்த்துக் கடிந்து கொண்டார்.

"அதோ நிற்கிறாரே தெரியவில்லையா!" என்றாள் நர்ஸ்.

அப்பப்பா! என் கணவரின் முகத்தை அப்பொழுது என்னால் பார்க்க முடியவில்லை.

மேலும் என்னால் அங்கே நிற்க முடியவில்லை, அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. பதறி நடுங்கிய கால்களுடன் அவ்விடம் விட்டோடி, நாங்கள் தங்கியிருந்த வீட்டையடைந்து காலியாக இருந்த அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டேன்.

தற்கொலை செய்து கொண்டவர்கள் நரகத்தை அடைவார்கள் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவள் நான். ஆனால் நான் நரகத்தை விடக் கேவலமான துன்பங்களை ஏற்கனவே அனுபவித்தாகி விட்டது. நரகத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சங்கூட பயமில்லை. தற்கொலை செய்து கொள்ளத் தக்க சாதனங்கள் அந்த அறையில் ஏதாவது இருந்திருந்தால் கண்டிப்பாக நான் என் முடிவைத் தேடிக் கொண்டிருப்பேன்.

உணர்ச்சி மிகுந்து தரையின் மேல் திடீரென்று விழுந்தேன். எவ்வளவு நேரம் அது போலக் கிடந்தேன் என்று எனக்கே தெரியாது! சுய உணர்வு பெற்றுக் கண்களைத் திறந்த போது என் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. என் உள்ளத்தில் அந்தகாரம் நிறைந்திருந்தது போலவே அந்த அறையிலும் அந்தகாரம் சூழ்ந்திருந்தது!

மெள்ள எழுந்து அறையை விட்டு வெளியே வந்தேன். வீட்டை விட்டு வெளியேறினேன். எங்கே போவதென்றோ, என்ன செய்வதென்றோ, நான் யோசிக்கவில்லை. என்ன ஆபத்து வந்தாலும் நான் சகித்துக் கொள்ளச் சித்தமாயிருந்தேன். ஆனால் என் கணவரின் கட்டெரிக்கும் பார்வை மட்டும் என் மேல் விழ நான் விரும்பவில்லை.

நான் நடந்து கொண்டே இருந்தேன். என்னை அன்புடன் நேசிக்கவோ, என் மேல் அக்கறை கொள்ளவோ யாருமில்லை என்பதை அறிந்தேன். நான் யாருக்காக வாழ்ந்தேனோ, யாருக்காக என்னையே தியாகம் செய்து கொண்டேனோ, யார் என்னை அன்புடன் அரவணைத்தாரோ அவர் கூட என்னை என் அவலட்சணத்தின் காரணமாக வெறுத்துத் தள்ளி விட்டார்.

* * *

மீண்டும் கண் விழித்த போது பஞ்சணை மெத்தையின் மீது படுத்திருப்பதைக் கண்டேன். என் அருகில் ஒரு கிழவரும் கிழவியும் அமர்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நான் அங்கு வந்த விதத்தைக் கேட்டேன், நடுப்பாதையில் மூர்ச்சையுற்று விழுந்து கிடந்ததாகவும் எடுத்து வந்து தங்கள் வீட்டில் படுக்கையில் கிடத்தியதாகவும் கூறினார் கிழவர்.

என் வரலாற்றைக் கேட்டனர். பதில் அழுகை தான் பீறிட்டது எனக்கு. மேலும் வற்புறுத்தவில்லை அவர்கள்.

ஓரிரண்டு நாட்களில் நான் அடைந்த அதிர்ச்சியினின்றும் தேறி முற்றும் ஆறுதலடைந்தேன். கிழவரையும், அவரது மனைவியையும் தவிர வேறு யாரும் அவர் வீட்டில் இல்லை. அவர்கள் என் மீது அன்பும் அனுதாபமும் கொண்டனர். ஒரு அனாதைக்குப் புகலிடம் தந்தனர்.

நாட்கள் நகர்ந்து, மாதங்கள் மாறின. என் உள்ளத்தில் வெந்து போயிருந்த வேதனைப் புண் கொஞ்சம் கொஞ்சமாக ஆற ஆரம்பித்தது.

நான் கிழவரிடம் எனக்கு ஒரு வேலை தேடித் தரச் சொன்னேன்.

"கண் இழந்தவருக்குத் தாதியாக இருக்கப் பழகியவள். அது போன்ற வேலை எனக்கொன்று கிடைத்தால் நன்றாக இருக்கும்!" என்றேன். பார்வை இழந்தோரிடையே எனது அவலட்சணத்தைச் சுலபமாக மறைத்திருக்கலாமல்லவா!

"ரொம்பவும் நல்லது! சிகிச்சைக்காக வெளியூரிலிருந்து வந்திருக்கும் ஒரு பணக்கார அந்தகருக்குத் தாதி ஒருத்தி தேவை என்று பத்திரிகையில் பார்த்தேன். அங்கே சென்று விசாரிக்கலாமா!" என்றார் கிழவர்.

நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன். இருவரும் பத்திரிகையில் கண்ட விலாசத்துக்குச் சென்றோம். தாதி ஒருத்தி தேவை என்று விளம்பரப்படுத்திய அந்த அந்தகரைப் பார்த்தேன்.

சதா சர்வகாலமும் யாருடன் பழகி வந்தேனோ, யாருக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டேனோ, கடைசியாக யாருடைய பார்வையால் சுட்டெரிக்கப்பட்டு அஞ்சி ஓடிவந்தேனோ அவரே அந்த அந்தகர்!

"என்னம்மா அப்படிப் பார்க்கிறாய்!" என்றார் கிழவர்.

மயக்கத்திலிருந்து தெளிவடைந்தது போலிருந்தது எனக்கு!

என் கணவருக்கருகில் மற்றொருவர் அமர்ந்திருந்தார். அவர் நான் பார்த்திராத புதியவராக இருந்தார். அவர் கிழவரிடம் நான் வேலையை ஒப்புக் கொள்வதைப் பற்றிக் கேட்டார். கிழவர் தகுந்த பதில் சொல்லித் திருப்திப் படுத்தினார். பிறகு அவர் எழுந்து அறைக்கு வெளியே சென்றார்.

நான் அவரைப் பின் தொடர்ந்து சென்று, "இம்மாதிரி இவர் எப்பொழுதிலிருந்து கஷ்டப்படுகிறார்!" என்று கேட்டேன்.

"ரொம்ப நாளாக! ஒரு தடவை பார்வை வந்தது. ஆனால் தவறான மருந்தை உபயோகித்ததால் மீண்டும் பார்வை இழந்து விட்டார்!" என்றார்.

நான் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. வாய் திறந்தால் உணர்ச்சி மிகுதியில் 'ஓ' வென்று அழுது விடுவேனோ என்று பயந்தேன்.


அன்று மத்தியானம் என் கணவருக்கு ஆகாரம் எடுத்துக் கொண்டு போனேன். ஆகாரத்தை அவருக்கு முன்னால் வைத்தபோது அவர், "பூங்கோதை!" என்றார்.

என் உடல் சிலிர்த்தது. சட்டென்று அவரது பாதங்களில் விழுந்து, "என்னை இன்னாரென்று எப்படி அறிந்தீர்கள்!" என்று கேட்டேன் நாத் தழு தழுக்க.

"முன்பு எப்படி அறிந்தேனோ அதே போலத் தான்! உன் காலடி ஓசை எனக்குத் தெரியாதா! நீ வருவதையும் போவதையும் நான் உணரமாட்டேனா! நீ எனக்கு முன்னால் பதுமை போல் நின்றாலும் அது கூட எனக்கு நன்றாகத் தெரியும்! குருடனுக்குப் பார்வை மங்கி விட்டாலும் உணர்ச்சி மங்குவதில்லை, பூங்கோதை!" என்றார் புன்னகையுடன்.

நான் அவரருகில் அமர்ந்து, "என்னை மன்னித்து விட்டீர்களா!" என்றேன்.

அவர் சிரித்தார். என் தலையை வருடிவிட்டு, "எதற்கு மன்னிப்பு! உன்னை இழந்த பிறகுதான் உன்னுடைய உண்மையான மதிப்பை அறிந்தேன். எனது பார்வையைக் காட்டிலும் நீ எவ்வளவோ மேலானவள்! நீ என் வாழ்வின் ஒளி. உன்னைப் பழித்த பார்வை இனி எனக்கு வேண்டாம், பூங்கோதை!" என்றார் உணர்ச்சி ததும்ப.


The Famous
FOURSOME
OF THE
FUJI
FAMILY!
AT YOUR BECK & CALL
TO SERVE ONE & ALL!
Fuji
Trade Mark
Verily the ideal films
for picturising ideal
subjects on FUJEX
quality paper.
FUJI
NEOPAN SS 120 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 620 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 127 .... Rs. 1. 14. 0
NEOPAN SS 35 mm.
20 exp. Cartridge ... Rs. 2. 13. 0
32° Sch.
FUJI NEOPAN
FUJI FILM
35 mm FUJI FILM
The Best From Modern Japan!
SOLE DISTRIBUTORS:
CHOWGULE & CO., (HIND) LTD.
Bombay P.O. Box 1478 New Delhi P.O. Box 486 Calcutta P.O. Box 8943 Madras P.O. Box 1743


நீண்டு பெருகும் கூந்தலுக்கு
கேசவர்த்தினி
ஒன்றே
கண்டைத் திருங்கள். இனி கூந்தல் உதிர வேண்டாம். தலை அரிப்பும் இனி வேண்டாம். அகால நரை தாமதிக்கட்டும். நரைக்கு என்ன அவசரம்? வாடின கூந்தல் கேசவர்த்தினியின் உதவியால், புது அழகுடன் திகழட்டும். பளபளப்பான புதுக் கூந்தல் பெருகட்டும்.
கேசவர்த்தினியினுல்
கூந்தல் புத்துயிருடன் விளங்கட்டும்
ஷாம்புவினுல் தலை சுத்தமாயும் பரிமளமாயும் ஆகட்டும்
கேசவர்த்தினி அணு 14. ஷாம்பு அணு 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.
கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்

உறுதியான
எதிர்ப்பு சக்தி



நீங்களும்
பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதன் மூலம் தேக வலிமையைப்பெருக்கி, சோகை, ஜலதோஷம், இருமல் மற்றும் எந்த நோயும் வராமல் தடுக்கும் சக்தியை பெறுவீர்கள். நிரூபிக்கப்பட்ட குணம் பொருந்திய இந்த டானிக்கில் போஷாக்கு அளிக்கும் அம்சங்கள் ஏராளமாக இருப்பதால், உங்களுக்கு உபரியாக தேவையாயிருக்கும் உறுதியான எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும்.

குழந்தைகளுக்கு உடல் வலிவும் ஆரோக்யமும் அதிகரிக்க உதவுவதிலும் பிரசித்திபெற்றுள்ள இந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்டு சாப்பிட ருசியானதுங்கூட. இன்றே வாங்குங்கள்.

WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களை தெம்புடன் வைத்திருக்கும்

NAS 72 53



காமிராமென் கண்ணாயிரம் என்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களோ என்னமோ? அந்த நாட்களில் அவர் பெயர் சினிமா உலகில் ரொம்பப் பிரசித்தம். காமிராவை எங்கெங்கெல்லாமோ வைத்து, எத்தனையோ வித கோணங்களில் படம் பிடித்து சினிமா ரசிகர்களின் உள்ளத்தில் அதிசய உணர்ச்சியையும் பரபரப்பையும் உண்டாக்கி யிருக்கிறார். அதனால் சினிமா நடிகர்கள், நடிகைகள் தாங்கள் நடிக்கப் போகும் படத்துக்குக் காமிராமென் கண்ணாயிரம் என்றால் முன் பணம் கொஞ்சம் கூட வாங்கிக் கொள்ளாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வந்தனர்.

இப்படிப்பட்ட கண்ணாயிரம் பெரும் பொருள் சேர்த்து விட்ட பின்னரும், கல்யாணம் என்ற பந்தத்தில் ஈடுபடாமலே இருந்தார். வெகு அருமையாகக் காதல் கட்டங்களை எடுத்துப் புகழ் பெற்றிருந்த அவர் தாம் மட்டும் அந்தக் காதல் நோய்க்கு உள்ளாகாமல் தப்பித்து வந்தார். ஏன், காதலாவது கத்திரிக்காயாவது என்று எள்ளி நகையாடி வந்தார்!

காதல்தான், பாவம், எத்தனை நாள் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கும்? கண்ணாயிரத்தின் கேலியை அதனால் பொறுக்க முடியாமல் போய் விட்டது! எப்படியாவது இந்த மனுஷனைப் பழி தீர்த்துக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று தீர்மானித்து விட்டது. அது தன்பழி வாங்கும் படலத்துக்குப் பிரபல சினிமா நடிகை கனகாம்புஜத்தை அமர்த்திக் கொண்டது!

கனகாம்புஜம் அந்த நாட்களில் நல்ல நடிகை என்று பெயர் எடுத்திருந்தாள். அவளுக்கு எந்த வேஷம் கொடுத்தாலும், அதற்கு ஏற்ப உணர்ச்சியோடு நடிப்பவள் என்று புகழ் பெற்றிருந்தாள். ஷூட்டிங்குக்கு வருவதிலும் மற்ற மற்ற நடிகைகள் போல் வராமல் இருந்து விடுவது, காலதாமதம் செய்வது போன்ற காரியங்களில் ஈடுபட மாட்டாள். சொன்னபடி சொன்ன நேரத்துக்கு வந்து விடுவாள் என்று பெயர் வாங்கியிருந்தாள். ஏன், இப்படி நல்ல குணங்கள் வாய்க்கப் பெற்ற நடிகை சினிமா உலகில் பார்ப்பதே அதிசயம் என்று அந்தத் துறையில் ஈடுபட்டவர்களே பேசிக் கொண்டார்கள். முதலில் கண்ணாயிரம் இதையெல்லாம் நம்பவில்லை. அவர் தம் கண்ணாலேயே கண்டு தம் காதாலேயே கேட்டு, தம் மூளையாலே நிர ஆலோசித்து ஓர் முடிவுக்கு வந்தால்தான் எதையும் நம்புவார். அவ்வாறு கனகாம்புஜத்தைப் பற்றி அறியும் அரும்பேறு வெகு சீக்கிரத்திலேயே வாய்த்தது.

பர்மாவிலும் யுத்தம் பரவும் என்று தோன்றவே, தாய் நாட்டுக்குத் திரும்பிய செட்டியார்களில் ஒருவர் தமது பணம் 'வங்கி' (பாங்கி)யில் சும்மா முடங்கிக் கிடப்பதில் பயனில்லை என்று சினிமா பிடிக்க ஆரம்பித்தார். அதற்கு முதல்தர காமிரா

மென் கண்ணாயிரத்தையும், சினிமா நட்சத்திர உலகில் ஜோதியாகப் பிரகாசித்த கனகாம்புஜத்தையும் முதன் முதலில் ஒப்பந்தம் செய்துகொண்டார். பிறகு மற்ற நடிகர்கள், நடிகைகள், கதை, வசனம், பாட்டு முதலியவை ஏற்பாடாயின. சரியாக ஆறு மாதம் கழித்து ஷூட்டிங்குக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கனகாம்புஜம் 'செட்'டுக்கு வந்தால் கண்ணாயிரம் தமது வேலை சுலபமாக இருப்பது போல் உணர்ந்தார். மற்ற நடிகைகள் போல் அல்லாமல், காமிராவுக்கு வசதியாகக் கண்ணாயிரம் எப்படியெல்லாம் நிற்கச் சொல்கிறாரோ அப்படியெல்லாம் நின்று அவருக்கு அதிக சிரமம் கொடுக்காமல் நடித்தாள் கனகாம்புஜம். கண்ணாயிரம் தமது சினிமா உலக அனுபவத்தில் இவ்வளவு சூட்சுமமாகத் தமது வார்த்தையைப் புரிந்துகொண்டு நடித்த நட்சத்திரத்தையே பார்த்ததில்லை. அதுவே அவருக்குப் பெரிய அதிசயமாயிருந்தது!

பிறகு ஒரு நாள், காமிரா முன் நிற்கவைத்து, கனகாம்புஜத்தைக் காமிராவின் பூதக் கண்ணாடி மூலம் பார்த்தபோது, அவர் உள்ளத்தில் ஏதோ ஒருவித சலனம் ஏற்பட்டது. பிறகு தமது கண்களைக் காமிராவிலிருந்து எடுத்து நேர்முகமாகவே பார்த்தார். அப்போது கனகாம்புஜம் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நாணிக் கோணிக் கொண்டு நின்றாள்!

இத்தகைய அனுபவம் பல நாட்கள் ஏற்பட்டது. 'இதன் காரணம் என்ன?' என்று ரொம்ப தூரம் யோசித்தார். அந்த யோசனையுடன் பட வேலைகளும் மும்முரமாக நடந்து வந்தன. கடைசியில் படப் பிடிப்பு முடியும் சமயமும் நெருங்கி விட்டது. ஆனால் கனகாம்புஜத்தின் பார்வையிலுள்ள ரகசியத்தையும், அது தன் உள்ளத்தில் ஏற்படுத்தும் சலனங்களின் காரணத்தையும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகவே, ஒருநாள் காலை நடிகை கனகாம்புஜத்தின் வீட்டுக்குப் போனார் காமிராமென் கண்ணாயிரம்.

எதிர்பாராத விதமாகக் கண்ணாயிரம் தன் வீடு தேடி வந்ததில் கனகாம்புஜம் அடைந்த ஆனந்தமும் குதூகலமும் கொஞ்ச நஞ்சமல்ல. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ள முடியாமல் ஏனோ நாணம் தடுத்தது.

நூறு ஆண்பிள்ளைகள் பார்த்துக் கொண்டு சுற்றி நிற்க, பெரிய மின்சார விளக்குகள் சூரிய வெளிச்சம் போல் ஒளி வீச, வெட்கம் நாணம் ஏதும் உணராமல் நடித்திருக்கிறாள் கனகாம்புஜம். அப்பேர்ப்பட்டவளை அன்று ஏனோ வெட்கம் பிடுங்கித் தின்றது.

இருந்தாலும் பழக்கத்தில் ஏற்பட்ட தைரியம் காரணமாக முகத்தை ஒரு மாதிரி சரியாக வைத்துக் கொண்டு அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

கண்ணாயிரம், சினிமா நட்சத்திரம் கனகாம்புஜத்தின் அவஸ்தையைக் கொஞ்சமாகிலும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. வந்ததும் வராததுமாகத் தாம் வந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

"கனகா! நான் ஒரு முக்கியமான விஷயத்தை உன்னிடம் தெரிவிக்க வந்திருக்கிறேன்..." என்றார்.

"என்னங்க அது?" என்று குரலில் குழைவுடன் கேட்டாள் கனகாம்புஜம்.

"நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்" என்றார் கண்ணாயிரம்.

"நானும்தான்" என்றாள் கனகம்.

கண்ணாயிரத்துக்குத் தூக்கி வாரிப்போட்டது. இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. முகத்தில் அசடு வழிய ஆரம்பித்து விட்டது.

"கனகா! நான் உன்னை யல்லவோ கல்யாணம் பண்ணிக் கொள்வதாகத் தீர்மானித்திருந்தேன்!" என்றார் கண்ணாயிரம்.




"காணும்தான்" என்று இழுத்தாள் அவள் வெட்கத்தினால் தலையைக் குனிந்தபடி.

இதைக் கேட்டாரோ இல்லையோ, கண்ணுயிரத்தின் இதயம் அப்படியே நெகிழ்ந்து போய் விட்டது. அவர் முகத்தில் தோன்றியிருந்த ஏமாற்ற பாவம், அப்படியே எதிர்பாராதவிதமாக ஆனந்த பாவமாக மாறி விட்டது! அவருக்கு ஒரு துள்ளுத் துள்ளி வான் முகடு முட்டும் வரை குதிக்க வேண்டும் போலிருந்தது.

"கனகம், நீ என்னையா கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாய்? என்னையா?...என்னையா...?" மேலே அவருக்கு வார்த்தை ஓட வில்லை.

இதற்கு மேல் அனாவசியமாக வளர்த்துவானேன்? விரைவிலேயே கனகாம்புஜத்துக்கும் கண்ணுயிரத்துக்கும் ஒரு நல்லநாளில் விவாகம் நடந்தேறியது. புது மண மக்கள் இருவரும் சினிமா உலகத்தையே மறந்து ஓராண்டு காலம் காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரிவரை உல்லாசப் பிரயாணம் செய்து இன்பமாகக் காலங் கழித்தனர். பிறகு அவர்களுக்கு ஓர் உண்மை மெள்ளப் புலனாகத் தொடங்கியது. அதாவது தாங்கள் இருவரும் இளமையில் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் இந்த ஓராண்டில் பெரும் பகுதி கரைந்துவிட்டது. இனி இருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு பாடுபட்டு முன்னுக்கு வர முயல வேண்டும் என்பதுதான் அது.



'எந்த வழியில் பாடு படுவது என்று யோசித்தனர். இருவருக்கும் மறுபடியும் படாதிபதிகளிடம் கைகட்டிச் சேவகம் செய்ய விருப்பமில்லை. பின் என்ன வேலை செய்வது? சினிமாத் தொழில் தவிர, வேறு தொழில் செய்து பழக்கமில்லையே! ஆகவே, சினிமாத் தொழிலைவிட வேண்டும் என்று விரும்பினால் கூட விட்டு விடுவதற்கு அவர்களுக்கு வழியில்லாமல் போய்விட்டது.

கடைசியில் தாங்களே படாதிபதிகள் ஆகி விடுவது என்று தீர்மானித்தார்கள். அதனால் பிறரிடம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமு மில்லாமற் போய் விட்டது. கூடவே தங்களுக்குத் தெரிந்த தொழிலைச் செய்யக் கூடிய சௌகரியமும் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது!

"கனகா ஸ்டுடியோ" என்ற பெயரில் சினிமாப்பட உற்பத்தி ஸ்டுடியோ ஆரம்பிக்கப்பட்டது!

எடுத்த எடுப்பிலேயே மூன்று படங்கள் எடுக்கத் திட்டமிட்டனர். இரண்டு மாத இடைவெளி விட்டு, மூன்று படங்களை ஆறு மாதங்களில் வெளியிட்டு ரசிக மகா ஜனங்களைத் திக்கு முக்காடச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர். இது மிகவும் சிரம சாத்தியமான காரியம். இரவும் பகலும் சலியாது உழைக்க வேண்டும்! 'பசி நோக்கார்து கண் துஞ்சாது' உழைக்க வேண்டும் அல்லவா?

இப்படி மூன்று ஆண்டுகள் சலியாது உழைத்து ஆறு படங்கள் வெளியிட்டனர். கனகா ஸ்டுடியோவின் பெயர் நாட்டிலுள்ள மக்களின் நாவில் எல்லாம் நடனம் புரியத் தொடங்கி விட்டது. கனகா ஸ்டுடியோக்காரர்களின் வெளியீடு என்றால் அதில் ஏதாகிலும் புதுமை இருந்துதான் தீரும், ஸ்ரீமதி கனகாம்புஜம் ஏதோ புது மாதிரியானதோர் வேஷம் தாங்கி அபாரமாக நடிப்பார், காமிராமென் கண்ணுயிரம் மனத்தைத் திடுக்கிடச் செய்யும்வகையில் காமிராவைப் பயன்படுத்திப் பல தந்திரக் காட்சிகள் எடுத்திருப்பார் என்றெல்லாம் பேசலாயினர்.

இப்படி எத்தனை நாள்தான் வேலை செய்ய முடியும்? கண்ணுயிரத்துக்கு ஓய்வு வேண்டியிருந்தது. அவரைவிட அதிகமாகக் கனகத்துக்குத் தேவையாயிருந்தது! 'ஓய்வு' என்று சும்மா சிறிது காலம் இருந்து விட்டால், பொதுஜன மதிப்பிலிருந்து நழுவி விடலாம். பின்னர் வியாபாரத்தில் பெரு நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். இதற்கு என்ன செய்வது? என்று கனகாம்புஜமும் கண்ணுயிரமும் தீவிரமாக யோசிக்கலாயினர்.

அந்தச் சமயத்தில் "ஸார், தந்தி!" என்று ஒரு சேவகன் கண்ணுயிரத்தினிடம் ஓர் தந்தியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான். கண்ணுயிரம் தந்தியைப் பிரித்துப் படித்தார். தீவிர யோசனையில் ஆழ்ந்து விட்டார்.


அவருக்கு எதிரில் கனகாம்புஜம் உட்கார்ந்திருந்தாள். கண்ணுயிரத்தின் சிந்தனை

யைக் கண்டு அவன் திகைத்துப் போய் விட்டான். இப்படி ஒரேயடியாய்ச் சிந்தனையில் ஆழ்ந்து விடும்படி செய்யக் கூடிய விஷயம் அப்படி என்ன அந்தத் தந்தியில் இருக்கக் கூடும் என்று யோசித்தான். அடுத்தாற் போல் அதை வாய் விட்டு அவரிடம் கேட்கவும் கேட்டு விட்டான்.

"பம்பாய் கோடீசுவரர் கோபால்தாஸ் கோவிந்ததாஸ் நம்முடைய ஸ்டுடியோவைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை கொண்டிருக்கிறாராம். அடுத்த வாரம் சென்னைக்குத் தம் வியாபார சம்பந்தமாக வருகிறாராம். அப்போது நம்முடைய ஸ்டுடியோவையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று எண்ணங் கொண்டிருக்கிறாராம். அதற்கு நம் சம்மதத்தைத் தெரிவித்துத் தந்தியடிக்கும்படி கேட்டிருக்கிறார்..."

"எந்த கோபால்தாஸ்? டில்லியில் ஏதோ ஒரு ஹோட்டலில் தங்கினார். பிறகு அந்த ஹோட்டலையே விலைக்கு வாங்கி விட்டார் என்று சொல்லிக் கொண்டிருந்தார்களே, அந்த கோபால்தாஸா?" என்று கேட்டான்.

"ஆம், அவரேதான்!" என்றார் கண்ணாயிரம்.



"அப்படியானால் அவரை வரச் சொல்லுங்களேன்! அவருக்கே நம் ஸ்டுடியோவை விற்று விட்டால் போயிற்று. கொஞ்ச நாள் நாம் நிம்மதியாக இருக்கலாம் அல்லவா...?" என்றாள் கனகா.

"அவர் பெரிய மில் முதலாளி. அவர் இந்தச் சினிமா ஸ்டுடியோவை ஏன் வாங்கப் போகிறார்?" என்றார் கண்ணாயிரம்.

"அவர் மில் முதலாளிதான்... ஆனால் டில்லியில் அந்த ஹோட்டலை ஏன் வாங்கினார்? அதனால் மில் முதலாளி சினிமா ஸ்டுடியோ வாங்கக் கூடாது என்று உண்டா? பேஷாக வாங்கலாம்! அவரே சொந்தமாகப் படங்கள்கூட எடுக்கலாம்! ஒரு வேளை அவரே அந்த நோக்கத்துடன் வருகிறாரோ என்னவோ? எதற்கும் அவரை வரச் சொல்லித் தந்தியடியுங்கள்!" என்று யோசனை கூறினான் கனகாம்புஜம்.

கண்ணாயிரம் தந்தி யடித்தார்.

** ** **

"சீனுகம், இன்று மத்தியானம் மூன்று மணிக்குக் கோபால்தாஸ் நம் ஸ்டுடியோவுக்கு வருவதாக டெலிபோனில் தகவல் அறிவித்திருக்கிறார். எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை......"

"எனக்கும்தான் புரியவில்லை..."

"அவர் எப்படியாவது இந்த ஸ்டுடியோவை வாங்கி விட்டால் தேவலை...ஆனால் அவருக்கு நாம் விற்பதாகச் சொன்னால் வேண்டாம் என்று சொன்னாலும் சொல்லக் கூடும். அல்லது மிகவும் குறைந்த விலைக்குக் கேட்கலாம்... எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே......"

"எனக்கும்தான் என்ன செய்வது என்று தெரியவில்லை..." என்று கையைப் பிசைந்தாள் பிரபல சினிமா நடிகை கனகா.

இரண்டு நிமிஷ நேரம் அவ்விடத்தில் அமைதி நிலவிற்று. பின்னர்,

கிடைச்சென்று கண்ணாயிரத்துக்கு ஓர் யோசனை பளிச்சிட்டது. கையைச் சொடுக்கினார். "கனகம், எனக்கு ஓர் நல்ல யோசனை தோன்றி விட்டது! அதற்கு நீ சம்மதிப்பாய் என்று நினைக்கிறேன்!" என்றார்.

"என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் கனகாம்புஜம்.

"அப்படி யெல்லாம் உரக்கச் சொல்லக் கூடியதல்ல. பரம ரகசியம். இப்படி உன் காதை மட்டும் கொடு. காதில் சொல்லுகிறேன்" என்றார் கண்ணாயிரம்.

* * *

சரியாக மூன்று மணிக்குப் பம்பாய் முதலாளி கோபால்தாஸ் கோவிந்த தாஸ் தாம் அறிவித்திருந்தபடி 'ப்யூக்' காரில் வந்து இறங்கினார். கனகா ஸ்டுடியோ முதலாளியான கண்ணாயிரம் முகத்தில் புன்னகை தவழ அவரை வரவேற்றார். பிறகு தமது ஸ்டுடியோவில் தாம் நந்தவனக் காட்சிகளை எப்படி யெடுக்கிறார், அரண்மனைக் காட்சிகளை எப்படி யெடுக்கிறார் என்பதெல்லாம் ஒவ்வொரு இடத்துக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார். இந்தப் படலம் சுமார் ஒரு மணி நேரம் நடந்தது. கோபால்தாஸ் ஸ்டுடியோவைக் கண்டு பிரமித்துப் போனார். கடைசியாகக் கோபால் தாஸைத் தமது அறைக்கு அழைத்துச் சென்றார். "கொஞ்சம் காப்பி, டிபன் சாப்பிடலாம் அல்லவா?" என்று கேட்டார் கண்ணாயிரம்.

"நீங்கள் இவ்வளவு அன்புடன் கூப்பிடும் பொழுது நான் எப்படி மறுக்க முடியும்? கட்டாயம் வருகிறேன்..." என்றார் கோபால் தாஸ் கோவிந்ததாஸ்.

கோபால்தாஸ், கண்ணாயிரம், இன்னும் கோபால் தாஸுடன் கூட வந்த மூவர் இப்படி ஐவருமாகக் கண்ணாயிரத்தின் ஆபீஸ் அறையில் நுழைந்தார்கள். கண்ணாயிரம் ஸ்டுடியோ 'காண்டீ'னிலிருந்து ஐவருக்கும் டிபன் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். அடுத்த நிமிஷமே, டிபன் வந்து சேர்ந்தது. அதைச் சாப்பிட்டுக் கொண்டே, என்ன என்னவெல்லாமோ பேசினார்கள். அந்தப் பேச்சின் நடுவில் கோபால் தாஸ் "மிஸ்டர் கண்ணாயிரம், நான் சினிமாவுக்கே போகிறவன் அல்ல. எனக்கு இப்போது வயசு ஐம்பதாகிறது. இதுவரை நான் ஒரு சினிமா கூடப் பார்த்தவன் இல்லை. ஆனால் சினிமாப் படங்கள் எடுப்பதைத் தொழிலாகக் கொண்டு, படம் உற்பத்தி செய்யும் ஸ்டுடியோ முதலாளிகள் எல்லோரும் எனக்கு உற்ற நண்பர்கள். ஆம், தொழில் துறையில் ஈடுபட்டவர்கள் என்ற அளவில் தான் எனக்கு ஈடுபாடு. எனக்கு உங்களிடத்தில் இருக்கும் ஈடுபாடும் அம்மாதிரிதான். மற்றபடி படங்களின் தராதரங்கள் பற்றி யெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது..." என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் கையில் துடைப்பத்துடன் வேலைக்காரி வந்து நின்றாள்.

"ஐயா, நீங்கள் கொஞ்சம் எழுந்திருக்கிறீர்களா? நான் இந்த அறையை பெருக்கிவிட்டுப் போகிறேன்..." என்றாள் வேலைக்காரி.


இதைக் கேட்ட கண்ணாயிரம், "மிஸ்டர் கோபால்தாஸ்! இந்த வேலைக்காரி இந்த அறையைப் பெருக்க வேண்டுமாம். நம்மை வெளியே போய் இருக்கச் சொல்கிறாள். நாம் வெளியே போவோமா?" என்றார்.

கோபால்தாஸின் முகம் சிவந்து விட்டது. "என்ன ஒரு வேலைக்காரி பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது நம்மை வெளியே போகச் சொல்லுவதா? என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்! முதலில் அவளை வேலையை விட்டுத் தள்ளுங்கள்! சீட்டுக் கிழியுங்கள். அப்போதுதான் புத்தி வரும்..." என்று ஆங்கிலத்தில் படபடத்தார்.

வேலைக்காரி, "என்னங்க மணி நாலே கால் ஆயிட்டுதுங்க. அறையைக் காலி பண்ணித் தரீங்களா, இல்லே..." என்று அலட்சிய பாவனையில் பேசினாள்.

"மிஸ்டர் கோபால்தாஸ்! நீங்கள் கோபப் படுவதில் பயனில்லை. நாலேகால் மணிக்கு இந்த அறையைப் பெருக்க வேண்டும் என்று

ஓ! அப்படியா!



திட்டம் போட்டுக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் அதற்கு ஒத்துப் போகவில்லையென்றால் பெரும் விபரீதம் நேரும்'' என்றார்.

''என்ன விபரீதம் நேரும்? முதலில் அவளை வேலையை விட்டு நீக்கும்'' என்றார்.

''என்ன சொன்னீர்? அவளை வேலையை விட்டு நீக்குவதா? நடக்கவே நடக்காது! அவளை வேலையை விட்டு நீக்கினால், இங்கிருக்கும் தொழிலாளிகள் அத்தனை பேரும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பிப்பார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் ஒளிப் பதிவாளர், ஒளிப் பதிவாளர் முதலிய டெக்னீஷியன்கள் அனுதாப வேலை நிறுத்தம் செய்வார்கள். இவர்களிடம் அனுதாபம் கொண்டு ஒரு நடிகையும் ஒரு நடிகனும் இந்தப் பக்கம் காலடி கூட எடுத்து வைக்க மாட்டான். அப்புறம் என் தொழில் என்ன ஆவது? என் ஸ்டுடியோ என்ன ஆவது? நான்தான் என்ன ஆவது? அதனால் இவளை 'டிஸ்மிஸ்' செய்ய முடியாது'' என்றார் கண்ணாயிரம்.

''உமக்குத் தப்பில்லை என்றால் நான் டிஸ்மிஸ் செய்கிறேன். இந்த ஸ்டுடியோவின் பெறுமானம் எவ்வளவு? உடனே சொல்லும். உம்'' என்று கோபத்தில் அதட்டினார்.

''பதினைந்து லட்சம் இருக்கும்.''

''நான் பதினெட்டு லட்சம் தருகிறேன். இந்தாரும் செக்'' என்று பதினெட்டு லட்சத்துக்குச் செக் எழுதிக் கொடுத்தார். கண்ணாயிரம் என்ன சொல்வது என்று தெரியாமல் திரு திரு வென்று விழித்துக் கொண்டே செக்கைக் கையில் வாங்கிக் கொண்டார்.

கோபால் தாஸ் கண்ணாயிரத்தைக் கவனித்ததாகவே தெரியவில்லை, அந்த வேலைக்காரியிடம் திரும்பி ''நீ வெளியே போ, யூ கெட் அவுட்'' என்று கத்தினார்.

அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு புள்ளி மான்போல் வெளியே ஓடினாள்.

கோபால்தாஸ் பின்னர் இந்தப்புறம் திரும்பி, ''மிஸ்டர் கண்ணாயிரம், இனிமேல் நீங்கள் என் விருந்தாளி. திருப்தியாகச் சாப்பிடுங்கள். எந்தவிதமான பயமும் இனி உங்களுக்குத் தேவையில்லை'' என்றார்.

மறு நாள் காலை பத்து மணிக்கு கோபால் தாஸ் வந்து சேர்ந்தார். கூடவே அவர் காரியஸ்தரும் வந்து சேர்ந்தார். அவரிடம் கண்ணாயிரத்தின் மானேஜர் எல்லாக் கணக்குகளையும் ஒப்படைத்து விட்டார். கடைசியில் ''கனகா, வா போகலாம்!'' என்று கூப்பிட்டார். திரை மறைவிலிருந்த கனகாம்புஜம் வந்தாள். ''இவர்தான் நம் ஸ்டுடியோவை வாங்கியுள்ள புது முதலாளி. இவருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு வா, போகலாம்!'' என்றார் கண்ணாயிரம்.

அப்ஸரஸ் போல் வெளியே வந்து நின்ற கனகத்தையே பார்த்துக் கோபால்தாஸ் திரு திரு வென்று விழித்தார்.

கனகாம்புஜம் ''நமஸ்தே!'' என்றாள்.

அப்போதுதான் கோகுல் தாஸுக்குச் சுயப் பிரக்ஞை வந்தது. அவரும் பதிலுக்கு ''நமஸ்தே'' என்றார்.

கண்ணாயிரம் அடுத்தாற்போல் 'நமஸ்தே!' என்றார். அதற்குக் கோபால்தாஸ் சைகை மட்டும் செய்தார்.

கண்ணாயிரமும் கனகாம்புஜமும் இருவரும் கை கோத்துக் கொண்டு சென்று காரில் ஏறினர். கார் 'உர்' என்று பறந்தது.

கார் சென்றவுடன் ''நேற்று வேலைக்காரியாக வந்தவளுடைய முகஜாடை இந்த அம்மாளுக்கும் இருக்கிறதே!'' என்று வியப்புடன் கேட்டார் கோபால்தாஸ்.

''அந்த அம்மாளேதானே இவள்!'' என்றார் கோகுல்தாஸின் காரியஸ்தர்.

இதைக் கேட்டதும் பம்பாய் முதலாளி கோபால்தாஸுக்கு ஏற்கெனவே நூறு மைல் வேகத்தில் சுற்றிக் கொண்டிருந்த தலை ஆயிரமைல் வேகத்தில் சுழன்றது!

காரில் சென்று கொண்டிருந்த கனகாம்புஜமும் கண்ணாயிரமும் பின்வருமாறு பேசிக் கொண்டிருந்தனர்:

''கனகம்! இத்தனை நாள் நீ நடித்த நடிப்பில் எல்லாம் வைத்து நேற்று நடித்தது தான் பிரமாதம்'' என்றார் கண்ணாயிரம்.

''இப்படி ஒரு நாடகம் நடத்தலாம் என்று சொன்னீர்களே, அந்தக் கருத்தே இத்தனை நாள் நீங்கள் கொடுத்த கருத்துக்கள் எல்லாவற்றையும் விடப் பிரமாதம்!'' என்றாள்.

சிறுவர்களுக்கு அரை டிக்கட்!



''இந்தா! இன்றையிலிருந்து நீ வேலைக்கு வரவேண்டாம்! என் பையனைப் பஸ்ஸில் பள்ளிக்கூடத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போகப் பன்னிரண்டு வயசுக்குள்ளே ஒரு பையன் இருந்தால் போதும்!''



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா. ஸ்ரீ

6. தேர்தல் வருகிறது!

ஜகதீஷுடன் பேசிவிட்டு லால்ஜி ஸேட் வீட்டுக்குள் போய் விட்டார். அவருக்கு வயது ஐம்பத்திரண்டுக்குக் குறையாது. ஐம்பத்தைந்துக்கு மேலிராது. தம் முயற்சியினாலும் உழைப்பினாலும் முன்னுக்கு வந்த ஒரு துணிச்சல்காரப் பேர்வழி என்று அவரைச் சொன்னால் அது தவறாகாது. அவரை ஒரு முறை அறிமுகம் செய்துகொண்டு விட்டால், அப்புறம் யாருக்கும் இந்த விஷயம் எளிதில் மறப்பதில்லை. அவ்வளவு தூரம் அவர்கள் உள்ளத்தில் பதிந்து போகும்படியாக அழியாத முத்திரை வைத்து விட்டுத்தான் அவர் மறுகாரியம் பார்ப்பார். ஏழெட்டு வருஷங்கள் நன்றாக அல்லும் பகலும் உழைத்து அதன் பலனைக் கையில் கொழுத்த பொருளும் சேர்ந்து விடுமானால் அதைக் கொண்டு ஆனந்தமாக இன்ப போக வாழ்வு வாழ வேண்டும் என்ற ஆசை யாருக்கும் எழுவது இயல்புதானே? அப்படி ஆனந்தமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு வெளியுலக அலுவல்களில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தால், இதில் ஆச்சரியப்படுவதற்கோ வியப் படைவதற்கோ என்ன இருக்கிறது?

உலகத்தில் யாருக்காவது மிக மிகக் குறைவான புத்தி தேவையென்றால், அது பணக்காரர்களுக்குத்தான். அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் பணம். வெறும் பணம்தான். அப்படிப் பணத்தைச் சேர்க்கும் பணக்காரன் எவ்வளவுக்கெவ்வளவு பணத்தைச் செலவிடுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் வாழ்வில் முன்னேற முடியும். ஆனால் பணத்தை எடுத்துச் செலவிடுவதற்கு முன் பணக்காரன் ஒரு முறைக்குப் பன்முறையாக யோசனை செய்கிறான். இப்படி அடிக்கடி யோசனையில் இறங்கி விடுவதால் யோசிப்பது என்பது நாளாவட்டத்தில் அவன் பிறவி இயல்புகளில் ஒன்றாகவே ஆகி விடுகிறது. எனவே, 'பணம் செலவிடுவது பாவம்!' என்று ஆராய்வுத் திறன் கொண்ட அவனது இயல்பு கூறுகிறது. ஆனால், 'பணம் செலவிடாமல் இருப்பது பாவம்!' என்று உலகம் கூறுகிறது. இவ்விரு வாக்கியங்களுக்கும் இடையே மாட்டிக் கொண்டு பலத்த யோசனையில் ஆழ்ந்து பணக்காரன் முட்டாள் பட்டம் கட்டிக் கொண்டு விடுகிறான்.

உலகத்தின் கூற்றிலும் கூப்பாட்டிலும் கவனம் செல்லும் பொழுது பணக்காரனை இன்னொரு கவலை வாட்டத் தொடங்கி விடுகிறது. பணத்தைச் செலவிடத்தான் வேண்டும் என்றால் செலவிடுவதைப் பற்றி அவனுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எதில் செலவிடுவது என்பதுதான் அவன் முன் நிற்கும் பிரச்னை. அந்தப் பிரச்னையைத் தொடர்ந்து சிந்தனை! அந்தச் சிந்தனையைத் தொடர்ந்து கவலை! என்ன இருந்தாலும் பிறவிக் குணம் போகுமா?

இந்தக் காலத்தில் பணம் செலவிடுவதற்கு முக்கியமாக இரண்டு வழிகள் இருப்பதாகக் கருதப்படுகின்றன. ஒன்று அரசாங்க அதிகாரிகளைத் திருப்திப் படுத்துவது. மற்றொன்று மக்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்வது. இதில் அரசாங்கத்தைத் திருப்திப் படுத்தும் வழிதான் ராஜ பாட்டையான வழி. ராஜ பாட்டை என்ற சொல்லிலேயே பேரும் புகழும் பரிமளிக்கும் பிரகாசமான மார்க்கம் என்பது வெள்ளிடை மலையாகத் தெற்றென விளங்க வில்லையா?

அதிகாரிகளை வரவேற்று உபசரித்து விருந்து அளித்தல், அவர்களுடன் நெருங்கிய நட்புரிமை பூண வேண்டுமென்று தோன்றினால், அவர்களுடைய மனைவி மக்களுக்கு நாள் கிழமைகளில் நல்ல நல்ல காணிக்கைப் பொருள்களாக எடுத்துச் சென்று கண்டு வருதல், அதிகாரிகள் வேண்டுமென்று கேட்கும் பொழுது வண்டியோ காரோ அனுப்பி வைத்தல், அவர்கள் ஏன் என்று சொல்வதற்கு முன்னால் என்னெயாகவே எடுத்துச் செல்லுதல், அரசாங்கம் கடன் எழுப்பும் போது எல்லோருக்கும் முன்னால் ஏராளமான தொகையைக் கொடுத்துக் கடன் பத்திரம் வாங்குதல், உயர் பதவியில் உள்ளவர்கள் சொல்லும் விதமெல்லாம் ஆஸ்பத்திரிகளோ, வாசகசாலைகளோ நோய் நிவாரண விடுதிகளோ கட்டிக் கொடுத்தல், உத்தியோக மாற்றம் ஏற்பட்டு வெளி



ஊர்களுக்குப் போகும் பழைய அதிகாரிகளுக்குப் பிரிவுபசாரம் நடத்தவும், தங்கள் ஊருக்கு வரும் புது அதிகாரிகளுக்கு வரவேற்பு உபசாரம் நடத்தவும் உபயோகப்படக்கூடிய அளவில் மலர்கள் உற்பத்தி செய்யும் பூந்தோட்டங்களைப் பராமரித்து வருதல், தோட்ட விருந்துகள் நடத்துவதற்கு லாயக்கான தோட்டங்கள் தயாரித்து வைத்துக் கொள்ளுதல் போன்ற இன்னும் எத்தனை எத்தனையோ வழிகள் பணம் செலவிடுவதற் கென்றே பணக்காரர்களை உத்தேசித்து ஏற்பட்டிருக்கின்றன. இவற்றில் எத்தனையோ செலவுகள் குட்டிப் போட்டுப் பண வரும்படியை உண்டுபண்ணுபவையாகவும் இருக்கலாம். எப்படி யிருந்தால் என்ன? முதலில் அவை செலவு செய்வதற்கான மார்க்கங்கள்தானே? இவற்றினால் அவர்களுடைய அந்தஸ்தும் மரியாதையும் சிறுகச் சிறுக சமூகத்தில் உயர வழி இருக்கிறது. பணம் செலவிடுவதற்குத் தக்கபடி 'ராவ் சாஹிப்' பட்டத்திலிருந்து 'ஸர்' பட்டம் பெறும் வரை இடமும் இருக்கிறது. அதனால் அரசாங்க வழி பெயரும் புகழும் தரும் ராஜ பாட்டையாக, கட்டாயம் பலன் அளிக்கும் பிரகாசமான மார்க்கமாகக் கருதப்படுகிறது. கருதப் படுகிறது என்று கூறுவதற்கே இடம் இல்லை. கட்டாயம் பலன் அளித்தே தீருகிறது என்றுதான் கூற வேண்டும்.

ஆனால் மக்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் மார்க்கம் இருக்கிறதே, அது அநேக விதமான சிக்கல்களும் சிரமங்களும் நிறைந்தது. இந்த உலகத்தில் எண்ணிக்கையில் எத்தனை மக்கள் இருக்கிறார்களோ, அத்தனை வழிகள் அவர்களுக்குத் தொண்டு செய்வதற்கென்று இருக்கின்றன. ஏன்? அதைக் காட்டிலும் அதிகம் இருக்கின்றன என்றுகூடச் சொல்லலாம். அதிலும் ஒரு விசேஷம் என்னவென்றால் ஒவ்வொரு வழியுமே பணத் தேவையுள்ள, பணம் செலவிடும்படியான வழிதான். பெண்கள், பாலகர்கள், பிச்சைக்காரர்கள், அநாதைகள், ஆதரவற்றவர்கள், அங்கஹீனர்கள், நோயாளிகள் என்று இந்த



உலகத்தில் எத்தனை பேர் இல்லை, உதவி பெறத் துடித்துக் கொண்டிருப்பவர்கள்? உதவி செய்வதென்றால் அதற்கு வழியா இல்லை? வழி தெரியவில்லை என்றால் ஒன்று செய்யுங்கள். அப்புறம் ஒவ்வொன்றாகப் பல வழிகள் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போல் புலனாகத் தொடங்கி விடும். கடைசியில் இவற்றுக்கு ஒரு முடிவே கிடையாதா என்றுகூட எண்ணத் தொடங்கி விடுவீர்கள்!

டிக்கட் பரிசோதகரின் கண்களில் படாமல் கெட்டிக்காரத் தனமாகத் தப்பி ரெயிலில் மூன்றாவது வகுப்புப் பெட்டியொன்றில் ஏறி உங்களுக்குச் சௌகரியமான ஒரு மூலையைத் தேடிப் பிடித்துக் கொண்டு பேசாமல் கம்மென்று உட்கார்ந்து விடுங்கள்! அப்புறம் வண்டி புறப்பட்டதும் எக்காலும் மறக்க முடியாத பயங்கரப் பாடல்கள் உங்கள் காதுகளின் ஜவ்வுகளைத் துளைத்துக் கொண்டு ஊடுருவிப் பாயும்!

"ஆண்டவனே! ஆண்டவனே!
அடுக்குமாளிகைகள் எத்தனை
கட்டினாய் என்று
அதட்டிக்கேட்பார் உன்னை
யாரும் இல்லையா?
ஆண்டவனே! ஆண்டவனே!"

இந்தச் சொல் அடுக்குகள், இதையெல்லாம் போய்க் கடவுளிடம் கேட்டுக் கொண்டிருப்பானேன் என்று உங்களை யோசனை செய்யத் தூண்டும். அதற்குள்ளாக உங்கள் எதிரே செப்பு நாணயங்கள் கல கலக்கக் குலுங்கும் ஒரு தகரக் குவளை காட்சி அளிக்கும்! எதற்காக என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

குறிப்பிட்ட கோ சம்ரக்ஷண நிதிக்காகவோ, அநாதைகள் விடுதிக்காகவோ





நன்கொடை யளிக்கவில்லையென்றால் உங்கள் நாட்டுக்குக் கதிமோட்சம் கிட்டாது என்று சொல்வார்கள். குறிப்பிட்ட உத்தேசத்துக்கென்றே வாங்குவதாக உங்களுக்கு உறுதி அளிப்பார்கள். அது மட்டும் அல்ல; நான் கணுவுக்குக் குறையாமல் நன்கொடை அளிக்க முன் வந்தால் ரசீது பெறும் உரிமை உங்களுக்கு உண்டு என்ற ஆசை வார்த்தையும் காட்டுவார்கள்.

அதையெல்லாம் கேட்ட நீங்கள் உங்களால் இயன்றதைக் கொடுத்து நாட்டின் கடனை நம்மால் இயன்ற வரை தீர்த்தோம் என்ற மனத் திருப்தியுடன் வீடு வந்து சேர்வீர்கள். வீடு வீடாகச் சென்று அன்னதானத்துக்கென்று அரிசி வசூலிக்கும் மாணாக்கர்கள் அரிசி வசூலித்துக் கொண்டு உங்கள் வீட்டிலிருந்து படியிறங்கி வருவதும், நீங்கள் வீட்டுக்குள் நுழைவதுமாக இருந்தால் உங்களுக்கு எத்தகைய கரை காண இயலாத மகிழ்ச்சி ஏற்படும், தெரியுமா?

அப்புறம் சாய்வு நாற்காலியில் படுத்து அன்று வந்த கடிதங்களைக் காணும் பொழுது உங்களுக்கு ஒரு செய்தி தெரிய வரும். இரண்டு தேச ஊழியர்கள் மூன்று தொண்டர்களுடன் இரவு மூன்று மணி வண்டியில் எத்தனையோ இன்னல்களையும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் உங்கள் கிராமத்துக்குத் தொண்டு செய்ய வருகிறார்கள். அவர்கள் உங்கள் வீட்டு விருந்தாளியாக வந்து இறங்கப் போகிறார்கள் என்னும் செய்தியாக அது இருந்து விட்டால் உங்களுக்கு ஏற்படும் ஆனந்தத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

அதற்கப்புறமுள்ள கடிதங்களைப் படிக்கும்பொழுது உங்கள் பிராந்தியத்தில் மூன்று செய்தித் தாள்களும் இரண்டு மாத சஞ்சிகைகளும் புதிதாகத் தோன்றி வளர்ந்து வருகின்


றன என்னும் விஷயத்தை உணர்வீர்கள். நாட்டில் இன்னல்களும் இடையூறுகளும் அதிருப்தியும் அமைதியின்மையும் வளருமேயானால் மூளை ஒரு ஒழுங்கில் இருப்பதில்லை. அதற்காகச் செயலில் இறங்கி ஆணித்தரமான அபிப்பிராயங்களைப் பரப்பவேண்டும் என்பதற்காக ஒரு பத்திரிகை; மக்களிடையே நிலவியிருக்கும் அதிருப்தியையும் அவக்கேடுகளையும் அவர்களே சரிவர உணராமல் இருந்து விட்டால், அவர்களிடையே விழிப்பு எப்படி ஏற்படும்? மக்கள் மனத்தில் அத்தகைய விழிப்பை ஏற்படுத்தி அத்தகைய உணர்ச்சியைக் கிளறி விடுவதற்காக இன்னொரு பத்திரிகை; தாழ்த்தப்பட்டு இடியுண்டு அல்லலுறும் மக்களை உத்தாரணம் செய்யாமல் நாட்டை உத்தாரணம் செய்ய முடியுமா? எனவே அவர்களுடைய உத்தாரணத்தையே குறிக்கோளாகக் கொண்ட மூன்றாவது பத்திரிகை; சிறுவர்களின் வருங்காலத்திலே நம்பிக்கை ஒளி வீசுவதாகத் தோன்றுவதால் அந்த நம்பிக்கையைப் போற்றிப் பாதுகாப்பதற்கென்று ஒரு சிறுவர் மாதப் பத்திரிகை; உங்களுடைய சகல விதமான முன்னேற்றத்துக்கும் மனப் போக்குக்கும் சாரமாக விளங்குவது கலை, அந்தக் கலையை உங்களைப் போலவே அறியாத மக்களும் இலகுவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஆராய்ச்சி பொதுளும் கலைச் சித்திரங்கள் நிறைந்த உயர்ந்த ரக மாதப் பத்திரிகை; இப்படியாக நீங்கள் செலவு செய்வதற்கு ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ சாதனங்கள் உங்கள் கையை எதிர் நோக்கிக் காத்து நிற்கின்றன. இந்த உலகத்தில் செலவு செய்வதற்கா வழிகள் இல்லை?

பணக்காரனாகி விட்ட காரணத்தினால் பகல் உணவு அருந்தி முடிந்த பின் இரண்டொரு மணி நேரம் நீங்கள் கட்டாயம் இளைப்பாறித்தான் ஆகவேண்டும். களைப்பு நீங்க வேண்டுமென்றால் இளைப்பாறத்தானே வேண்டும்? எனவே, இளைப்பாறிப் புத்துணர்ச்சி பெறும் நோக்கத்துடன் நீங்கள் உங்கள் அறைக்குப் போவீர்கள். அதற்குள் ஏதாவதொரு திரைப்படக் கம்பெனியிலிருந்தோ அல்லது தந்தச் சாமான்கள் செய்யும் தொழிற்சாலையிலிருந்தோ உங்கள் பெயரை டைரக்டர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டி இரண்டொரு பணக்கார வியாபாரிகள் உங்களைக் காணத் தவம் கிடந்து உட்கார்ந்திருப்பார்கள். அதற்கு அப்புறம் அநாதைகள் விடுதி, சிறுவர் சாரணர் சங்கம், இலக்கிய முன்னேற்றக் கழகம் போன்றவைகளுக்கு உதவி செய்வது சம்பந்தமாக நீங்கள் அந்தந்த விஷயங்களுடன் தொடர்பு கொண்டு வந்திருப்பவர்களுடன் பேசி முடிப்பதற்குள்ளாக, மார்வாட் பிராந்தியத்தில் பெருத்த பஞ்சப் பேய் தலைவிரித்தாடுகிறது, அஸ்ஸாமில் மழை பொய்த்து மக்கள் தண்ணீருக்குத் தவிக்கிறார்கள், ஆப்கானிஸ்தானத்து எல்லையில் தீப்பிடித்து சொல்ல முடியாத சேதம் ஏற்பட்டு விட்டது என்பது போன்ற செய்தி உங்கள் கவனத்துக்கு கொண்டு வரப்படும். இந்த மாதிரிக் கஷ்டங்களுக்கெல்லாம் இலக்காகித் தவிக்கும் மக்கள் உங்கள் உதவியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறார்கள் என்று கூறுவார்கள் உங்களிடம் வருபவர்கள்.

இதே நினைவாக இரவில் படுக்கப் போகும் நீங்கள் பயங்கரக் கனவு காண்பீர்கள். லக்ஷக் கணக்கான வீரர்கள் உங்கள்மீது படை யெடுத்து வந்து உங்களைச் சிறையிட்டுச் செல்வது போலவும், உங்களுடைய சின்னஞ் சிறு உடலில் ஆயிரக் கணக்கான ரத்தம் உறிஞ்சும் ஊசிகளைக் குத்தி உங்களைச் சித்ரவதை செய்வது போலவும் கனவு கண்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்?

நரகத்துக்கு ஒப்பான அந்தக் கனவு வேதனையைத் தாங்க மாட்டாமல் உளறிக் கொட்டிக் கொண்டு நீங்கள் துணுக்குற்றுக் கண் விழிப்பீர்கள். இரவு வர வேண்டிய தேச ஊழியர்கள் வந்து விட்டார்கள் என்பதையும் பிரயாணக் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக நல்ல காப்பியாகக் கொண்டு வருமாறு உங்கள் வேலைக்காரனுக்கு உத்தர விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்

என்ன சிரத்தை!



“நான்தான் அப்பவே சொன்னேனே; அடுத்த வீட்டு அம்மாள் நம் செடியில் இருக்கும் பூக்களை யெல்லாம் தெரியாமல் பறித்துக் கொண்டு விடுகிறாள். என்ன அக்கறையாக நம்முடைய செடிகளுக்குத் தண்ணீர் விடுகிறாள், பாருங்கள்!”

கலியாண கால விசேஷ விற்பனை

★ புத்தம் புதிய சரக்குகள் ★ புதிய மாதிரிகள்
★ கலையழகு மிக்க கரைகள் ★ கண்கவரும் வர்ணங்கள்

அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகளும், கிரேப் சேலைகளும், பாவாடைகளும், எல்லாவிதமான ஜரிகை நூல் ஜவுளிகளும் கிடைக்கும்.

கூரைச் சேலைகள் எமது விசேஷ அம்சம்

ராதா ஸில்க் எம்போரியம்

14, சன்னதித் தெரு - மயிலாப்பூர் - சென்னை-4

Service with Security

Throughout its career of over 34 years the "JUPITER GENERAL" has always held and continues to hold a front rank position in the insurance World. By insuring with the "JUPITER GENERAL" you ensure SAFETY, SECURITY and SERVICE.

ALL KINDS OF LIFE AND GENERAL INSURANCE BUSINESS TRANSACTED

TOTAL Assets Over Rs. 3,35,00,000

THE JUPITER GENERAL INSURANCE COMPANY, LIMITED

Head Office: BANK STREET - FORT - BOMBAY-1

Administrator: **Dewan Bahadur R. Varadachari**

BRANCHES AND AGENCIES THROUGHOUT INDIA AND IN PAKISTAN, BURMA, CEYLON, ADEN AND AFRICA

Principal Office in South India: "JUPITER HOUSE", 167, BROADWAY, MADRAS

Branch Manager: R. Ranganathan   Phone: 2547

டால்மியா

இன்ஸுலேட்டர்களும்
ஆஸிட் ஜாடிகளும்

உயர்ந்த ரகத்துக்கும்
சிறந்த உழைப்புக்கும்

●

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

டால்மியாபுரம் - (திருச்சிராப்பள்ளி)

பதையும் அறிந்த பின்தான் நீங்கள் நிம்மதியான நீண்ட பெருமூச்சு விடுவீர்கள்!

தேச சேவை செய்வதற்கு இதுபோல் இன்னும் எத்தனையோ எண்ணிறந்த வழிகள் இருக்கின்றன. நீங்கள் எத்தனை முடியுமோ, அத்தனை வழிகளிலும் பணம் செலவழிக்கலாம். எல்லாம் சொன்னும் மகாராஜன் கப்பல் என்று சொல்வார்களே, அந்தக் கதைதான் தேச சேவையில் பணம் செலவிடுவது என்பது புரிந்ததா?

ஏராளமாகப் பணம் சேர்த்துக் குவித்து விட்ட லால்ஜி ஸேட் அதை உபயோகிப்பது எப்படி என்று கவலை கொண்டிருந்தார். அரசாங்கத்தின் வாயிலாகப் பணத்தைச் செலவிடலாமா? மக்கள் மூலமாக மக்கள் நன்மைக்கே செலவிடலாமா? இந்த இரண்டில் எது நல்லது என்பதை அவரால் சட்டென்று நிர்மானிக்க முடியவில்லை.

அதிகாரங்கள் நிறைந்த அரசாங்க உத்தியோகஸ்தர் யாராவது தம்மைப் பார்த்துச் சிரித்துப் பேசுவதைப் பார்த்து விட்டால் அவர் அரசாங்கத்தின் மூலமாகப் பணத்தைச் செலவிடுவதுதான் சரி என்று எண்ணி அதற்குத் தயாராகி விடுவார். செய்தித் தாள்களில் யாரையாவது புகழ்ந்து எழுதி அதைப் படிக்க நேர்ந்து விட்டால் மக்களுக்குச் சேவை செய்யும் மூலமாகப் பணத்தைச் செலவிடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்து அதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்ள முன் வருவார். ஆனால் ஒன்றை மட்டும் பிடித்துக் கொள்ளாமல் மனம் இரண்டிலும் தடுமாறிக் கொண்டிருந்ததால், அவருடைய மனத்திலே உளைச்சல்களும் சிக்கல்களும்தான் ஏகமாக அதிகரித்தன.

கடைசியில் அவர் கவனத்தை அரசாங்க சபைக்கு நடக்கவிருந்த தேர்தல் கவர்ந்தது. அரசாங்கத் தொண்டோடு கூட மக்களுக்கும் சேவை செய்வதாக வேஷம் போடுவது என்பது அங்கத்தினர் ஆனால்தானே முடியும்? ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்ற கதையாக இரண்டையும் உத்தேசித்துத்தானே அரசாங்க சபைகள் நிர்மாணமாகியுள்ளன? ஆங்கிலேயர்கள் ஆட்சியில் தேச நன்மையாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் நாட்டுப் பற்றைக் காட்டிக் கொள்ள விரும்பினால் இதைவிடச் சௌகரியமான சாதனம் வேறு ஏது? அழகான சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கென்று அரசாங்கத்தார் எழில் மிகுந்த சட்டசபைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்களே, அது போதாதா? அதைவிட மனிதனுக்கு வேறு என்னதான் வேண்டும்?

எனவே, பெயரும் புகழும் பெறுவதற்குக் குறுக்கு வழியாக உள்ள சட்டசபை லால்ஜி ஸேட்டின் மனத்தை மிகவும் கவர்ந்தது. அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான முஸ்திப்பில் முனைந்தார். தேர்தலில் வெற்றி பெற அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்து விட்டால் மட்டும் போதுமா? தமக்குச் சாதகமாக வாக்குகளைச் சேர்க்க வழி தேட வேண்டாமா? எனவே, அந்தப் பிரச்னை அவர் மனத்திலே முளைத்தது.

பணத்தைச் செலவழிக்க இரு வழிகள் இருப்பது போலவே, வாக்குகள் சேகரிக்கவும் இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று வாக்கு விலைக்கு வாங்குவது; இரண்டாவது பொய் வாக்குகள் தயார் செய்வது. அதனால் அரசியலில் இறங்கவேண்டுமானால், சாம, பேத, தான, தண்ட என்ற நான்கு முறைகளும் வாக்குச் சேகரிக்கும் விஷயத்தில் உபயோகப்பட்டாக வேண்டும்; உபயோகப் படுத்தியும் ஆகவேண்டும்.

தேர்தலுக்கு நிற்பது என்று நிர்மானித்த லால்ஜி ஸேட் வாக்குகளைச் சேகரிக்கும் கலையில் மிக மிக நிபுணத்வம் பெற்ற ஜுகல் கிஷோர் என்ற பிரசித்தி வாய்ந்த மனிதனின் உதவியை நாடினார்.

கோகிலாவைக் கெட்ட கண் கொண்டு பார்த்துக் கொண்டிருந்த பொழுது லால்ஜி ஸேட் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவர், தம்மை ஒரு விதமாகச் சமாளித்துக்கொண்டு, ஜகதீஷுடன் பேச்சுக் கொடுத்துத் தம் வீட்டுக்கு வருமாறு அவனை அழைத்தார். அதற்கடுத்த கணமே தடதட வென்று கீழே இறங்கித் தம் வீட்டுக்குள் நுழைந்தார். வந்ததும் வராததுமாக ஜுகல்கிஷோர் தம்மைக் காண வந்திருக்கிறான் என்னும் செய்தி அவருக்குக் கிடைத்தது. மகிழ்ச்சி பொங்க உற்சாகத்துடன் அவனை வரவேற்பதற்காக வாசற் புறத்து அறைக்கு ஓடி வந்தார்.


ஜுகல்கிஷோருக்கு வயது நாற்பது இருக்கலாம். உறுதி குலையாத கட்டமைந்த உடல். சிரித்த முகம். கல கல வென்று மகிழ்ச்சியுடன் பழகும் சுபாவம். பார்ப்பவர்களுக்கு பிரமிப்பை ஊட்டும் முகப் பொலிவு. லால்ஜி ஸேட்டைக் கண்டதும் கை கூப்பி வணங்கிய அவன், "ஸேட்ஜி! இன்றே என்னை வரச் சொல்லி மிக நல்ல காரியம் செய்தீர்கள்! இன்று சாயந்திரம் ஒரு பொதுக் கூட்டம் நடக்க விருக்கிறது. அரசாங்க சபைக்குப் போய்த் தாங்கள் என்ன என்ன செய்யவிருக்கிறீர்கள் என்பது பற்றி அந்தக் கூட்டத்தில் இன்று தாங்கள் ஒரு சிறிய சொற்பொழிவு ஆற்றி விடுங்கள்! பாக்கியை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றான்.

"நீங்கள் சொல்வது சரி. ஆனால் அரசாங்க சபையில் போய் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு என்ன தெரியும்?" என்றார் லால்ஜி ஸேட்.

"இதென்ன பிரமாதமான விஷயம்? உங்களுக்குத் தோன்றியதைச் சொல்லுங்கள். தொழில் அபிவிருத்தி, விவசாய முன்னேற்றம், மாதர் நலம், கிளர்ச்சி, புரட்சி, இயக்கம் என்று எத்தனை இல்லை? இவற்றில் உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு பேசுங்கள். அது சம்பந்தமாக என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லுங்கள். கொசுக்களும் கொள்ளை நோய்களும் என்பது பற்றியோ



குழந்தைகளுக்கு வீட்டிலேயே களிப்பை அளிக்கும் பொருள்



விலை ரூ 300/-

உலகத்திலுள்ள சகல ஸ்டேஷன்களின் விருந்தும் மனதுக்கு பிடித்த புரோகிராமை மர்பி ரேடியோவின் மூலம் மிகவும் தெளிவாகவும், இனிமையாகவும் கேட்க முடிவதால் குழந்தைகள் கூட மர்பியை வெகுவாக விரும்புகிறார்கள்.

மாடல் டி.ஏ. 192 - ஏ.ஸி மெயின்களுக்கு மாத்திரம்
மாடல் டி.யு 192 - ஏ.ஸி. டி.ஸி மெயின்களுக்கு
மாடல் டி.பி. 192 - பாட்டரி செட்

murphy radio மர்பி ரேடியோ

விநியோகஸ்தர்கள்: அடினன் அன்டு கம்பெனி லிமிடெட்
158, மவுண்ட் ரோட், மதராஸ்-2
மர்பி ரேடியோ ஆப் இந்தியா, லிமிடெட் பம்பாய் - 12.

MUR-54-12 TA

மலேரியாவும் கொரியாவும் என்பது பற்றியோ நீங்கள் எது பேசினாலும் பாதகமில்லை. பொதுமேடை ஏறிப் பேசவேண்டும். அவ்வளவுதான்!" என்றான் ஜுகல்கிஷோர்.

"இல்லையப்பா! இப்படியெல்லாம் பேசுவது எனக்குப் பிடிக்கவும் பிடிக்காது. வரவும் வராது. வீணில் என்னைத் தொந்தரவுபடுத்தி என்ன பயன்? வேண்டாம், அப்பா!" என்றார் லால்ஜி ஸேட் மிகவும் கலவரமடைந்த குரலில்.

"பரவாயில்லை, பரவாயில்லை! அரசாங்க சபையில் ஏறி விட்டால் இதெல்லாம் தானாக வந்து விடும். இதெல்லாம் ஒரு பிரமாத விஷயம் இல்லை. கவலைப்படாதீர்கள். இப்பொழுது முதலில் நல்ல அநுபவசாலிகளாக நாம் ஐம்பது பேருக்குக் குறையாமல் தேர்தல் வேலைக்கென்று ஆட்களை அமர்த்திக் கொள்ள வேண்டும். அவர்களைக் கொண்டு முதலில் வாக்குரிமையுள்ளவர்களிடம் போய் உங்களுக்கு வாக்குத் தருவதாக ஒப்புக் கொள்ளும்படி செய்ய வேண்டும். அப்புறம் அதற்கு அடுத்தபடியாகத் தேர்தலுக்கு நிற்கும் மற்ற அபேட்சகர்கள் இருக்கிறார்கள், பாருங்கள்! அவர்களுக்கு ஏதாவது ஆசை வார்த்தை காட்டித் தேர்தல் மனுப் பத்திரத்தை வாபஸ் பெற வழி செய்து பார்க்க வேண்டும். அவர்கள் சொன்ன சொல் பிறழ்ந்து விடாமல் இருக்க வேண்டி அவர்களை அடிக்கடி கண்காணித்துக் கவனித்து வர வேண்டும். கடைசியில் வாக்குக் கொடுக்கிறவர்கள் உங்களுக்குத்தான் கொடுக்கிறார்களா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த வேலைக்கென்று ஐம்பது பேர் மணிமணியான ஆசாமிகளாக இருக்க வேண்டும். அப்புறம் பாக்கிச் சுற்று வேலைகளைக் கவனிக்க வேறு கொஞ்சம் ஆசாமிகளும் தேவை. அதையெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்வோம். முதலில் இதைச் சொல்லுங்கள்! நீங்கள் எத்தனை ரூபாய் வரை இதற்காகச் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர்.

"ஆயிரம் ஐந்நூறு ஒரு பிரமாதமில்லை!"

"அப்படியானால் நீங்கள் தேர்தலில் ஜயித்தாற்போலத்தான், போங்கள்!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஆயிரம் ஐந்நூறுதான் செலவழிக்கிறது என்றால் எதற்காக வீணில் தேர்தலுக்கு நிற்க ஆசைப்படுகிறீர்கள்? பேசாமல் அந்தப் பணத்தைப் பெட்டியில் போட்டுப் பூட்டி வையுங்கள்......நான் கேட்கிறேனே என்று கோபித்துக் கொள்ளக் கூடாது. ஜனங்கள் உங்களுக்கு எதற்காக வாக்குக் கொடுக்க வேண்டும்?" என்று பச்சையாகக் கேட்டு விட்டான் ஜுகல் கிஷோர்.

லால்ஜி ஸேட் பொதுவாக அறிவுள்ள ஆசாமிதான். அந்த ரூபாயில் அங்கத்தினராக ஆக முடியாது என்பதைப் புரிந்து கொள்ள அவருக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

தியாகத்துக்கு நன்றி

உழைப்பாளியின் உயிர்த் தியாகம் என்ற தலையங்கத்தின் கீழ் தாங்கள் எழுதி யிருந்த அத்தியாகச் செய்தியை வாசித்த நேரம் தொடக்கம் என்னையும் கண்ணீர் வடிக்கச் செய்தது. என்னைப் போன்றே கல்லியை வாசித்த ஆயிரக் கணக்கான தமிழர்கள் வேதனை அடைந்திருப்பார்கள் என்பது என் எண்ணம். தன்னுயிரைப் பிறர் ஆபத்துக்குக் 'காவு' கொடுத்து மீட்ட தியாகிக்கு நாம் வெறும் அநுதாபத்தை மாத்திரம் தெரிவித்துக் கொள்வது நமது பண்பாட்டுக்குச் சால்பானதல்ல. அந்தத் தியாகி எப்படிப்பட்ட ஏழ்மையுடன் போராடியவரோ தெரியாது. அவர் நிர்க்கதியாய் விட்டுச் சென்ற பெற்றோர் உற்றோர் எத்தனை கஷ்டத்துக் குள்ளாகி அல்லல் அடைவார்களோ யாரறிவர்!

எங்கள் இலங்கையிலும் இப்படிப் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன் இராமநாயக்கா என்ற ஒரு பெரியார் புகைவண்டியில் அகஸ்மாத்தாக உயிர் விட வேண்டியிருந்த ஓர் இளம் பெண்ணை ஆபத்திலிருந்து காப்பதற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்தார். இந்த நன்றியை மக்கள் தகுந்த முறையில் மதித்தார்கள். ஒரு ஆங்கில தினசரி உருக்கமாகச் செய்தியைப் பிரசுரித்தது. மக்கள் ஆயிரக் கணக்கில் தொண்டு செய்ய முன் வந்தனர். ஏறக் குறைய ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் தியாகிக்கு நிதி கொடுத்தனர். அத் தியாகி விட்டுச் சென்ற ஒன்பது குழந்தைகளும் இந்த நிதியால் எதிர் வரவிருந்த தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருக்கிறார்கள். தியாகிகளைப் பெருந் தன்மையுடன் மதிக்கும் தமிழகம் மேற்படி தியாகி உழைப்பாளி ஸ்ரீ சக்கியாசியைத் தக்க முறையில் மதித்து அவர் குடும்பத்துக்கு உதவி புரிவார்களென்று எண்ணுகிறேன்.

கொழும்பு
5-6-54

ந. இராஜகோபாலன்

ஜுகல் கிஷோர் சொல்வது ரொம்ப சரியான வார்த்தை என்றே பட்டது. அதோடு எப்படியாவது தேசத் தொண்டு செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியும் அவரை ஊக்கி விட்டது. இவற்றுக் கெல்லாம் மேலாக அவருக்குச் சரியான சமயத்தில் அவருடைய மனைவியின் ஆலோசனையும் கிடைத்தது. அவள் மட்டும் அந்தச் சமயம் அங்கே வந்து ஆலோசனை கூறி உதவி செய்ய முன் வந்திராவிட்டால், பத்தாயிரம்—பதினாயிரம் என்று பணத்தை விரயம் செய்து அரசாங்க சபைத் தேர்தலுக்கு நிற்பதற்கு ஒரு நாளும் அவர் சம்மதித்துத் தயாராகி யிருக்க மாட்டார்.

லால்ஜி சேட்டின் மனைவி கொஞ்சம் முன் பின்னாக வந்திருந்தால்கூட அந்தக் காரியம் கெட்டிருக்கும். ஆயிரம் ஐந்நூறு போதாது என்று ஜுகல் கிஷோர் சொல்வதும் அவள் அங்கே வருவதும் சரியாக இருந்தது. எல்லாவற்றுக்கும் காலம் ஒத்துக் கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு உண்மை! அந்த

அறையில் இருந்த அலமாரியில் புதிதாக வரவழைத்த வெள்ளித் தட்டு வைத்திருந்தது. அது அந்தச் சமயம் பார்த்து அவளுக்கு அவசரத் தேவையாக இருந்தது. அதை எடுப்பதற்காக அங்கே வந்த அவளுடைய காதுகளில் அவ்விருவருடைய சம்பாஷணையும் விழாமல் எப்படி இருக்க முடியும்?

லால்ஜி ஸேட் பெண்களைப் பற்றிக் கொண்டிருந்த கொள்கைகள் ஒரு உறுதியும் திட்ட வட்டமான நிச்சயமும் வாய்ந்தவை. மாதர் இயக்கம் பெண்கள் சங்கம், ஸ்திரீகள் சுதந்திரம் போன்ற இந்தக் காலத்து நாகரிகப் போக்குகளில் அவருக்குப் பிடிப்புக் கிடையாது. அருவருப்புத்தான் அதிகம். அவர் பெண்மணிகளைப் பிற புருஷர்களின் கண்களில் படாமல் காப்பாற்ற வேண்டிய ஜீவன்களாகவே கருதி வந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! முதலில் இடங் கொடுத்து, விட்டு வைத்து, அப்புறம் அவர்களை அவ்வழியில் செல்லக் கூடாது என்று அடக்கு முறையைப் பிரயோகிப்பது பிரயோஜனம் இல்லை என்ற கட்சியைச் சேர்ந்தவர் அவர். முன்னாலேயே கெட்டிக்காரத் தனமாகவும் ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். வெள்ளம் வந்த

புது வாழ்வு

செல்வத்தில் கொழித்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் குடும்பம் ஏழைமை நிலையடைகிறது. அதன் காரணமாகச் சுந்தரம் ஒரு செல்வவந்தரை அணுகி அவர் உதவியால் பிழைக்க நேருகிறது. நண்பன் பாலுவின் உதவியினால் அந்தப் பணக்காரரிடம் சுந்தரத்துக்கு வேலை கிடைக்கிறது. வறுமை விடை கொள்கிறது. முதலாளியின் மகள்—விமலா சுந்தரத்தைக் காதலிக்கிறாள். பணச் செருக்கு பிடித்த விமலாவின் காதலை ஏற்க விரும்பாத சுந்தரம் வேலையை இழக்கிறான். பிறகு கோரக் கொலை, பழி, மரணம் இப்படி ஒன்றை யடுத்து ஒன்று சேர்ந்து கதை முடிகிறது. முக்கியமாக இந்தக் கதையில் உண்மைக் காதல் வேரூன்றித் தழைக்கிறது; அந்தக் காதல் வேரூன்ற இன்னொரு காதல் பலியாகிறது. பணக்காரப் பெண் சுந்தரி மனம் திருந்தத் தன் காதலில் வெற்றி பெறுகிறான். அடுத்தடுத்து வரும் துன்னலுக்குப் பிறகு எஞ்சி நிற்பவர்கள் இன்பம் காண முடிகிறது.

இக் கதையில், ஆரம்பம் முதல் முடிவு வரையில் சமயமும் சந்தர்ப்பமும் சேர்ந்தபோ தெல்லாம், சூழல் மலிந்து சோர்ந்து கிடக்கும் நம் சமுதாயத்துக்குச் 'சுளீர்! சுளீர்!' என்று ஆசிரியர் சவுக்கடி தருகிறார். வாழ்வின் சிறுமை கண்டு சீறி யெழுகிறார். தமிழ் நடையும் அதற்கேற்ப கம்பீரமாக நிமிர்ந்து நின்று நடை போடுகிறது.

ஆசிரியர் : அருணன் ; பிரசுரம் : தமிழ் முழக்கம் பதிப்பகம் சென்னை—14; விலை. ரூ. 1—8—0.

பின் அணை கோலுவது என்பது அவர் அகராதியிலேயே இல்லை. அவர் தமது முதல் இரு மனைவிகளையும் இதே முறையைக் கடைப்பிடித்துத்தான் கண்டிப்பாக நடத்தி வந்திருக்கிறார். ஆனால் மூன்றாவது மணம் புரிந்து கொண்ட பின் அவருடைய அந்தக் கொள்கை நடைமுறையில் கொஞ்சம் தளர்ச்சி கண்டு விட்டது. இதற்குக் காரணம் முதுமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த அவருடைய வயதா அல்லது அவருடைய மனைவி விஜய லக்ஷ்மியின் அழகிய உடலும் எடுப்பான தோற்றமுமா என்று சொல்வது சற்றுச் சிரமம். அவருடைய கொள்கையில் கொஞ்சம் தளர்ச்சி ஏற்பட்டு விட்டதனால் விஜயலக்ஷ்மி சங்கோசப்பட்டு நாணிக் கோணிக் கொண்டு நிற்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விட்டாள்.

சிற்சில சமயம் அவள் குதிரை வண்டியிலோ மோட்டாரிலோ உலாவப் போய் வருவது உண்டு. ஏதாவது சந்தர்ப்ப விசேஷங்களில் நான்கு பேருடன் உட்கார்ந்து பேசும் துணிவு கூட அவள் பெற்று விட்டாள். கணவன் மனைவி என்று ஆகி விட்ட பின் ஒருத்திக்குத் தன் கணவனின் உடைமைகளையும் உரிமைகளையும் அநுபவிக்கும் அதிகாரம் கிடைத்து விடுகிறதல்லவா? அப்படி யிருக்கும் பொழுது கணவனுடைய பிராயத்தையும் தனக்குக் கிடைத்துள்ள ஒரு உரிமைப் பொருளாகக் கருதித் தன் இஷ்டப்படி அநுபவிக்க ஒரு மனைவி முன் வந்தால் அதில் என்ன தவறு?

பெரும்பாலான ஆண்களிடத்தில் அழகைக் கண்டு பருகுவதில் ஒரு ஆசையும் இன்ப அநுபவத்தில் எல்லையில்லாத உணர்ச்சியும் வயதுக்குத் தக்கபடி விருத்தி அடைந்து கொண்டே போகின்றன. அதன் காரணமாக லால்ஜி ஸேட் யௌவனப் பருவத்தில் பூரித்து நிற்கும் தமது மனைவியின் அழகை மிதமிஞ்சிய காதல் வேகம் கண்களுடன் பார்த்து மகிழ்வார். முந்திய இரண்டு மனைவிகளிடத்தில் இருந்த அதே குற்றங்களை அவளிடமும் கண்ட பொழுதிலும், அவர் அதை அதிகமாகப் பொருட்படுத்தாமல் எள்ளி நகையாடுவதற்கான விஷயமாக மதித்து அதற்கேற்ற முறையில் நடந்துகொள்ள முயன்றார்.

அதனால்தான் ஜுகல் கிஷோர் கேட்ட தொகையைத் தமது மனைவி ஊக்கி உற்சாக மூட்டியதன் பேரில் லால்ஜி ஸேட் கொடுக்க முன் வந்தார். விஜயலக்ஷ்மி பேச்சு வாக்கில், "இந்தக் காரியத்துக்குக் கொஞ்சம் நல்ல ஆசாமிகளாக வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆமாம். நல்ல ஆசாமிகளாக வைத்துக் கொள்ளா விட்டால் வேலை நடக்குமா?" என்றான் ஜுகல் கிஷோர்.

"நான் உங்களுக்கு ஒரு ஆள் சொல்லுகிறேன்!" என்றாள் விஜய லக்ஷ்மி. அப்

பொழுது அவன் நாற்காலியில் ஒரு கால் மேல் இன்னொரு காலைப் போட்டுத் தொங்க விட்டுக் கொண்டு ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தான். லால்ஜி ஸேட் அந்தக் காட்சியையே கண் கொட்டாமல் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார்.

"நம் பக்கத்து வீட்டில் ஜகதீஷ் குமார் என்று ஒருவர் இருக்கிறார் அவர் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கிறார். பத்திரிகை ஆசிரியராக இருப்பதனால் அவருக்குத் தெரிந்தவர்கள் அநேகம் பேர் இருக்கலாம் அல்லவா? அவருடைய உதவியையும் நாடினால் என்ன என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றாள் விஜயலக்ஷ்மி.

தமது மனைவியின் மேதையில் லால்ஜி ஸேட்டுக்கு அபார நம்பிக்கை விழுந்து விட்டது. பத்திரிகை ஆசிரியர்கள் என்றால் பெரும்பாலானவர்களைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் உதவி பெற்றால் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிராது. இந்த எண்ணம் எழுவது யாருக்கும் இயல்புதானே? பணத்தில் குறியாயிருக்கும் லால்ஜி ஸேட்டுக்கு மட்டும் எழாமல் இருக்குமா?

"ஆமாம், ஆமாம்! அவரைக் கட்டாயம் கூப்பிட வேண்டும். நான்கூட என்னை வந்து பார்க்கும்படியாக அவரிடம் இப்பொழுது தான் சொல்லி வந்திருக்கிறேன். அதோடு அவர் நம் வீட்டிலேயே குடியிருப்பவரும் இல்லையா? அதனால் அவருடைய உதவியை நாம் கட்டாயம் நாடித் தான் ஆக வேண்டும்!" என்று சொன்ன லால்ஜி ஸேட், வேலைக்காரனைக் கூப்பிடுவதற்காக உடனே மேஜை மீதிருந்த மணியை அடித்தார். வேலைக்காரன் வந்ததும் அடுத்த வீட்டுக்குச் சென்று ஜகதீஷை அழைத்து வருமாறு உத்தரவிட்டார்.

"ஜகதீஷா? அவன் எதற்கு உபயோகப் படுவான்? அவனை எனக்கு நன்றாகத் தெரியுமே!" என்றான் ஜுகல்கிஷோர். அவனுக்குத் தன் சொல்லில் பரிபூரண நம்பிக்கை இருந்தது. அதனால் அவன் அதைப் பற்றி அப்பொழுது அதிகமாகப் பேச விரும்பவில்லை. அப்படிப் பேசுவது நன்றாகவும் இராது என்று விட்டு விட்டான். "சரி! அவனும்தான் வரட்டுமே! நானும் அவனைப்பார்த்து எத்தனையோ நாட்கள் ஆகி விட்டன!" என்றான்.

ஜகதீஷ் வருவதற்குப் பத்து நிமிஷங்களுக்குக் குறையாமல் பிடித்திருக்கும். அதற்குள் ஜுகல்கிஷோர் வாக்குகள் சேகரிப்பதற்காக ஒரு பெரிய திட்டமே தயாரித்து விட்டான். வாகன வசதிக்கென்று எத்தனை வண்டிகள் வேண்டியிருக்கும்? எத்தனை மோட்டார்கள் தேவைப் படும்? யார் யாருக்குத் தேநீர் கொடுக்க வேண்டும்? யார் யாருக்குக் காப்பி கொடுக்க வேண்டும்? யார் யாருக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தாக

வேண்டியிருக்கும்? யார் யாருக்கு இனிப்புடன் கூடிய நல்ல சிற்றுண்டியே செய்து வைக்க வேண்டியிருக்கும்? யார் யார் வீட்டுக்குக் குழந்தைகளுக்கென்று பப்பர்மெண்டு டப்பாக்கள் அனுப்ப வேண்டியிருக்கும்? இவற்றையெல்லாம் கிரமப்படுத்தி வரிசைப் படுத்தி வெகு அழகாகச் சொல்லி விட்டான் ஜுகல் கிஷோர்.

அதுமட்டுமா? அரசாங்க சபையில் வெற்றி பெற்று வெளிவருவதென்றால் அது இலேசுப் பட்ட காரியம் இல்லை என்பதில் ஸேட்டுக்கு நல்ல நம்பிக்கை உண்டாகும்படி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து தீர்த்து விட்டான்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தகுதி வேண்டும், அதிகார தோரணையும் ஆடம்பரமும் வேண்டும். சக்கர வட்டமான பேச்சுப் பேசத் தெரிய வேண்டும். யாருடைய வாதத்தையும் எதிர் வாதம் புரிந்து வெற்றி கொள்ளத் தெரிய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பணத்தைச் செலவு செய்யும் விதரணை தெரிய வேண்டும். இது போன்ற விஷயங்களையெல்லாம் எடுத்துக் கூறி இவற்றில் எல்லாம் வெற்றி பெற வேண்டும், அப்பொழுதுதான் தேர்தலிலும் வெற்றி கிட்டக் கூடும் என்பதை ரத்னச் சுருக்கமாக ஜுகல் கிஷோர் எடுத்துச் சொன்ன மாதிரியே வெகு அழகாயிருந்தது.

அவன் தன்னுடைய திட்டத்தைச் சொல்லி முடிப்பதற்கும் ஜகதீஷ் வந்து சேருவதற்கும் சரியாக இருந்தது. (தொடரும்)

உங்கள் ஊர்ப் பஞ்சாயத்து

கட்டுரைப் பரிசுப் போட்டி

சுமார் ஒரு வருஷத்துக்கு முன்பு தமிழ் நாட்டுக் கிராமங்கள் பலவற்றில் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப் பட்டன. கிராமங்களில் வயது வந்தோர் அனைவரும் கூடி, சர்வஜன வாக்குரிமை அடிப்படையில், பஞ்சாயத்து அங்கத்தினரையும் பஞ்சாயத்துத் தலைவர்களையும் தேர்ந்தெடுத்தார்கள். முன்னொரு காலத்தில் 'யூனியன்' என்று அழைக்கப்பட்டுப் பிறகு மேஜர் பஞ்சாயத்து என்று ஆன பெரிய பஞ்சாயத்துச் சபைகள், 'மைனர்' பஞ்சாயத்து என்று குறிப்பிடப்பட்ட சிறிய கிராமங்களின் பஞ்சாயத்துச் சபைகள் எல்லாமாகச் சேர்ந்து தமிழ் நாட்டின் பதினொரு ஜில்லாக்களிலும் சில ஆயிரம் பஞ்சாயத்துச் சபைகள் அமைக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. கிராமங்களின் முன்னேற்றத்துக்குரிய பல ஆக்க வேலைகளைச் செய்வதற்கும், அவற்றுக்காகப் புதிய வரிகள் போட்டு வசூலிப்பதற்கும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன.

இவ்வாறு சுமார் ஓராண்டு காலமாக இயங்கி வரும் பஞ்சாயத்துச் சபைகளின் வேலைகளைப் பற்றி நேயர்களின் கருத்தை அறிவதற்காக இந்தக் கட்டுரைப் பரிசுப் போட்டியை ஏற்படுத்துகிறோம்.

கட்டுரைகளில் குறிப்பிட்டு அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டிய அம்சங்களுக்குக் கீழே சில உதாரணங்கள் தந்திருக்கிறோம்:—

1. உங்கள் ஊரில் ஏற்பட்டுள்ள பஞ்சாயத்து நல்ல முறையில் நிர்வாகம் நடத்தி வருகிறதா!

2. உங்கள் ஊரில் புதிய முறையில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு கிராம வாழ்க்கையில் உண்மையான முன்னேற்றம் காணப் படுகிறதா! எந்தெந்தத் துறையில் முன்னேற்றம் காணப் படுகிறது!

3. உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவர் என்று கருதுகிறீர்களா! அவர் தம்முடைய கடமைகளைச் சரிவர ஆற்றி வருகிறாரா! அவர் பஞ்சாயத்துத் தலைவர் ஆன பிறகு ஊர் ஜனங்களிடையில் அவருடைய செல்வாக்கு வளர்ந்திருக்கிறதா! அல்லது குறைந்திருக்கிறதா!

4. உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் தங்கள் கடமைகளைத் திருப்திகரமாகச் செய்து வருகிறார்களா!

5. உங்கள் ஊரில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு என்னென்ன புது வரிகள் விதித்திருக்கிறார்கள்! அந்த வரிகள் நியாயமான வரிகளா! வரி வசூல் சரியாக நடந்து வருகிறதா! வசூலித்த வரிப் பணம் நல்ல முறையில் பொதுஜன நன்மைக்கு உகந்த காரியங்களுக்காகச் செலவழிக்கப் பட்டு வருகிறதா!

6. பஞ்சாயத்தார் செய்யத் திட்டமிடும் பொது நன்மைக்கு உகந்த காரியங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகள் அனுகூலமாக இருக்கிறார்களா! அல்லது வீண் தாமதம் செய்தும் அநாவசியமான ஆட்சேபங்களைக் கிளப்பியும் முட்டுக் கட்டை போட்டு வருகிறார்களா!

உதாரணமாக, ஊரில் குடி தண்ணீருக்காக ஒரு கிணறு எடுக்க வேண்டும் என்றோ, தூர்ந்து போன குளத்தை வெட்டி ஆழமாக்க வேண்டும் என்றோ, பஞ்சாயத்தார் திட்டமிட்டால், அதை நிறைவேற்ற மேலதிகாரிகளிடமிருந்து நியாயமான கால வரம்புக்குள் அநுமதி கிடைக்கிறதா!

அல்லது அதிகாரிகளின் மதமதப்பினால் திட்டங்களை நிறைவேற்றுவதில் வீண் காலதாமதம் ஏற்படுகிறதா!

7. இப்போது நடப்பதை விட நல்ல முறையில் தீவிரமாகக் கிராம நலத்துக்குகந்த காரியங்களைச் செய்ய முடியுமா! அப்படியானால் அவ்விதம் செய்யும்படி பஞ்சாயத்தாரைத் தூண்டுவதற்கு என்ன என்ன முறைகளைக் கையாளலாம்!

8. சர்வ ஜன வாக்குரிமை அடிப்படையில் கிராம ஜனங்களை ஒன்று கூட்டி, கையைத் தூக்கச் செய்து பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை நல்ல முறை என்று நீங்கள் கருதுகிறீர்களா! அல்லது சட்டசபைத் தேர்தல்களில் நடப்பது போல், இரகசியமாக வோட்டுப் பெட்டியில் வோட்டுப் போடும் முறையையே பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா!

9. பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இப்போது அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும்விட அதிகமாகக் கொடுக்கலாமா!

10. சமீபத்தில் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் காரியதரிசி கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் குற்ற விசாரணை செய்து நியாயத் தீர்ப்புச் சொல்லும் உரிமை அளிக்க வேண்டும் என்று ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

நீங்கள் இதை அங்கீகரிக்கிறீர்களா! அல்லது கிராமப் பஞ்சாயத்தாரிடம் நீதி மன்றத்தின் பொறுப்பையும் அளித்தால், பட்சபாதமான தீர்ப்புகள் ஏற்பட ஏதுவாகும் என்றும், தங்களுக்கு வோட்டுக் கொடுத்து ஆதரித்தவர்கள் பக்கம் தீர்ப்புச் சொல்லுவது என்று ஏற்பட்டு விடும் என்றும் கருதுகிறீர்களா!

மேலே குறிப்பிட்ட பத்து அம்சங்களைப் பற்றியும், இன்னும் உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தைப் பற்றி உங்கள் விசேஷ அபிப்பிராயங்களையும் கட்டுரைகளில் எழுதி அனுப்பலாம்.

அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அவரவர்கள் ஊர்ப் பஞ்சாயத்து நிர்வாகத்தைப் பற்றி எழுதுவது மிகப் பொருத்தமாயிருக்கும். ஆனால் பக்கத்து ஊர்ப் பஞ்சாயத்துக்களைப் பற்றியும் நேரில் சென்று விசாரித்துத் தக்க ஆதாரங்களுடன் கட்டுரை எழுதலாம்.

ஜூலை மீ 5உக்குள் கட்டுரைகள் "கல்கி" காரியாலயத்துக்குள் வந்து சேர வேண்டும்.

அவற்றுள் மிகச் சிறந்தது என்று ஆசிரியரால் கருதப்படும் கட்டுரைக்கு ரூ 25 பரிசு அளிக்கப்படும். மற்றும் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு ரூ 15 வீதம் தரப்படும்.

இன்னும், பிரசுரத்துக்குத் தகுதியாயுள்ள கட்டுரைகள் எல்லாம் பிரசுரிக்கப்படும்.

மேல் உறையில், "பஞ்சாயத்துக் கட்டுரை" என்று தயவுசெய்து குறிப்பிடவும்.

பாசமும் பரிவும்



கே. வி. முருகன்

அந்த நாட்கள் இன்று கனவாகி தேய்ந்து மறைந்து விட்டன! ஆனால் அன்று!

உள்ளம் ஆயிரம் கோடி எண்ணங்களை எண்ணியது. ஆனால் உணர்ச்சிக்குச் சக்தியளிக்கும் தன்மை என்றோ போய் விட்டது. ஒரு காலத்தில் அன்பும், ஆர்வமும் பெருக்கெடுத்தோடிய அதே உள்ளம் தான்! இன்றோ அருமையும் பொறுமையும், நிறைவேறா ஏக்கமும் பொங்கி வழிந்து கொண்டிருந்தன! அன்று ஆசைக்காக ஏங்கியது உள்ளம். இன்று ஆசை கொள்ள முடியவில்லையே என்று ஏங்கியது அதே உள்ளம்.

தெய்வமே! இதற்கு முடிவே கிடையாதா! எத்தனை நாட்களுக்கு நான் இப்படிச் சாகாமல் செத்துக் கொண்டே கிடப்பது! ஒரேயடியாய்ச் செத்து விட்டால் அப்புறம் எண்ணங்கள் ஏது! எல்லாம்தான் அழிந்துவிடுமே! கடவுளே! ஏன்; எனக்குச் சாவு வரவில்லை!

ஒருவேளை; நான் மீண்டும் பழைய நிலைமையடைந்து, இளமையும், யௌவனமும் பொங்கும் புதுப் பெண்ணாக மிளிர்வேனா! சீச்சீ! என்ன விநோதமான கற்பனை! எழுந்து நடக்க மாட்டாமல், படுக்கையும் கட்டிலுமே கதி என்று கிடக்கும் இன்றைய நான் இங்கே! புதுப் பொலிவுடன் பூரணப் பிரகாசமாகத் துள்ளித் திரிந்த அன்றைய நான் எங்கே!

எலும்பும் தோலுமாய், கன்னங்கள் குழி விழுந்து, கண்களில் ஒளி மங்கி உதடுகள் சுருங்கி, முக்கலும் முனகலுமாகக் கிடக்கும் இன்றைய எனக்கும்; தள தளவென்று பூரித்துப் பொங்கி நின்ற உடம்புடன், ஆப்பிள் பழம் போன்ற கன்னங்களுடன், துள்ளும் கயல் விழிகள்; உற்சாகத்தை அள்ளி இறைக்கும் உதடுகள் இவைகளுடன், சிரித்துக் குலுங்கிப் பேசும் அன்றைய எனக்கும் எத்தனை வித்தியாசம்!

அந்த நாளும் வந்திடாதோ! பகவானே! வேண்டாம்! இன்பம் பொங்கி ஓடிய அந்த நாட்களை நினைத்து இன்புற்றுக் கொண்டிருக்கும் போதே என் உயிரை வாங்கி விடு! என் துயரச் சுமையும் அத்துடன் மடியட்டும்.

** ** **

அவர் என்றும் போல் வருகிறார். அருகில் அமருகிறார். அவருடைய உள்ளத்தில் மட்டும் என்னால் நுழைந்து பார்க்க முடிந்தால்! அங்கு என்னென்ன எண்ணக் குவியல்கள் கொட்டிக் கிடக்கின்றன என்பதை அறிந்தே விடுவேன்! அறியத்தான் முடியவில்லையே!

ஓர் உத்தம பத்தினிக்கு, தன் கணவர் உள்ளத்தில் எண்ணும் எண்ணங்கள் அறிய முடியாதா, என்ன! எனது உள்ளத்தில்தான் தெளிவில்லையே; பின் எப்படி அறிய முடியும்!

கட்டிலில் என் பக்கத்தில் உட்காருகிறார். குச்சி குச்சியாக மெலிந்து கிடக்கும் என் கைகளை, தாமரை போன்ற தமது கைகளில் எடுத்து வைத்துக் கொள்கிறார். சிதைந்து கிடக்கும் எனது கேசங்களை ஒழுங்கு படுத்துகிறார். அப்போதெல்லாம், அந்த ஸ்பரிசம் எனக்குப் புதியதொரு சக்தியை அளிக்கத்தான் செய்கிறது: கண்களில் எங்கிருந்தோ ஒரு புதிய ஒளி தேங்குகிறது. மனம், நிறைவேறாத ஆசைக்காக அலை பாய்கிறது! இவையெல்லாம் ஒரு கணந்தான்! அடுத்த நிமிஷத்தில் உள்ளத்தில் எங்கிருந்தோ ஒரு விஷ சக்தி பாய்கிறது. உள்ளத்தைப் பிடித்துக் கொள்கிறது; வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது!

இவருடைய இந்தப் போக்கு-என்பால் காட்டும் இத்தனை பரிவும் — உண்மைதானா! இல்லை; ஏதோ கடமையைச் செய்யும் ஒருவித ஏமாற்றம் தானா? என்னால் எதுவும் தீர்மானிக்க முடியாத படி தடுமாறுகிறேனே.

என்ன இருந்தாலும் ஆண் மகன் ஆண் மகன் தானே! என்னையே யன்றி வேறு யாருக்கும் இடமளிக்காத உள்ளத்தில், நானே சர்வமுமாய் வியாபித்து நின்ற அவரது மனத்திரையில் இன்று வேறு யாராவது......! சேச்சே! ஏன் இந்தக் கொடிய எண்ணம்! இப்படிக் கெடு கெட்ட எண்ணங்கள்தான் என்னை வியாதியினின்றும் எழ விடாமல் செய்கின்றன போலும்! அல்லது இப்படித் துர் எண்ணங்களின் சேர்க்கை என்னை அமைதியாகச் சாக விடாமலும் செய்யலாமே!

எத்தனை உன்னத புருஷராக எண்ணி இறுமாந்திருந்தேன்! உலகில் எவருக்கும் கிட்டாத பாக்யமாக எனக்குக் கிடைத்து விட்ட என் இன்பக் கணவரைப் பற்றிச் சந்தேகிக்கும் இந்தப் பாவி இன்னமும் ஏன் உயிரோடு வாழ வேண்டும்!

அப்படித்தான் அவர் வழி தவறிச் சென்று விட்டாலும் கூட, அதைக் குறை கூற நான் அருகதை யுடையவளா! அவரின் வாலிப வயதில் உலகத்தை ரஸிக்கும் பருவத்தில், நடைப்பிணமாய்க் கிடக்கும் நான் இரண்டு வருட காலம் அவருக்குத் தொல்லை கொடுக்கும் எலும்புக் கூடாய்க் கிடக்கின்றேனே! அவரும் டாக்டர்கள் மருந்துகள் என்று அலைவதைத் தவிர வேறு என்ன கண்டிருக்கிறார்! இரண்டு ஆண்டுகள் என்பது கொஞ்சமா!

தினம் என்னிடம் வருகிறார். கொஞ்ச நேரம் தான் உட்காருகிறார். என்றாலும், கல்ப கோடி காலம் என் அருகில் அவர் உட்கார்ந்திருப்பதாக உணருகிறேன். ஏதேதோ அவர் கேட்கிறார். நான்தான் எதற்கும் பதிலளிக்காது, கண்கள் நிலைகுத்தி நிற்க, அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேனே! என்ன நினைத்துக்கொள் வாரோ தெரியாது. அலை பாய்ந்து கிடக்கும் என் உள்ளத்துக்கு ஆறுதல் கூறுகிறார். பிறகு எழுந்து சென்று விடுகிறார்.

அவர் போய் விடுகிறார். சென்ற பின் பெருமூச்சு விடுகிறேன். 'இப்படி ஒன்றும் பேசாமல் அசடாக இருந்து விட்டோமே!' என்று அல்லலுறுகிறேன். "அவர்தான் தினம் தினம் உன்னிடம் வருகிறாரே! உன் அருகில் உட்காருகிறார்; உன்னிடம் ஏதேதோ கேட்கிறார். அப்போதெல்லாம் உன் புத்தி எங்கே போய் விடுகிறது! அவர் சென்றபின் ஏன் அலைக்கழித்துக் கொள்கிறாய்!" இப்படி ஒருமனம் பேசுகிறது.

நான் பேசத்தான் நினைக்கிறேன். அவர் உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை எல்லாம், என்னைக் குமிழியிட்டோடும் நினைவு அலைகளை யெல்லாம் அறிய வேண்டும், தெரிந்து கொள்ள முயல வேண்டும் என்றெல்லாம்தான் நினைக்கிறேன்.

ஆனால் அவர் முன்னால் பேசத்தான் முடிய வில்லையே! அவர் முகத்தைப் பார்க்கிறேன்; பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அப்புறம் பேசுவதற்கு வாயேது!

அவர் முகத்திலுள்ள வாட்டம்; நிறைவேறா ஏக்கம், அதை அவர் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு, என்னிடம் இன்முகம் காட்டிப் பேசுவது; இத்தனையும் அறிகிறேனே! பிறகு என்னத்தைப் பேசுவது!

பாவம்! என்னால் எத்தனைக் கஷ்டம் அவருக்கு! ஒருநாளா, இரண்டு நாளா! இல்லை; சில மாதங்களா! வருடங்கள்! இரண்டு நீண்ட வருடங்கள் அல்லவா! ஆம்! நான் படுக்கையும் கட்டிலுமாய், சாகவும் மாட்டாமல், குணமும் ஆக மாட்டாமல் இருபத்திநான்கு மாதங்கள் கிடக்கிறேனே. இது அவருக்கு எத்தனை கொடிய வேதனையைத் தரும்! அதைக்கூட நான் அறிய மாட்டேனா; என்ன!

அப்படி ஒன்றும் வயதாகி விடவில்லையே; உலக சுகாநுபவங்களை வெறுத்து விரக்தி மார்க்கத்தில் செல்ல! இன்பம் கொஞ்சும் பருவம்! உலகில் காணும் இன்பங்களை யெல்லாம், தன





சைதாப்பேட்டைக்கு அருகில் புதிதாக உருவாகியுள்ள ராஜாஜி நகருக்குச் சென்னை மேயர் திரு ஆர். முனுசாமிப் பிள்ளை ஜூன் 6-ந் தேதி விஜயம் செய்தார். ராஜாஜி நகர் பொதுநல ஊழியர் சங்கத்தினர் அவரை வரவேற்று மேற்படி நகரில் வாழும் ஏழை மக்களுக்குக் குடி தண்ணீர் வசதியும், சுகாதார சௌகரியங்களும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

தாக்கிக் கொள்ள வேண்டும்; என்ற ஆர்வம் கரைபுரண்டோடும் வயது! வாலிபத்தின் வாசற்படியில் தானே நிற்கிறார்! உலகை அநுபவிக்க வேண்டிய காலத்தில், உலகத்தின்மீது வெறுப்பு ஏற்படச் செய்யும்படியாக நான் கிடந்து தவித்துக் குறுக்கிடுகிறேனே!

எத்தனை எத்தனை எண்ணங்கள், அவருடைய சிந்தனைப் பாறையில் பட்டுச் சிதறினவோ! அல்லற்படும் அவருக்காக நான் சீக்கிரம் இறக்கத் தான் வேண்டும்! ஆனால், சாவு அவ்வளவு எளிதானதா? நாம் கூப்பிட்டவுடன் வந்துவிட.

நான் நன்றாக வாழ்ந்ததெல்லாம் மூன்று வருடங்கள் தானே! மூன்றே வருடங்கள். முழு மனித வாழ்க்கையில் மிகமிகக் குறுகிய காலம்; அற்பத்திலும் அற்பம்! அந்தச் சுருங்கிய காலத்துக்குள்ளே எத்தனை இன்பக் கோட்டைகள்! ஆனந்த உலகில் சஞ்சரித்தோமே! இன்ப உலகில் களிநடம் புரிந்தோமே! மேகமலர் காவனத்தே, வானவில்லின் வீதியிலே, வேக மின்னல் போன்று விளையாடிக் களித்த காலமல்லவா அது! அந்த இன்ப நினைவுகளெல்லாம் இன்று என்னைப் படாதபாடு படுத்துகின்றனவே! நான் தான் பிணியும் மருந்துமாகக் கிடக்கிறேன். ஆனால் அவர்!

எண்ணங்களும், ஆசைகளும் எக்காளமிட்டுப் பெருகிப் பரவும் இளம் பருவத்தில், இன்ப லோகத்தில் சஞ்சாரம் செய்யவேண்டிய அவர், உருமெலிந்து, உளம் நைந்து, உணர்ச்சி யிழந்து, ஊசலாடும் உயிரைச் சுமந்து கிடக்கும் என்னால் எப்படித் தடைப் படுத்தப் பட்டிருக்கிறார்! இவ்வித எண்ணம் அவர் சென்றவுடன் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. அவ்வித எண்ணங்களை, தாம் படும் வேதனைகளை, அகத்திலோ, முகத்திலோ சிறிதாவது பிறர் தெரிந்து கொள்ள விடுகின்றாரா! எத்தனை பெரிய உத்தமர் அவர்!

அவரிடம் கூறி விடவேண்டும், கூறியே விட வேண்டும்; என்ற நினைப்பு தினம் தினம் எழும். ஆனால் ஏனோ கூறுவதில்லை. "இனி என்னிடம் நீங்கள் எதை எதிர்பார்க்க முடியும்! மறலியின் வரவை எதிர்பார்த்து, மரணத்தின் வாசலிலே மல்லாடி நிற்கும் என்னால் உங்களுக்கு உபத்திரவத்தைத் தவிர வேறு எதை அளிக்க முடியும்! இந்த உயிரைச் சுமந்து அலைவதனால் எனக்கும் கஷ்டம்: உங்களுக்கோ, சொல்ல முடியாக் கஷ்டம்! இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் விமோசனமே கிடையாதா! நான் மீண்டும் பழைய கோலம் அடைவேன் என்று கருதுகிறீர்களா! அப்படியாயின் அது வீண் பிரமையே! அப்படியே வியாதி நீங்கி எழுந்து விட்டாலுங்கூட, என்னிடம் எத்தவித சுகத்தையும் நீங்கள் எதிர்பார்க்க முடியுமா! நான் இனி என்றும் நடைப்பிணம் தான்! ஏன் இந்தக் கஷ்டம்! நீங்கள் வேறு ஒருத்தியை மணந்து கொள்ளக் கூடாதா!"

இப்படிக் கேட்டு விடுவது; கேட்டே விடுவது என்ற தீர்மானத்துக்கு வந்தேன். இவ்விதத் தீர்மானம் ஏற்பட்டபின், என் உள்ளம் சற்றுப் பிரகாச மடைந்தது. புதியதொரு தெளிவும், ஊக்கமும் உற்சாகமும் பிறந்தது.

அன்றும் வழக்கம்போல் வந்தார். ஏதேதோ தேறுதல் கூறினார். என் உதடுகள் எனது தீர்மானத்தைக் கூறிவிடத் துடித்தன. ஏனோ கண்களினின்று நீர்பொங்கி வழிந்து ஓடின. வறண்டு வற்றிப் போயிருந்த என் கண்கள் அருவியெனக் கொட்டிற்று. பசையற்று, வெளிர்த்து, எலும்புக் கூடாய்க் கிடந்த என் உடம்பில், எங்குதான் அவ்வளவு கண்ணீரும் தேங்கிக் கிடந்தனவோ?

'ஏன்! என்ன கூற வேண்டும்! தயங்காமல் கூறு; தைரியமாகக் கூறு!" என்றார்.

ஒருவழியாக எனது தீர்மானத்தைக் கூறியே விட்டேன். அப்பா! எனது நெஞ்சிலிருந்த பெரிய சுமை இறங்கி விட்டது. கண்களில் வழிந்தோடிய நீரும் நின்று விட்டன. அவரை நன்ருகக் கூர்ந்து ஆசைதீரப் பார்த்தேன்.

அவர் கண்களில் கண்ணீர் திரையிட்டது! தமது இரு கரங்களாலும் இறுகத் தமது தலையைப் பிடித்துக் கொண்டிருந்தார். முகம் சிவந்து கொதித்துக் கொண்டிருந்தது. எத்தனை நேரம் இப்படி யிருந்தாரோ தெரியாது. திடீரென்று, "என்னை அவ்வளவு பெரிய தூர்த்தன் என்று கருதி விட்டாயா! நம் பால்ய நினைவுகளை நினைத்துப் பார்!" என்ருர். இவ்வளவுதான் கூறினர். அவர் குரலில் நிதானம், கம்பீரம் இருந்தது. கோபமோ, வெறுப்போ இல்லை. கைக்குட்டையை எடுத்தார், கண்களைத் துடைத்துக் கொண்டார். எழுந்தார். என்னை ஒரு தரம் பார்த்தார். திடுதிடுவென்று போயே விட்டார்.

அவரைத் தடுத்து நிறுத்த எழுந்தேன். அவ்வளவுக்கு உடம்பில் திராணி ஏது! மீண்டும் கட்டிலில் தொப்பென விழுந்தேன்.

தேம்பித் தேம்பி அழுதேன். "என்னை அவ்வளவு பெரிய தூர்த்தன் என்று கருதி விட்டாயா!" என்ற வாக்கியங்கள், என்னைச் சவுக்கால் அடிப்பது போன்று, சுரீரென உறைத்தது. நொந்துபோய்த் துயருற்றுக் கிடந்த அவரது உள்ளத்தை உடைத்து விட்டேனே!

ஆனல் ஒரு வகையில் அவர் கூறிய வார்த்தைகள் என் உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில், ஆசைக் கனவுகளையும், இன்ப நினைவுகளையும் தட்டி எழுப்பி விட்டன.


எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி நான்! உலகில் எத்தனை அன்புடைய கணவரைப் பெற்றிருக்கிறேன்! அவர்தான் கூறினரே! 'நம் பால்ய நினைவுகளை நினைத்துப் பார்!' என்று. பால்ய நினைவுகள்! அவைகளைத்தான் எத்தனை எத்தனை நாட்கள் நினைத்து நினைத்து ஏங்கி யிருக்கிறேன். எண்ணி எண்ணி ஏங்காத இரவு தான் உண்டா! மீண்டும் சிந்தனையில் திரை விரிந்தது. பால்ய எண்ணச் சுருள்கள் விரிந்து, விரிந்து சென்று, சிந்தனைத் திரையில் படமாக ஓடிற்று.

அப்போது எனக்கு வயது பதின் மூன்ரோ, பதினன்கோ இருக்கும். பிஞ்சுப் பருவம். எதைப் பற்றியும் தெளிவான எண்ணங்களோ, கருத்துக்களோ ஏற்படாத காலம் அது. எதைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஆசைகள் ஏற்படும் காலம் அது. அப்போது தான் ஒரு நாள் அவரைச் சந்தித்தேன்.

"மூக்கை விளைப்பயனே; அல்லது விதி என்று கூறப்படுகிறதே! அதன் செயலோ அறியேன்" என்று ஆரம்பித்த சந்திப்பு மறக்க முடியாததாக அமைந்து விட்டது. மாற்ற முடியாததாக ஏற்பட்டு விட்டது.

அடிக்கடி சந்திப்போம். பள்ளியில் பயிலும் எனக்குப் பாட புத்தகம் தானே உலகம்! என்னுடைய அந்த உலகத்தில், அப்போதைக் கப்போது ஏற்படும் சந்தேகங்களைக் கிளப்புவேன். அவர் விளக்குவார். பள்ளி உலகினின்றும் முற்றிலும் வேறுபட்ட உலகம் ஒன்று இருப்பதாகவும், அது தான் வாழ்க்கை என்ற உலகம் என்றும்; அவருடன் பரிச்சயம் ஏற்பட்ட பின்னுட்களில் உணர ஆரம்பித்தேன். வெறும் கல்வியை மட்டும் அவர் போதிக்க வில்லை. வாழ்க்கை, அநுபவம் இரண்டையும் கலந்தே போதித்தார். அவ்வப்போது அறிவியல் நூல்களும், அழகிய கதைகளைக் கொண்ட புத்தகங்களும் அளித்தார். அவர்

திருகு பொம்மை!



"தக்க சமயம் வந்ததும் நான் மீண்டும் வட கொரியாவுக்குள் பாய்வேன்" என்று தென் கொரியாத் தலைவர் ஸிங்-மென்-ரீ கூறியிருக்கிருர்.

பாரதி வாக்கு—3

எங்கிருந்தோ வந்து இவ்வுலகில் சில நாள் வாழ்கிறோம். செத்த பிறகு நம்முடைய கதி என்ன ஆகுமோ? கடவுளுக்குத்தான் தெரியும். மூன்றே முக்கால் நாழிகை உயிர் வாழ்வது சந்தோஷத்துடன் இருந்து விட்டுப் போகக் கூடாதா? அடடா! இந்தப் பூமியில் மனித உயிருக்கு எத்தனை கஷ்டம்! எத்தனை பயம், எத்தனை இடையூறு, எத்தனை கொலை, எத்தனை துரோகம், எத்தனை பொய், எத்தனை கொடுமை, எத்தனை அநியாயம்! ஐயோ பாவம்!

அடா மனிதர்களே, எத்தனை சாஸ்திரங்களுக்கும், ஆக்கினைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் நம் மனிதர் உட்பட்டிருக்கவில்லையா? ஒரு புதுக் கட்டுப்பாடு செய்து கொள்வோமே. அந்தக் கட்டுப்பாடு யாதெனில், ஒருவருக்கு ஒருவர் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை. ஒருவருக்கு ஒருவர் பயப்படல் இல்லை. மானிடரே இவ் விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இது பிழைக்கும் வழி.

அறிவும், குணமும், என்னை மயக்கின. அவர் அழகும், அன்பும் என்னை ஆட்கொண்டன. அவர் கூறும் எந்த வார்த்தையையும் தெய்வ வாக்காகவே மதித்தேன். எனது பணிவன்பு, ஆர்வம், பக்தி, இவை யெல்லாம் என்பால் அவருக்கு ஓர் பிடிப்பை ஏற்படுத்தியது.

இப்படி வளர்ந்து வந்த அன்பு என்று காதலாக மாறிற்று என்பது எங்களுக்கே தெரியாது. அன்பு மொழிகள் படிப்படியாகக் காதல் மொழிகளாக உருமாறின.

ஆனால் அடுத்த கணமே, சாந்தம் தவழும் அவருடைய முகம், முறுவலிக்கும் உற்சாகம் பொங்கிய அவர் உதடுகள், எதையும் தன்னோடு இணங்க வைக்கும் காந்தசக்தி பொருந்திய அந்தக் கண்கள், வாழ்நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றும் அவரது அன்பு மொழிகள், இத்தனையும் நினைவுக்கு வரும்.

தவத்தின் எல்லைக்கே போய் விட்டால் தானென்ன! அவருடன் கூடச் சேர்ந்து தானே செல்கிறோம் என்று எண்ணுவேன்! அவருடன் கூடச் சேர்ந்து சென்றால்! நரகத்தையும் கூடச் சொர்க்கமாக மாற்றி விடலாம்; மாற்றி விட முடியும் என்ற உறுதி கொள்வேன்.

இப்படியாக வளர்ந்து வந்த எங்கள் நட்பு இல்லை; இல்லை! அன்பு! ஏன்! காதல் என்றே தெளிவாகக் கூறி விடவேண்டியது தானே!— தடைப்படும் கட்டத்துக்குத் திடுதிப்பென்று வந்து விட்டதை உணர்ந்தேன்.

ஆம்! நான் பூப்பெய்தினேன்! பாரதத்தின் பண்பு; ரிஷிகளுக்கு வம்சம் வம்சமாக கிடைத்த வரப்பிரசாதம் பெண்கள் பருவமடைந்தவுடன் ஒருவாறு கட்டுப்படுத்தப் படுதல் தானே! முன் போல் இஷ்டப்படி இப்போது நான் வீட்டை விட்டு வெளிச் செல்ல இடமாது. துணையோடன்றி எங்கும் போக முடியாது. அந்நிய ஆடவர்கள் முகம் பார்த்துப் பேசக் கூடாது. மனித குலத்துக்கு ஓர் உன்னதத் தன்மை ஏற்படச் செய்ய வேண்டு மென்றே வகுத்த கட்டுப்பாடு. இத்தகைய கட்டுப்பாட்டை நான் மட்டும் புறக்கணித்து விட முடியுமா!

நான் கூட ஓரொரு சமயம் நினைப்பதுண்டு. 'எனக்கு மட்டும் இறக்கைகள் இருந்தால், பறந்தோடிச் சென்று அவரைப் பார்த்து வந்து விடலாமே!' என்று. எங்களைப் பிரித்து வைத்த அந்தக் கட்டுப் பாட்டின் மகிமை போகப் போகத்தான் எனக்கும் விளங்கிற்று!

ஒரு வகையில் பிரிவின் வேதனை என்னை வாட்டினாலும் பிரிவின் காரணமாக ஏற்படும் புத்தம் புதிய நினைவுகள் கடந்ததையும் இனி வரப் போவதையும் நினைந்து நினைந்து அனுபவிக்கும் ஆனந்தம் இவைகளுக்கெல்லாம் காரணம் கட்டுப்பாடுதானே!

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் கூட்டம்' என்று ஆண் தான் பாடமுடியுமே ஒழிய, அநுபவித்த பெண் பாட முடியாது! பிரிவு, எங்கள் நட்பில் மேலும் இறுக்கம் கொடுத்தது. அன்பு பெருக்கெடுத்தோடியது. ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாததினால், மேலும் மேலும், ஆசையும், ஆர்வமும்தான் அதிகரித்தது.

அந்தப் பால்ய நினைவுகளில் குறிப்பிடப்பட வேண்டியது, இதுவெல்லாம் அல்ல! தைரியமாக எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். காவியமயமான நீண்ட அக் கடிதத்தில்.—

"உன்னைத் தவிர என் வாழ்வை வளம் பெறச் செய்ய வேறு யாரும் இல்லை. நீ இன்றேல் என் வாழ்வும் இல்லை. என் உள்ளத்தில் உன் ஒருத்திக்குத்தான் இடம். அங்கு வேறு எவருக்கும் இடமில்லை. உன் இடத்தை நீ நிரப்பா விட்டால், பின் அங்கு எல்லையற்ற சூன்யம் தான் தாண்டவமாடும்."

என்ற வாக்கியங்கள்தான் என்னை மிகவும் கவர்ந்தது. எத்தனை தடவை அக்கடிதத்தைப் படித்தேனோ! எத்தனை எத்தனை அன்பு முத்தங்கள் பொழிந்தேனோ! எனக்கே தெரியாது!

என் உள்ளத்தை யெல்லாம் அப்படியே திறந்து காட்டி நானும் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். எழுதினேனா! கிறுக்கினேன்!

"வெட்கத்தை விட்டு எழுதுகிறேன்! நீங்கள்தான் என் தெய்வம்! தெய்வத்தின் அருளுக்குப் பக்தை காத்திருக்கிறேன். என் தெய்வம் என்னைத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். என்னைக் கைவிட்டுவிட மாட்டீர்களே!"

அந்தக் கிறுக்கல் கடிதத்தை இன்னும் பத்திரமாக வைத்துப் பாதுகாக்கிறார்! இன்றுங்கூட அக்கடிதத்தைப் படிக்கிறாராம்!

என்னென்ன பாடுபட்டோ எங்கள் எண்ணம் பூர்த்தியாயிற்று. ஓர் சுப தினத்தில் எங்களுடைய விவாகம் இனிதே நடைபெற்றது.

மூன்று ஆண்டுகள் வாழ்ந்தோம். அந்த மூன்று ஆண்டுகளுடன், இந்த உலகில் பிரளயம் ஏற்பட்டு, அழிந்து போயிருக்கக் கூடாதா! அப்படி ஆகியிருந்தால், இந்தக் கொடிய வேதனை ஏன்!

எனக்குத்தான் எத்தனை கொடிய அபாயம்! என் வாழ்க்கையின் வேதனைக்காக உலகைச் சபிக்கிறேனே! உலகில் மனித குலம் என்றுமே ஒருபகுதி ஆனந்த உலகிலும்; பிறிதொரு பகுதி துன்ப உலகிலும் இப்படியாக மாறி மாறி வந்து கொண்டுதானே இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் நான் ஒரு துரும்பு!

மூன்றாண்டு வாழ்க்கைக்கு முத்திரை இடுவது போன்று, எனக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்து விட்டது. அப்பப்பா! நான் பட்ட வேதனை!

ஆனால், அதை யெல்லாம் மறந்துவிடத் தயாராய்த்தான் இருந்தேன்! அடுத்த நிமிஷத்தில் ஓர் பொன்னோடு என் கையில் மின்னும் என்ற இன்ப நினைவினால் எத்தனை கொடிய வேதனையையும் சகித்துக் கொள்ளச் சித்தமானேன்!

கடவுளின் எண்ணம் வேறு விதமாக இருந்தது போலும்! டாக்டர் வந்தார்; நர்ஸ் முதலிய பரிவாரங்கள் புடை சூழ்ந்தன. கடைசியில் ஆயுதம் போட்டுத்தான் குழந்தையை வெளியே எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். இதைக் கேட்டவுடன் எனக்கு மயக்கம் போட்டுவிட்டது.

என் நினைவு வந்தது. டாக்டர் அவரிடம்—என் கணவரிடம் தான்—பேசிக் கொண்டிருந்தார். கனவு போல் என் காதில் விழுந்தது.

"பெரிய உயிரைக் காப்பாற்றி விட்டேன். கலங்காதீர்கள்......!"

அவ்வளவுதான்! மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டேன். எனக்கு ஆறுதலளிக்க வென்றே என் வயிற்றில் தங்கி நின்ற பாலகனை; டாக்டர் உள்பட எல்லோரும் சேர்ந்து கொன்று விட்டார்கள் என்ற நினைவுதான் என்னை மீண்டும் மயக்கத்தில் தள்ளி விட்டது.

அன்று படுக்கையில் விழுந்தவள்தான்! இரண்டு நீண்ட வருடங்கள்; நோயும் படுக்கையும் தான் என் தினசரி அலுவல்களாகக் கழிந்து விட்டன. என்னைத் தள்ளி விடலாம்! நான்தான் துன்பப்படவென்றே, துயரத்தை அனுபவிக்க வேண்டுமென்றே பிறந்தவள் ஆயிற்றே!

அவருக்குத்தான் எத்தகைய நரக வாழ்க்கையை நான் கொடுத்திருக்கிறேன்! மீண்டும் அவருடைய வாழ்க்கையில் நம்பிக்கை உதயமாகுமா! என்னால் இனிமேல் அவருக்கு என்ன பிரயோசனம்! என் வாழ்வையும், அவர் வாழ்க்கையையும் தொலைத்து விடக் காரணமாக அமைந்து விட்டேனே!

* * *

இன்று பல வருடங்கள் கழிந்து விட்டன. ஐந்து குழந்தைகள் என்னைச் சுற்றிச் சுற்றி "அம்மா! அம்மா!" என்று அழைக்கும் இன்ப ஒலி என் காதில் பாய்ந்து கொண்டே இருக்கிறது. வேதனையைத் தந்த அந்த நாட்கள் மறைந்தே விட்டனே. ஏன்! அவற்றை அடியோடு மறந்து விட்டேன் என்றே கூறலாம்!

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் போலும்! நம்பிக்கை இழந்துவிட்ட என் வாழ்வில், மீண்டும் ஜீவன் உதயமாகி விட்டது. பிணியில் கிடந்த அந்த நாட்களில் நான் எண்ணிய எண்ணங்களை அவரிடம் கூறுவேன்! அவர் நினைத்தவைகளை என்னிடம் கூறுவார்! சிரித்து மகிழ்வோம்! இப்படியாகப் பத்து ஆண்டுகள் பறந்து ஓடி விட்டன!

இன்று அந்த வேதனை நிறைந்த சம்பவங்கள் தேய்ந்து கனவாகி மறைந்து விட்டன!

இதிலுமா கறுப்பு மார்க்கெட்?

1954-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்தல் சோதனை விவரம் வெளியாகி விட்டது. அதைக் கண்டு நானோ அல்லது எந்த ஆசிரியரோ திடுக்கிடாமல் இருப்பதற்கு இல்லை. காரணம் தேர்வு சத விகிதம் குறைவு மட்டுமல்ல. நிச்சயம் வெற்றி எதிர்பார்த்தவன் இடிந்து உட்காருவதும் இல்லாத கறுப்பு மார்க்கெட் செய்து ஜயம் பெற்றவன் (இதில் இரு சாரார் ஆசிரியரும் மாணவர்களும்) நிமிர்ந்து நிற்பதும் பார்க்கவே கண் கூசுகிறது.

எட்டாம் வகுப்பில் ஒரு மாணவன் பொதுப் பரீட்சை எழுத உட்காருகிறானென்றால் அவன் அதற்கு முன்னால் ஒரு பள்ளியிலுள்ள ஒரு அல்லது பல ஆசிரியர்களிடம் நாளெல்லாம் கல்வி பயின்றிருக்க வேண்டும். ஆகவே, அவனது நடத்தை, குணம், தேர்ச்சி விவரம், பழக்க வழக்கங்கள், பொது அறிவு எல்லாவற்றையும் அப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் பூரணமாய் அறிவார்கள். அவனது குறைகளையும் கண்டு நிறை செய்ய அவர்களால்தான் இயலும்.

இவ்வாறிருக்க, சர்க்காரால் இளம் பாலர்களுக்குப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தி எங்கோ இருக்கும் ஒரு ஆசிரியர் பையனுடைய விடைத்தாளை அரை மணி நேரத்தில் அலசுவதைக் கொண்டு அவனது ஆயுளையே சரிக்கட்டுவதென்பது உண்மையில் பைத்தியக்காரத் தனமாகவே தோன்றுகிறது. உதாரணத்துக்கு எங்கள் பள்ளியை எடுத்துக் கொள்ளுங்கள். 1954-ம் ஆண்டு பொதுப் பரீட்சைக்குச் சுமார் 19 மாணவர்களை அனுப்பியிருந்தோம். மேற்படி 19 மாணவர்களில் நிச்சயமாய் 12 பேர் வரை தேர்வு பெறக் கூடியவர்கள். மீதமுள்ள 6 பேர்களில் இருவர் சந்தேகத்துக் கிடமானவர்கள். ஆக நாங்கள் தேர்வு 14 மாணவர்களுக்கு எதிர்பார்த்தோம்.

ஆனால் தேர்வு கிடைத்தது 5 பேருக்குத்தான். இதில் பெரிய ஆச்சரியம், நிச்சயமாய்த் தோல்வி எதிர்பார்த்த 6 பேர்களில் 2 பேர் தேர்வில் வெற்றி பெற்றிருப்பதும், வகுப்பில் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு முடிய ஒவ்வொரு பாடத்திலும் முதல் மார்க் வாங்கிப் பள்ளிக்கே எடுத்துக் காட்டாக விளங்கிய மாணவன் ஒருவன் தோல்வியடைந்திருப்பதும் தான்!

இப் பொதுப்பரீட்சை மாணவர்களுக்கா, ஆசிரியர்களுக்கா வென்பது புலனாகவில்லை. காப்பி அடிக்கும் பழக்கங்களை ஒரு பள்ளி மாணவன் செய்தால் அதை நாம் கண்டிக்கலாம்; லேசாயும் மன்னிக்கலாம். ஆனால் இதை ஆசிரியர்களும், அதிகாரிகளும் செய்தால் என்ன செய்வது!

பொதுப் பரீட்சை நடத்துவதற்கு ஒரு தாலுகாவில் நாலைந்து இடங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். ஒவ்வொரு இடத்திலும் சுமார் பத்துப் பன்னிரண்டு பள்ளிகள் இருக்கும். அந்தந்தப் பள்ளி தலைமை ஆசிரியர்களைப் பரீட்சை கண்காணிக்கும் அதிகாரிகளாக நியமிப்பார்கள். இங்குதான் கறுப்பு மார்க்கெட் வேலை செய்ய இடம் கிடைக்கிறது. கறுப்பு மார்க்கெட் தலைமையாசிரியர்களுக்குள் ஒரு கூட்டம் நடைபெறும். எந்தெந்த அறையில் யார் யாரைப் போடுவது என்று முடிவாகும். 'அதாவது என்னுடைய பள்ளி மாணவர்களுக்குக் கிடைத்த பரீட்சை கண்காணிக்கும் அதிகாரிகள் என் மாணவர்களுக்கு விடை சொல்லித் தருவதோடு புஸ்தகங்களை அப்பட்டமாய் வைத்து எழுதுவதற்கு அனுமதிக்க வேண்டும். நானும் அவரது மாணவர்களுக்கு அனுமதிக்க வேண்டும். கொஞ்சம் மனச் சாட்சியுள்ள தலைமையாசிரியர்களை இந்தக் கூட்டு மோசடியில் சேர்க்க மாட்டார்கள். இதில் அதிகாரிகளுக்கும் வேறு வழியில் லாபம் இருப்பதால் இந்தச் சதிக்கு

உடந்தையா யிருப்பார்கள். இதன் மூலம் போலி தலைமை யாசிரியர்களுக்குச் சமூகத்தில் சற்று அந்தஸ்து உயரும். மாணவனுக்குத்தான் அவரது போலித்தன்மை தெரியும். சமூகம் அவரைத் திறமையான ஆள் என்று கருதும்.

ஆனால் உண்மை நிலை என்னவென்பதைச் சர்க்கார் உணர வேண்டும். குறிக்கோள் வெறும் தேர்வல்ல; திறமை. மேற்கண்ட பரீட்சை வகைகள் நீடித்தால் வருஷத்துக்கு வருஷம் கறுப்பு மார்க்கெட் புது உருவம் எடுக்கும். அது கல்விக் கழகங்களுக்கு நாளடைவில் அழியாக் கறையை உண்டாக்கும். பரீட்சை ஒரு பிசாசு. இது ஆதியில் மாணவனைப் பிடித்து ஆட்டியது. தற்போது தலைமை ஆசிரியர்களைப் பிடித்து ஆட்டுகிறது. இதிலிருந்து நாம் விடுதலையடைய வேண்டுமானால் முதலில் பொதுப் பரீட்சை ஒழியவேண்டும். பிள்ளைகளுக்குப் பள்ளியிலிருந்து சர்டிபிகேட் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். நாளெல்லாம் மாணவனோடு பழகி அவனது திறமையை வளர்த்து வரும் ஆசிரியன் அறியாததை ஒருநாள் பரீட்சை மூலம் எப்படி அறிய முடியும்! சர்க்கார் நன்றாக இதைச் சிந்தித்து விரைவில் ஆவன செய்ய வேண்டும். இல்லையேல், இளம் மாணவர் கூட்டம் பரீட்சைப் பலிபீடங்களில் பலியாக்கொண்டேயிருக்கும்.

மதுரை
10—8—54 ஓர் ஆசிரியன்

[பரீட்சை முறை நல்ல கல்விப் பயிற்சிக்கு உகந்ததல்ல என்பது ஒருபுறமிருக்க, அதன் மூலம் விளையும் ஒழுக்கக் கேடுகளை மேற்படி கடிதம் நன்கு விளக்குகிறது. உத்தரப் பிரதேசத்திலிருந்து சென்ற வாரம் வந்த செய்திகளையும் இத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இக்கடிதம் எழுதிய ஆசிரியர் பெயரும் விலாசமும் தந்திருக்கிறார். வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருப்பதால் இங்கு வெளியிடவில்லை. —ஆசிரியர்]

படித்துப் பாருங்கள்!

South Rail News

கடந்த நூறு வருஷ காலமாக ரயில் வண்டிகள் நம் வாழ்வில் முக்கிய பங்கு பெற்று விட்டன. உயிர் வாழ்வதற்கு மூச்சுக் காற்றுமாதிரி ரயில் வண்டிகளும் இன்றியமையாததாகி விட்டன. ரயில்வே நம் பாரத தேசத்தின் அரும் பெரும் செல்வம். அச் செல்வத்தின் அபிவிருத்தி, நம் பாரத தேசத்தின் அபிவிருத்தி; மனித குல நாகரிகத்தின் அபிவிருத்தி.

சுதந்திர பாரதத்தில் நம் ரயில்வேயைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள யாவருக்கும் ஆவல் இருப்பது இயல்பு. மேற்படி விவரங்கள் இப் பத்திரிகையில் விரிவாகக் காணப்படுகின்றன. இது தக்ஷிண ரயில்வே நிர்வாகக் குழுவினரால் நடத்தப்படும் ஆங்கில மாதப்பத்திரிகை. தக்ஷிண ரயில்வேயைப் பற்றிய சரித்திரச் சுருக்கம் படிக்கச் சுவாரஸ்யமாயிருக்கிறது. மற்ற கட்டுரைகளும் சுவையுடன் புனையப்பட்டிருக்கின்றன.

Edited and published by T. S. Parthasarathy, Public Relations Officer, Southern Railway Madras - 3. Price: Single copy 4 As.

நிலவினிலே

சமீப காலத்தில், தமிழில் ஏராளமான சிறு கதைகள் வெளி வந்து விட்டன. அவைகளின் எண்ணிக்கையைக் கூறுவதோ, தரம் கண்டு பிடித்துக் கூறுவதோ சிரம சாத்தியமான காரியம். ஆனால், எண்ணிறந்த கதைகள் வெளி வந்தும், தரம் குறையாமல் சுவை குன்றாமல் கதை இயற்றும் திறனைச் சில எழுத்தாளர்கள் அறிந்து பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வரிசையில் இந்நூலாசிரியரையும் சேர்க்க வேண்டும்.

இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள பதினாலு சிறுகதைகளும் பல்வேறு கருதிகளில் அமைந்து படிப்பவர்களுக்குச் சுவை யூட்டுகின்றன. சோகம், நாட்டம், அன்பு, பிரிவு, பரிவு, ஏக்கம், மகிழ்ச்சி முதலிய பலதரப்பட்ட உணர்ச்சிகள் கதைகள் செல்லும் பாதைகளிலெல்லாம் பெருகி ஓடுகின்றன. கதைகள் ஒன்றுக்கு ஒன்று சளைக்காமல் தரத்திலும் உயர்ந்து நிற்கின்றன.

உதாரணத்துக்கு ஒரு கதை:

கிராமத்துக்குச் சென்றிருந்த சாமிநாதன் அங்கு கண்ணம்மாவைச் சந்தித்தான். அவன் பார்வையில், பேச்சில் மனம் பறி கொடுத்தான். அவன் உள்ளப் போக்கை உணரவில்லை அவள். குழந்தை உள்ளத்தோடு பழகினாள். ஒரு நாள் அவன் அவள் கைகளில் மலர்களை அள்ளி வைத்து மகிழ்ந்தான். அவன் மனம் அறியாத அவள் மலர்களைக் கீழே கொட்டினாள். உடனே பிறந்தது கோபம் அவனுக்கு. அவன் கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை கொடுத்தான். அப்புறம் நிகழ்ந்தது என்ன! இந்நூலாசிரியர் கூற்றையே படிப்போம்.

"கன்னத்தில் ஒன்று விழுந்ததம்மா—பொல்லாக்
காதலோ காதல் பிறந்ததம்மா!
மென்மையான என்றன் உள்ளத்திலே—அது
மொட்டாய்ப் பிறந்து மலர்ந்ததம்மா!"

இது "காதல் பிறந்த கதை"யில் வருகிறது. ஆசிரியர் சின்ன நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு சிறு கதையைப் பிரமாதமாக்கி விட்டார். இம்மாதிரி இந்நூலிலுள்ள மற்றக் கதைகளிலும் சுவையும் நயமும் பொங்குகின்றன.

எழுதியவர்: அகிலன்; பிரசுரம்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக் கோட்டை; விலை: ரூ. 1—4—0.

பணம்

"பணம் உண்டானால் மணம் உண்டு" "பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை" என்னும் பழமொழிகள் உண்மையில் நம் வாழ்வில் பழகிப் போன மொழிகள். இத்தகைய மதிப்புக்கு உரிய பணத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

பணத்தின் பெருமை, பணம் என்றால் என்ன! பணத்தின் தோற்றம், பண்டமாற்று, பணத்தின் வரன் முறை, உலோகப் பணம் இப்படி அடியிலிருந்து விஷயத்தை ஆரம்பித்துப் பணத்தைப் பற்றி மொத்தமாகவும் சில்லறையாகவும், சகல விவரங்களும் சாங்கோபாங்கமாக அலசப்பட்டிருக்கின்றன. இந் நூலின் கடைசியில் கலைச் சொல் அகராதி ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் நாணயச் செலாவணியைப் பற்றிய சொற்களுக்கெல்லாம் ஆங்கிலத்தில் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பயன்படக் கூடியது. எழுதியவர்: ரெ. சேஷாசலம் எம். ஏ.; பிரசுரம்: சிந்தனைப் பதிப்பகம், 27. பேர்தியன் ரோடு, சென்னை - 8; விலை ரூ 1—8—0.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.


க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
"ஸன்லைட் சோப் உபயோகித்து சலவை செய்யும் பொழுது அழுக்கு துணிகளிலிருந்து எவ்வளவு சுலபமாக திரண்டு வெளிவருகிறதென்று பாருங்கள். கைக்குட்டை முதல் படுக்கை விரிப்பு வரை எல்லா வெள்ளைத் துணிகளும் சில நிமிடங்களில் புதிது போல் வெண்மையாவதைப் பாருங்கள். அன்றியும் ஸன்லைட் அவைகளை நீடித்திருக்கச் செய்கிறது.
"கலர் துணிகளை பிரகாசமாகவும், கவர்ச்சியாகவும் சலவை செய்ய ஸன்லைட் சோப்பைப்போல் வேறெதுவுமில்லை என்பதை பசுமரத்து ஆணிபோல் மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். க்ஷணத்தில் பொங்கி வரும் நுரை அடித்துத் துவைக்காமலே அழுக்கை அகற்றி, வர்ணத் துணிகளை துலக்கச் செய்கிறது.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளைக் காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது
S. 222-50 TM
இந்தியாவில் தயாரித்தது

REGISTERED No. M. 4392

Registered as a newspaper in Ceylon